ஆவியின் வல்லமை

DUNAMIS

V. எசேக்கியா பிரான்சிஸ்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* **இலவசமாக (மத்தேயு 10:8)** உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வழியில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely ***free of cost (Matt 10:8)*** *forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

டுனாமிஸ்

By

V. எசேக்கியா பிரான்சிஸ்

பிரசுரிப்பவர்:-

பெராக்கா தீர்க்கதரிசன ஊழியங்கள்

81, 4வது குறுக்குத் தெரு, செந்தில் நகர்,

கொளத்தூர், சென்னை-600 099

✆: 004-26501290, 26501390

© Berachah Prophetic Ministries, Chennai

முதல் பதிப்பு : ஜூலை, 1991
இரண்டாம் பதிப்பு : மே, 1993
மூன்றாம் பதிப்பு : நவம்பர், 1995
நான்காம் பதிப்பு : ஏப்ரல், 2000
ஐந்தாம் பதிப்பு : செப்டம்பர், 2007
ஆறாம் பதிப்பு : பிப்ரவரி, 2010

Contact Address

BERACHAH PROPHETIC MINISTRIES
Plot No. 81, 4th Cross Street
Senthil Nagar, Kolathur
Chennai - 600 099
Phone : +91 -44 - 2650-1290
+91 -44 - 2650-1390
+91 -44 - 2650-1490
Email : info@ezekiahfrancis.org
Website : www.ezekiahfrancis.org

Printed at Kalos Offset Division, Chennai - 88 ✆ : 22670808

பொருளடக்கம்

	முன்னுரை	7
	டுனாமிஸ்	9
செய்தி–1	என் கண்களைத் திறந்தருளும்!	13
செய்தி–2	அற்புத ஊழியர்கள் எங்கே?	30
செய்தி–3	இயேசுவின் இறுதிக் கட்டளை	52
செய்தி–4	விடுதலையின் ஊழியம்	75
செய்தி–5	விடுதலை வீரர் தேவை!	101
	மனம் திறந்து உங்களோடு ...	115

இப்புத்தக மறுப்பதிப்பிற்கு உதவி செய்த
நமது அருமை சகோதரன்
Dr. டேவிட்ராஜா,
Dr. David Raja campus, Tirupathur
அவர்களையும், அவர்களின் தொழிலையும்,
அவர்தம் குடும்பத்தினரையும்
கர்த்தர் ஆயிரம் மடங்கு ஆசீர்வதிப்பாராக.....
இப்புத்தகத்தினால் வரும்
ஆசீர்வாதங்கள் அவர்களது கணக்கில்
எழுதப்படுவதாக...
இவர்களுக்காக
தேவனைத் துதியுங்கள்...

முன்னுரை

அன்பானவர்களே! இப்புத்தகத்தின் மூலம் எனது மனதின் ஆழத்தில் கனன்று கொண்டிருந்த பாரங்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அகில உலகிலும், ஆவியானவர் தமது வல்லமையான கிரியைகளை மீண்டும் வெளிக்காட்டத் துவங்கி விட்டார். இன்று அற்புத அடையாளங்களோடு தேவவசனத்தை உறுதிப்படுத்தி பிரசங்கிப்பதுதான், உலகை உன்னதரிடம் வழி நடத்த ஒப்பற்ற ஒரே வழி என்பதை பலர் உணரத்துவங்கி விட்டனர்.

தேவ ஆவியானவர் நமது அருமைச் சகோதரன் திரு. ஜேம்ஸ் ஜெயகர் அவர்களுக்கு இவ்வித பாரத்தை அருளியிருக்கிறார். மதுரை மாவட்ட மக்கள் பரிசுத்த ஆவியானவரின் நிறைவுக்குள் வந்துவிட வேண்டும் என்பதே அவரது தணியாத பாரம் என்பதை நான் அறிவேன்.

திரு. ஜேம்ஸ் ஜெயகர் அவர்களது அயராத பெருமுயற்சியின் விளைவாக டுனாமிஸ் (வல்லமை) முகாம் கடந்த இரண்டு ஆண்டுகளாக மதுரை மாநகரத்தில் நடத்தப்பட்டு வருகிறது. அம் முகாமில் நான் கலந்து கொண்டு கொடுத்த செய்திகள்தான், உங்கள் கரங்களில் இப்பொழுது `டுனாமிஸ்—புத்தகமாக திகழ்கின்றது. இது குறித்து தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

இப்புத்தகத்தை ஒலிநாடாவிலிருந்து எடுத்தெழுதி புத்தக வடிவில் கொண்டுவரப் பாடுபட்ட சகோதர சகோதரிகளை இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகின்றேன்.

இப்புத்தகம் வெளிவர ஜெபத்தாலும், பொருளாலும் உதவி செய்த நமது அருமைச் சகோதரன் S.P.S.சம்பத்ராஜ் (சாத்தான்குளம்) அவர்களையும், குடும்பத்தினரையும் கர்த்தர் ஆயிரம் மடங்கு ஆசீர்வதிப்பாராக. இப்புத்தகத்தினால் வரும் ஆசீர்வாதங்கள் அவர்களது கணக்கில் எழுதப்படுவதாக. இவர்களுக்காக தேவனைத் துதியுங்கள்.

இதுபோன்றே நான் ஆங்காங்கே வழங்கிடும் செய்திகளையெல்லாம் புத்தகவடிவில் வெளிக்கொணர பிரயாசைப்படுகிறோம். உங்கள் ஜெபங்களும் ஒத்துழைப்பும் எங்களுக்கு அவசியம் தேவை.

இப்புத்தகத்தில் உள்ள செய்திகள் நல்ல தலைப்புகளுடன், அழகாக பேசப்பட்ட பிரசங்கங்கள் அல்ல. உள்ளத்து பாரத்தை, ஒளிவு மறைவு இல்லாமல் நான் பேசியதை அப்படியே எழுத்துவடிவில் படைத்து உங்களிடம் `**ஆவியானவரின்** குரலாக' அனுப்பிவைக்கின்றேன்.

திறந்த மனதோடும், தியானச் சிந்தையோடும், இதை `ஆவியானவரின் அருள் கொடையாக மதித்து ; எடுத்து வாசிப்பீர்களேயானால் நிச்சயம் அளவில்லா ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுவீர்கள். உங்களது வாழ்விலும், சேவையிலும் தேவனுடைய வல்லமை (டுனாமிஸ்) வெள்ளமெனப் பாய்ந்து ஓடும். உங்களுக்குள்ளிருக்கும் (டுனாமிஸ்) வல்லமை ஆசீர்வாத வாய்க்காலாய் ஓடி நீங்கள் செல்லுமிடங்களை செழிப்பாக்கும் என்பதில் சந்தேகம் வேண்டாம்.

சென்னை

உங்கள் அன்பு சகோதரன்

5.7.91

V.எசேக்கியாபிரான்சிஸ்

மதிப்புரை

இன்றைய ஆவிக்குரிய உலகத்திற்கு அதி அத்தியாவசியமான
இப்புத்தகத்திற்கு மதிப்புரை எழுதுவதில் பெருமகிழ்ச்சி அடைகி
றேன்.

என் இதயம் கவர்ந்த ஊழியர்களில் சகோதரர் எசேக்கியா
பிரான்சிஸ் அவர்கள் ஒருவர். இன்று தமிழ்நாட்டிலும், வெளிநாடுகளி
லும் அவர்களைக் கொண்டு, தேவமக்கள் மத்தியில் ஆவிக்குரிய
உயிர்மீட்சியை தேவன் எழுப்பி வருவதை அறியாதவர் இருக்க
முடியாது. அநேகமுறை அவருடன் தனிப்பட்ட முறையிலும், ஊழி
யங்களிலும் பங்கு பெற்றிருக்கிறேன். அவருடன் உறவாடிய அந்த
நேரங்கள் எனக்கு மிகுந்த பயனுள்ளதாயிருந்தது.

டுனாமிஸ் –ஆவிக்குரிய உலகிற்குத் தேவனுடைய படைப்பாயி
ருக்கிறது. அற்புத அடையாளங்களின்றி ஆண்டவரின் பணி
முழுமை பெறாது என்ற தனது தணியாத பாரத்தை இப்புத்தகத்
தின் மூலமாக ஆசிரியர் வெளிப்படுத்திக்காட்டியிருக்கும் முறை
குறிப்பிடத் தகுந்தது. வல்லமையும், அதிகாரமும் தேவன் நமக்கு
கொடுப்பதின் நோக்கமே அற்புத அடையாளங்கள் மூலம் புறஜா
தியாரை கீழ்ப்படியப்பண்ணவும், நம்முடைய விசுவாசம் உறுதிப்
படவும்தான். அதிகாரம் மட்டுமல்ல வல்லமையும் அவ்வளவு அவசி
யமானது. ஒரு சம்பவம் படித்த நினைவு வருகிறது. ஒருமுறை அர
சாங்க சர்வேயர் ஒருவர் ஒரு குறிப்பிட்ட குடியானவனுடைய
பெரியதோட்டத்துக்குச் சென்று தன் கருவிகளை உபயோகித்து
அளவுகளை எடுக்க முயற்சித்தார். தோட்டக்காரர் முதலில் மறுத்
தபோது தன்னுடைய அரசாங்க அதிகாரங்களுக்கான நகல்களைக்
காட்டி அனுமதி பெற்றார். பின் தோட்டக்காரர் தோட்டத்திற்கு
மறுபக்கம் போய் தன்னுடைய மூர்க்கமான காளையை அவிழ்த்து
விட்டார். அது வருவதைப் பார்த்த சர்வேயர் சத்தம் போட்டார்.
அங்கிருந்து குடியானவன் சொன்னார். அந்தக் காளையிடமும் உங்
கள் அதிகாரங்களுக்கான நகல்களைக் காட்டுங்கள். *'The Surveyor
had the Authority but had no Power to fight the bull'*. நம்
தேவன், விசுவாசிகள் யாவரும் அதிகாரமும், வல்லமையுள்ளவர்களா
கவும் இருக்கவே அழைத்திருக்கிறார். ஊழியர்மட்டுமல்ல,
எல்லாவிசுவாசிகளும் என்ற சகோதரர் எசேக்கியா பிரான்சிஸ் அவர்க
ளின் கருத்தை நான் முழுக்க, முழுக்க உறுதிப்படுத்துகிறேன்.

நம்முடைய தேவன் அற்புத அடையாளங்களின் தேவன். ஆதி
முதல் வேதம் அதை தெளிவாக எடுத்துரைக்கிறது. மோசேயை
எகிப்துக்கு அனுப்பும்போது அடையாளங்களோடு அனுப்பி பார்
வோனைப் பணியவைத்தார். எலியாவின் அற்புத அடையாளங்

களை இரட்டிப்பாய்ச் செய்ய எலிசாவுக்கு இரட்டிப்பான அபிஷேகம் கொடுத்தார். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் ஊழியம் அற்புத அடையாள ஊழியம். புதிய ஏற்பாட்டு சபையின் ஊழியம் அற்புத அடையாள ஊழியமே. இதற்குத்தேவை தேவன்தரும் பரிசுத்த ஆவியின் வல்லமை. ஆதித்திருச்சபையில் அனைவரும் செய்தது அற்புத அடையாள ஊழியமே. ஆகவே நாற்பது ஆண்டுகளுக்குள் அவர்கள் அந்நாளில் அறிந்த உலகில் முக்கால் பாகத்தை சுவிசேஷத்தால் நிரப்பிவிட்டார்கள்.

இன்றைய *PRAYER HOUSE* எல்லாம் *POWER HOUSE* ஆக மாறுவதாக ! வல்லமை இல்லையென்றால் *POOR HOUSE* ஆக மாறவும் முடியும். ஆயிரம் பிரசங்கம் பண்ணி ஒரு ஆத்துமாவை இரட்சிப்படையச் செய்வதிலும் ஒரு அற்புதம் மூலம் ஆயிரம் பேர் இரட்சிப்படைவதே தேவன் விரும்பும் ஊழியம். இப்படிப்பட்ட ஊழியத்தில் இருபது ஆண்டுகளுக்கு மேல் நான் ஈடுபட்டிருப்பதால் புறஜாதியார் நிறைந்த இந்தியாவில் அற்புத அடையாள ஊழியமே சுவிசேஷம் பரப்புவதற்கு மிகவும் ஏதுவான, தேவையான ஊழியம் என்று திட்டமாய்க் கூறமுடியும்.

ஆகவே 'டுனாமிஸ்' என்ற தேவனுடைய வல்லமையைக் குறித்த காரியங்களை மிகத்தெளிவாகவும். திட்ட வட்டமாகவும் புத்தகவடிவில் படைத்த **சகோதரர் எசேக்கியா பிரான்சிஸ்** அவர்களைப் பாராட்டுகிறன். அவரால் படைக்கப்பட்ட இப்படைப்பு ஆவிக்குரிய உலகிற்கு ஒரு பெரிய சொத்தாகும் என்று கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

விசுவாசிகளும், ஊழியர்களும் இதைக் கருத்துடன் வாசித்து வல்லமையாக ஆண்டவருக்கு ஊழியம் செய்ய வாழ்த்துகிறேன். சுவிசேஷத்தை அற்புத அடையாளங்களோடு பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ! (1 கொரி. 9:16)

கர்த்தர்தாமே **சகோதரர் எசேக்கியா பிரான்சிஸ்** அவர்களை மேலும் ஆசீர்வதித்து இன்னும் தனது இதயத்தில் மறைந்து கிடக்கும் சத்தியங்களை பலப்பல புத்தகங்கள் வாயிலாக வெளிப்படுத்த கிருபை தருவாராக!

சென்னை
5-7-91

இவண்
பாஸ்டர் A. ஓவன் ராபர்ட்ஸ்
தலைமைப் போதகர்
நல்லசமாரியன் ஐக்கியம்

டுனாமிஸ்!

டுனாமிஸ்! டுனாமிஸ்! டுனாமிஸ்!

டுனாமிஸ் என்னும் கிரேக்கச் சொல்லுக்குத் தான் அர்த்தங்கள் [illegible] டைனமைட்டைப்போல தனக்குள்ளிருக்கும் சக்தியை தனக் [illegible] அபிவிருத்தி செய்யும் விசைக்குப் பெயர்தான் டுனாமிஸ்!

அழிக்கும் சக்தி கொண்ட வெடி குண்டு எனும் சொல்லுக்கு (டைனமைட்) மூலப் பதம்தான் டுனாமிஸ்! ஆம், சத்துருக்களின் கைகளை நிர்மூலமாக்கும் தேவ பெலன்தான் டுனாமிஸ்!

தேவனுடைய சர்வ வல்லமையிலிருந்து புரண்டு வரும் அற்புதங்கள், கிறிஸ்துவில் தங்கித் தாபரித்து அவரது சாட்சிகளுக்குள்ளும் ஊழியங்களுக்குள்ளும் புரண்டோடச் செய்யும் வல்லமைதான் டுனாமிஸ்!

ஆசிரியர் லூக்கா அடுத்தடுத்து பேசும் வார்த்தைதான் டுனாமிஸ். இந்த வார்த்தை வேதத்தில் எங்கெல்லாம் வருகிறது என்று பார்த்தால் அற்புதப் புரட்சி வெடித்துக் கிளம்பும்! ஆவி மனிதன் பெலன் கொண்டு எழுவான்!

அன்று கன்னி மரியாளைப் பார்த்து, காபிரியேல் தூதன், `பரிசுத்த ஆவி உன் மேல் வரும்; உன்னதமானவரின் பெலன் உன் மேல் நிழலிடும்' என்றானே, அந்த உன்னதமானவரின் பலம்தான் டுனாமிஸ்' (லூக்.1:35)

வனாந்தரம் விட்டு இயேசு ஆவியானவருடைய பலத்தினாலே கலிலேயாவிற்குத் திரும்பிப் போனார் அல்லவா? அந்த ஆவியானவரின் பலம்தான் டுனாமிஸ்! (லூக்.4:14)

கப்பர்நகூம் தேவாலயத்தில் அதிகாரத்தோடும் வல்லமையோடும் அசுத்த ஆவிகளுக்குக் கட்டளையிட்டு விரட்டினாரே, அந்தக் கட்டளையில் காணப்பட்ட வல்லமைதான் டுனாமிஸ்! (லூக்.4:36)

அன்றொருநாள் கிறிஸ்து உபதேசித்துக் கொண்டிருக்கையில் கட்டிலோடு கொண்டு வரப்பட்ட திமிர்வாதக்காரனை எழுப்பும் முன் அந்த வீட்டில், "பிணியாளிகளைக் குணமாக்கத்தக்கதாக கர்த்தருடைய வல்லமை விளங்கிற்றல்லவா? அந்த குணமாக்கும் கர்த்தருடைய வல்லமைதான் டுனாமிஸ்! (லூக்.5:17)

கிறிஸ்து தமது பன்னிரண்டு சீஷரையும் வரவழைத்து, சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்து அனுப்பினாரல்

லவா? அவர் அன்று கொடுத்த வல்லமைக்குப் பெயர்தான் டுனா மிஸ்! (லூக்.9:1)

மனுஷ குமாரன் மேகத்தின்மேல் மிகுந்த வல்லமையோடும் மகி மையோடும் தோன்றப் போகிறாரல்லவா? அந்த மிகுந்த வல்லமை தான் டுனாமிஸ்! (லூக்.21:26,27)

இன்றும் கிறிஸ்து சர்வ வல்லமையுள்ள தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறாரல்லவா? அந்த தேவனுடைய சர்வ வல் லமைதான் டுனாமிஸ்! (லூக்.22:69)

உயிர்த்தெழுந்த இரட்சகர் தமது சீடரைப் பார்த்து, நீங் களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றாரே. அந்த உன் னதத்திலிருந்து வந்த பெலன்தான் டுனாமிஸ்! (லூக்.24:49)

"பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலன டைந்து, பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப் பீர்கள் என்றாரே"–பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வந்தபோது நீங்கள் பெற்ற பெலன்தான் டுனாமிஸ்! (அப்.1:8)

அலங்கார வாசலண்டையில் அலங்கோலமாயிருந்த பிறவிச் சப்பாணியைக் குதித்தெழச் செய்தது தன்னுடைய சுயசக்தியில்லை, தேவனுடைய சக்திதானென்று சாட்சியிட்டானே பேதுரு! அது தான் டுனாமிஸ்! (அப்.3:12,6)

ஆதிச் சபை நாட்களில் அப்போஸ்தலர்கள் இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து மிகுந்த பலமாய்ச் சாட்சி கொடுத்தார் களே! அவர்கள் சாட்சியில் இருந்த மிகுந்த பலம்தான் டுனாமிஸ்! (அப்.5:33)

பந்தி விசாரணை செய்த ஸ்தேவான் விசுவாசத்தினாலும் வல் லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்பு தங்களையும் அடையாளங்களையும் செய்தான் அல்லவா? அவன் பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்யக் காரண மாயிருந்ததுதான் டுனாமிஸ்! (அப்.6:8)

சமாரியப் பட்டணத்தின் மாய வித்தைக்காரன் தன்னை தேவ னுடைய் பெரிதான சக்தி எனக்காட்டி வஞ்சித்தபோது, பிலிப்புவி லிருந்து அன்று வெளிப்பட்ட அற்புத சக்திதான் டுனாமிஸ்! (அப்.8:13) சுருங்கச் சொன்னால் ஜீவனுக்கும், தேவபக்திக்கும் வேண் டிய யாவற்றையும் நமக்கு அருளின திவ்விய வல்லமை தான் டுனா மிஸ்! (2 பேது. 1:3) இந்த டுனாமிஸ் என்னும் சொல் வேதம் முழுவதிலும் பரவலாகத் தென்படுகிறது. அவைகளை எல்லாம் எழு

தத் தொடங்கினால் ஏடுகள் போதாது. ஒரு சில குறிப்புகளை மட்டும் உங்களுக்கு எடுத்துக்காட்டியுள்ளேன்.

நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினாரல்லவா? அந்த வல்லமைதான் டுனாமிஸ்! (அப்10:38)

இந்த டுனாமிஸ் எனும் சொல் நமது தமிழ் வேதாகமத்தில்:

வல்லமை (லூக்.9:1)

திறமை (மத்.25:15)

பெலன் (அப்.1:8)

அற்புதங்கள் (மாற்.9:39; அப்.8:13; 19:11)

பலத்த செய்கை (மத்.11:20, 21, 23; 13:54, 14:2) என்று பல்வேறு விதங்களில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இந்த தெய்வீக வல்லமை, திறமை, பெலன், அற்புதங்கள், பலத்த செய்கைகள் அனைத்தையும் நமக்குள் கொண்டு வருபவர் தான் பரிசுத்த ஆவியானவர்!

இந்தப் பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவில் எதைச் செய்தாரோ, அதை நம்மிலும் செய்கின்றார் என்பதுதான் இச்செய்திகளின் ஒரே நாக்கம்!

பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் கண்களைத் திறந்தா . அது ஆவியானவர் அருளும் தனித் திறமை இந்த திறமையோடு ஆவ யானவர் உங்களில் வாசம் பண்ணுகிறார். நீங்களும் இயற் கைக்கு அப்பாற்பட்டவைகளைப் பார்க்க முடியும் என்று சவால் விட்டு அழைப்பதுதான் எனது முதல் செய்தி.

பரிசுத்த ஆவியானவரோடு செய்யும் ஊழியத்தில் அற்புதங்க ளும் அதிசயங்களும் நிச்சயம் காணப்படும்! ஆவியானவர் நம்மீது வருவதின் நோக்கம், வல்லமையை வெளிப்படுத்தும் சாட்சிகளாய் நம்மை மாற்றுவதுதான் என்பதை அடிக்கோடிட்டுக் காட்டுவது தான் எனது இரண்டாம் செய்தியின் நோக்கம்!

கிறிஸ்துவின் இறுதிக் கட்டளை என்பது "போ" என்று அனுப்புவது மட்டுமல்ல, பரிசுத்த ஆவியின் வல்லமைக்குக் காத்தி ருந்து பெலனடைந்து புறப்படவேண்டும் என்பதுதான்! ஆதிச் சபையின் முதல் ஆயத்தமே அதுதான் என்பதைக் கூறி, அந்த வல் லமை பெற நாம் நாடவேண்டும் என்று அறைகூவி அழைப்பது தான் எனது மூன்றாம் செய்தியின் நோக்கம்.

ஆவியானவர் அருளிய வல்லமை ஆக்க வேலைக்கு மட்டுமல்ல, தீய ஆவிகளை அழிக்கும் வேலைக்கு ஆற்றல் மிகு வெடிகுண்டாக

யும் பயன்படுகிறது. ஆவியானவர் அசுத்த ஆவிகளை அடையாளம் காட்டி, அதை வேரோடு அழிக்கும் வேலையில் ஈடுபடுகின்றார். இதனை தெளிவுபடுத்துவதுதான் எனது நான்காம் செய்தியின் சாரம்!

ஆவியானவர் இக்கரு விடுதலைப் பணிக்கென ஆட்களைத் தேடுகின்றார். ஆதி முதல் அந்தம் வரை கர்த்தருடைய ஆவியானவர் விடுதலை ஊழியத்தைச் செய்து வருகின்றார்! அவரோடிணைந்து விடுதலைப் பணி செய்யும் வீரரை இன்றும் அறைகூவி அழைக்கின்றார். இந்த அழைப்புத்தான் எனது இறுதிச் செய்தி!

நடந்து முடிந்த இரண்டு டுனாமிஸ் முகாம்களிலும் நீங்கள் ஒரு வேளை பங்கு பெறாமல் போயிருக்கலாம். ஆனால் அம்முகாம்களில் நான் கொடுத்த செய்தியை ஏறத்தாழ அப்படியே உங்களுக்குப் புத்தகமாய்க் கொண்டு வருகிறேன். எதிர்பார்ப்போடு செய்தியைக் கேட்கச் செல்லுங்கள். நான் முகாமிலிருந்து பேசுவது போலவும், நீங்கள் அங்கு உட்கார்ந்து கேட்பதைப் போலவும், கற்பனை செய்துகொண்டு இச்செய்திகளை வாசியுங்கள். உங்களுக்கும் டுனாமிஸ் வெளிப்படட்டும்!

செய்தி – 1

என் கண்களைத் திறந்தருளும்!

டுனாமிஸ் என்னும் வல்லமை முகாமுக்கு வந்த உங்கள் ஒவ்வொருவரையும் வாழ்த்துகிறேன். டுனாமிஸ் என்றாலே வல்லமை என்று பொருள். இந்த வல்லமையின் செய்தி உங்கள் வெற்றி வாழ்க்கைக்கு அடிப்படையாய் அமையும் என்பது நிச்சயம்! இயேசு கிறிஸ்துவின் இறுதி வாக்குத்தத்தம் ஒருநாளும் பொய்த்துப் போகாது. "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து (டுனாமிஸ்), எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்" என்றார் இயேசு. (அப். 1:8) பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டேன் என்று சொல்லும் எவருக்குள்ளும் தேவனுடைய வல்லமை கட்டாயமாய்க் காணப்படவேண்டும். இந்த பாரத்தில்தான் வல்லமை முகாமை கர்த்தர் மதுரை மாநகரில் ஏற்படுத்தித் தந்துள்ளார். இன்று உங்களோடு இந்த வல்லமையைக் குறித்து என் உள்ளத்தில் ஆவியானவர் அருளியிருக்கும் சில கருத்துக்களை பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.

கிறிஸ்துவின் வல்லமை:

இயேசு கிறிஸ்து தமது ஊழியத்தை இந்த தெய்வீக வல்லமையால்தான் செய்து முடித்தார். அவருடைய ஊழியத்தை பேதுரு அப்போஸ்தலன் இரத்தினச் சுருக்கமாய் கூறுவதைக் கேளுங்கள். "நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்; தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார்." (அப். 10:38) பரிசுத்த ஆவியைப் பெற்றவன் தேவனைப் போய்ப் பார்த்துவிட்டு வருகிறவனல்ல, தேவனையே தன்னோடு வைத்திருக்கிறவன். பரிசுத்த ஆவியினால் நிரம்புவது என்றால் என்ன தெரியுமா? சர்வ வல்ல தேவாதி தேவனால் நிரம்புதல் என்று அர்த்தம்.

வேதாகமப் பக்தரோடு தேவன் கூடவே இருந்தார். அதனால் அவர்கள் வீர சாகசங்களைச் செய்தார்கள். யோசேப்போடு கூட தேவன் இருந்தார். அதனால் அவன் காரியசித்தி உள்ளவனானான்! தாவீதோடு கூட தேவன் இருந்தார். அதனால் அவன் மென்மேலும் விருத்தியடைந்தான்! சாலொமோனோடு கூட தேவன் இருந்தார். அதனால் அவன் மாபெரும் ஞானியாகத் திகழ்ந்தான்! எ.

அவர்களோடு தேவன் இருந்தாரோ அப்படியே கிறிஸ்துவோடும் இருந்தார். தேவன் அவருடனே கூட இருந்தபடியினால் அவர் நன்மை செய்தார், பிசாசின் வல்லமையில் அகப்பட்டோரைக் குண மாக்கினார். அதே தேவன் இன்று நம்மோடும் இருக்கிறார். பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டவனோடு தேவன் இருந்து தம்முடைய வல்லமையை அவன் மூலம் வெளிப்படுத்துகிறார். ஒரு வேளை நீங்கள் இயேசுவைப் பார்த்து, "அப்பா நீர் செய்த வல்லமையான கிரியைகளை நானும் செய்ய விரும்புகிறேன். நீர் செய்ததின் இரகசியம் என்ன?" என்று அவரைக் கேட்டால் அவர் சொல்லுவார், "மகனே உன்னோடு கூட தேவன் இன்று இருப்பதைப்போலவே நான் பூமியில் வாழ்ந்த நாட் களில் என்னோடும் இருந்தார். என்னையும் அவர் தமது ஆவியினா லும், வல்லமையினாலும் நிறைத்தார். நான் அந்த அபிஷேக வல்லமையால் அரும்பெரும் காரியங்களைச் செய்தேன். ஆனால் நீயோ அந்த அபிஷேகத்தை வைத்துக் கொண்டு ஒன்றும் செய்யா மல் இருக்கிறாய். இதுதான் உனக்கும் எனக்கும் உள்ள வித்தியா சம்," என்று கனிவோடு சொல்லுவார். ஆம், அவர் மெய்யாகவே நமது மூத்த சகோதரன்தான். நாம் அவருடைய இளைய சகோத ரர்கள்தான். அவரது வல்லமைக்கும் அபிஷேகத்திற்கும் உடன் சுதந் தரவாளிகள்தான். உலக சகோதரர்களுக்குள் பாகப்பிரிவினை சண்டைகள் வருகிறது. ஆனால் நமது மூத்த சகோதரனுக்கு நம் மீது ஒரு குறை உண்டு. தம்முடைய வல்லமையை நாம் உரிமை கொண்டாட மறுக்கிறோமே என்கிற மனக்குறைதான் அது.

பிசாசுகளின் மேல் வல்லமை:

இயேசு பரிசுத்த ஆவியின் வல்லமையால் நன்மை செய்கிறவ ராய் மட்டுமல்ல, ***"பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குண மாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார்"***. இங்கு ஒரு சிறு குறிப்பை நாம் கவனிக்க வேண்டும். பிசாசுக்கும் வல்லமை உண்டு. அந்த வல்லமை யின் பிடியில் மக்கள் சிக்கித் தவிக்கிறார்கள். நாம் வல்லமை முகாம் கொண்டாடுவது போலவே அவனும் வல்லமை முகாம் கொண்டாட முடியும். ஆனால் நமக்குள் இருக்கும் வல்லமை தேவாதி தேவனு டைய வல்லமை. சாத்தானுக்குள் இருக்கும் வல்லமையோ ஒரு தேவ தூதனுடைய வல்லமை. விடிவெள்ளி நட்சத்திரமாய் விளங்கின தேவ தூதன் கீழே தள்ளப்பட்ட பிறகும் கூட தனது வல்லமையை இழந் துவிடவில்லை. தேவனும், தாம் அவனுக்குக் கொடுத்த வல்லமையைப் பறித்துக் கொள்ளவில்லை. ஆனால் அவனுடைய வல்லமையை தம் முடைய வல்லமையால் ஒன்றுமில்லாமல் செய்வதற்காகவே தமது குமாரனை மனிதனாகப் பூமிக்கு அனுப்பினார். அவரை தமது ஆவி

...னாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார். ஆகவே ...ல்லது தம்முடைய அபிஷேக வல்லமையினால் மட்டுமே சாத்தா...ுடைய வல்லமையை முறியடித்தார். அல்லேலூயா!

இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்ட பிறகுதான் பிசாசுகளைத் துரத்தினார். அபிஷேகத்தைப் ...றுவதற்கு முன்பும் தேவாலயம் போய் பிரசங்கிப்பது அவரது வழக்கமாய் இருந்தது. ஆனால் அவர் பிரசங்கித்தபொழுது பிசாசு...கள் அலறவில்லை. அபிஷேகத்தின் வல்லமையைப் பெற்றுக்கொண்...டவராக தேவாலயத்திற்கு அவர் போகும்போதுதான் "ஐயோ! ...ரேயனாகிய இயேசுவே எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களைக் ...கெடுக்கவா வந்தீர் என்று பிசாசுகள் அலறின." காரணம் என்ன? இயேசு மனிதனாகச் சென்ற பொழுது அவரைப் பார்த்து பிசாசு...கள் பயப்படவில்லை. ஆனால் அவர் அபிஷேகம் பெற்ற பின்போ அவருக்குள் இருந்த பரிசுத்த ஆவியைப் பார்த்து பிசாசுகள் பயந்து ...டுங்கின. நாமும் பிசாசு பிடித்தவர்களை பார்க்கும்பொழுதெல்லாம் இதை உணர்ந்து கொள்ள வேண்டும். `என்னைப் பார்த்து அல்ல ...எனக்குள் இருக்கும் தேவ ஆவியானவரைப் பார்த்து பிசாசுகள் ...டைந்து நடுங்குகின்றன' என்ற விசுவாசம் நமக்கு வேண்டும் ...கிறிஸ்து, ஆவியானவருடைய பெலத்தினாலே தாம் வளர்ந்த ஊரா...கிய நாசரேத்துக்கு வந்து, தம்முடைய வழக்கத்தின்படியே ஓய்வு ...நாளில் ஜெப ஆலயத்திலே பிரவேசித்தார்: அன்று ஏசாயா ...புத்தகத்தை வாசித்து வியாக்கியானம் செய்தார். அவருடைய பிர...சங்கத்தில் இருந்த வல்லமையும், இருடையும் விசேஷமாய் விளங்...கிற்று. `கர்த்தருடைய ஆவியானவர் என் மேல் இருக்கிறார்,' என்று வீர முழக்கமிட்டார். கப்பர்நகூம் ஜெபாலயத்தில் அவரது வார்த்...தையில் வெளிப்பட்ட வல்லமையைக் கண்டு பிசாசுகள் அலறின.

ஆம், பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெற்றவனுக்கும், பெறா...தவனுக்கும் உள்ள வித்தியாசம் இமயத்துக்கும் குமரிக்கும் உள்ள வித்தியாசம், ஆகாயத்துக்கும் பூமிக்கும் உள்ள வித்தியாசம். அபி...ஷேகத்தைப் பெற்றுக்கொண்டவர்களுக்கும், பெற்றுக் கொள்ளாதவர்...களுக்கும் இடையில் அப்படியேதும் பெரிய வித்தியாசத்தை நான் பார்க்கவில்லையே, அந்நிய பாஷை என்று சொல்லி ஏதோ உளறு...கிறார்கள். ஆனால் எல்லோரையும் போலவே சண்டை சச்சரவுகள் நிறைந்து தோல்வி வாழ்க்கையோடு வாழ்கிறார்களே, என்று நீங்கள் ...ுழும்பலாம். இதற்கு ஒரே காரணம் அபிஷேகம் பெற்றுக் கொண்...டேன் என்று சொல்பவர்கள் தமக்குள் வாசம் பண்ணும் சர்வ வல்...லவரை பயன்படுத்தாமல் இருப்பதுதான். அவருக்குக் கொடுக்க வேண்டிய இடத்தைக் கொடுக்காமல் இருப்பதுதான்.

லாதவர்கள் இப்பொழுதே வாஞ்சையோடு அதை நாடித் தேடுங்கள்.

இரட்சிப்பும் – அபிஷேகமும்

இரட்சிக்கப்பட்ட நாட்களிலே எனக்கு ஒரு குழப்பம் இருந்தது. இரட்சிப்பிற்கும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்கும் என்ன வித்தியாசம்? பரிசுத்த ஆவியானவர் மூலம்தானே இரட்சிக்கப்படுகிறோம்? இரட்சிக்கப்பட்ட பொழுது பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வந்து வாசம் செய்து நம்மை புதுச் சிருஷ்டியாய் மாற்றுகிறாரே? அதற்குப் பிறகு பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தில் அவர் எப்படி வருகிறார்? கொஞ்சம் பரிசுத்த ஆவி, அதிகம் பரிசுத்த ஆவி என்று ஆவியானவரைக் கூறு போட முடியுமா? என்பது போன்ற பல குழப்பங்கள்! இரட்சிப்பில் பெறும் பரிசுத்த ஆவிக்கும், அபிஷேகம் பெறும்போது பெறும் பரிசுத்த ஆவிக்கும் உள்ள வித்தியாசம் என்ன? என்று ஆண்டவரைக் கேட்டேன். அதற்கு அவர், "மகனே, மரியாள் கர்ப்பத்திலே நான் பரிசுத்த ஆவியானவரால் பிறந்ததை இரட்சிப்புக்கு ஒப்பிடலாம். யோர்தான் நதிக்கரையிலே என் மீது புறாவைப் போல் இறங்கி வந்த ஆவியானவரை, அபிஷேகத்துக்கு ஒப்பிடலாம். இவைகள் இரண்டும் வெவ்வேறானவை" என்று சொல்லிக் கொடுத்தார். இந்த அபிஷேகத்தால்தான் இயேசு நறுங்குண்டவர்களைக் குணமாக்கினார். துயரப்பட்டவர்களைத் தேற்றினார். அப்படியானால் அதற்கு முன்பு அவர் மக்களை ஆறுதல் படுத்தவே இல்லை என்று பொருள் அல்ல. பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப் பெற்ற பிறகு அவர் மக்களுக்கு அருளின ஆறுதல் அற்புதமானது! அதி உன்னதமானது! அதனால்தான் "உங்கள் காதுகள் கேட்க இந்த வேத வாக்கியம் இன்றைய தினம் நிறைவேறிற்று என்றார்". அந்த நாளில்தான் ஏசாயா அவரைக் குறித்துச் சொன்ன வாக்குத்தத்தம் நிறைவேறிற்றாம்! (ஏசாயா 61:1–3, லூக். 4:18–21).

கிறிஸ்துவின் பார்வை

டுனாமிஸ் என்ற கிரேக்க பதத்திற்கு வல்லமை, சக்தி, பலத்த செய்கை, திறமை, அற்புதம் என்று பல பொருட்கள் உண்டு. டுனாமிஸ் எனும் சொல் இத்தனை வகையில் வேதத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவர் வந்தவுடன் முதலாவது அவரில் வெளிப்பட்ட திறமை இயற்கைக்கு அப்பாற்பட்டவைகளை பார்க்கும் திறமைதான். (மத். 3:16,17) "இயேசு ஞானஸ்நானம் பெற்று ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது. தேவ ஆவி புறாவைப்

போல இறங்கி தம் மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும் வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது".

பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் மேல் வந்ததும் இயற்கைக்கு அப்பாற்பட்டவைகளை காணும்படி அவர் கண்களைத் திறந்தார். ஆவிக்குரிய காதுகளையும் கேட்கும்படி செய்தார். அதுமுதல் கிறிஸ்து அசாதாரணமான பார்வையோடு மனிதர்களையும், சூழ்நிலைகளையும், பிசாசையும், சாத்தான் கூட்டத்தையும் பார்த்தார். "இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால், அவர்களை நம்பி இணங்கவில்லை; மனுஷர் உள்ளத்தில் இருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனுஷனைக் குறித்து ஒருவரும் அவருக்கு சாட்சி கொடுக்க வேண்டியதாயிருக்கவில்லை". (யோவா.2:24,25)தேவன்தான் மனிதருடைய இருதயத்தைப் பார்க்க முடியும். மனுஷன் முகத்தைப் பார்ப்பான். தேவனோ இருதயத்தைப் பார்ப்பார். இயேசுகிறிஸ்து 30 வயது வரை மனிதனைப் போல் பார்த்தார். தேவ ஆவியானவர் அவர் மீது வந்தபோது அவரது ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டது. தேவப் பார்வை அவருக்கு வந்தது. இயேசுவின் மீது அன்று தங்கியிருந்த அதே ஆவியானவர்தான் இன்று நம் மீதும் தங்கியிருக்கிறார். நாமும் அவரைப்போலவே இயற்கைக்கு அப்பாற்பட்டவைகளைப் பார்க்க முடியும். அவருக்குள்ளிருந்த அதே டுனாமிஸ் நமக்குள் இருக்கிறது. நாம் இயேசுவைப் போல் மாற முடியும். (இதைக் குறித்து மிகவும் ஆழமாக, "இயேசுவைப் போல்" எனும் எனது புத்தகத்தில் எழுதியுள்ளேன். வாங்கி வாசியுங்கள்.) அவரை நாம் பின்பற்றும்படியாக அவர் மாதிரியை வைத்துப் போயிருக்கிறார். "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாய் இருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்." (பிலிப்.2:6,7) ஆகவே அவரைப் போல் நாம் மாறுவது சாத்தியம். பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய ஆழங்களை நமக்குக் காண்பிப்பதற்காகவே நம் மீது இறங்கி வந்திருக்கிறார். "தேவன் தம்மில் அன்பு கூறுகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவும் இல்லை, காது கேட்கவும் இல்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவும் இல்லை; நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும் தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். மனுஷனில் உள்ள ஆவியே அன்றி, மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறிய மாட்டான். நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை

அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்". (1 கொரி2:9-12) நம் சாதாரணக் கண்களுக்கு தெரியாதவைகளை ஆவியானவர் காண்பிக்கிறார்.

கிறிஸ்து பரிசுத்த ஆவியானவர் மூலம் அசாதாரணமாகப் பார்த்தார். தம்முடைய சீஷர்களை தெரிந்தெடுக்கும் முன்பு அவர்கள் பெயரையும் சுபாவத்தையும் இருப்பிடங்களையும் கூட ஆவிக்குரிய கண்களால் பார்த்தார். "இயேசு நாத்தான்வேலைத் தம்மிடத்தில் வரக்கண்டு அவனைக் குறித்து இதோ கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்றார். அதற்கு நாத்தான்வேல் நீர் என்னை எப்படி அறிவீர் என்றான். இயேசு அவனை நோக்கி: பிலிப்பு உன்னை அழைக்கிறதற்கு முன்னே, நீ அத்திமரத்தின் கீழிருக்கும்போது உன்னைக் கண்டேன் என்றார். அதற்கு நாத்தான்வேல்: ரபீ, நீர் தேவனுடைய குமாரன், நீர் இஸ்ரவேலின் ராஜா என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: அத்திமரத்தின் கீழே உன்னைக் கண்டேன் என்று நான் உனக்குச் சொன்னதினாலேயா விசுவாசிக்கிறாய், இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய் என்றார்" பின்னும் அவர் அவனை நோக்கி, "வானம் திறந்திருக்கிறதையும், தேவ தூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இதுமுதல் காண்பீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.". (யோவா 1:47-51) இங்கே கவனியுங்கள், நாத்தான்வேல் அருகில் வரும்பொழுதே அவன் கபடற்றவன் என்பதையும் இஸ்ரவேலன் என்பதையும் கண்டுபிடித்தார். அதுமட்டுமா? அவன் எந்த மரத்தினடியில் இருந்தான் என்பதையும் பார்த்தார். பிலிப்புவோடு அவன் பேசின உரையாடலையும் கேட்டார். ஆவியில் நிறைந்த மனிதனுக்கு அந்தரங்கம் என்ற ஒன்று இல்லை. அவருடைய சீஷர்கள் அவர் தலைமறைவில் எவன் பெரியவன் என்று சண்டையிட்டுக் கொண்டதை மிகத் துரிதமாய் கண்டுபிடித்துக் கடிந்து கொண்டார். இதையெல்லாம் பரிசுத்த ஆவியின் வல்லமையால்தான் செய்தார் என்பதை யார் மறுக்க முடியும்? அதே வெளிப்படுத்தும் ஆவியானவர் உங்கள் கண்களையும் திறப்பார். அவர் தரிசனங்கள் மூலமும் கனவுகள் மூலமும் இன்றும் பேசுகிறார். ஆவியில் நிறைந்தவன் அவரது குரலைக் கேட்க முடியும். பரிசுத்த ஆவியைப் பெற்ற வாழ்க்கை ஒரு சாதாரண வாழ்க்கை அல்ல. அது ஒரு அசாதாரணமான வாழ்க்கை ! இதை விசுவாசித்து உடனே எழும்புங்கள்! "பரிசுத்த ஆவி பெற்ற நான் இனி சாதாரணமாய் வாழ மாட்டேன். எனது கண்கள் கண்டபடி தீர்ப்புச் செய்ய மாட்டேன். ஆவியானவரின் குரலைக் கேட்டு பழகுவேன்", என்று விசுவாசத்தோடு தீர்மானியுங்கள். இந்த ஆசை உங்களுக்குள் வந்தாலே அற்புத வாழ்க்கையின் முதல் படிக்கு வந்துவிட்டீர்கள். எவ்வளவு அர்த்தம், எந்த அளவு இவை

நேரம் அது. சில உண்மைத் தலைவர்கள் கூட, அந்த வாலிபனின் வலைக்குள் சிக்கி சபையைவிட்டுப் பிரியும் நிலைக்கு வந்திருந்தனர். அன்று பரிசுத்த ஆவியானவர் எனக்குக் காண்பித்த இந்த சிறு வெளிப்பாட்டினால் பலரது கண்கள் திறக்கப்பட்டது. ஆம், பரிசுத்த ஆவியானவர் இன்றும் தரிசனங்கள் மூலம் நம்மோடு பேசுகிறார். எதிர்பாருங்கள்!

கிறிஸ்து அடிக்கடி தனியாக ஜெபிக்க ஓடினது இதனால்தான். பிதாவின் சத்தம் கேட்கவும், அவர் செய்யப் போகிறதை ஆவிக்குரிய கண்களால் பார்க்கவும் ஆவியானவர் அவருக்கு அருள் புரிந்தார். "பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருந்து தாம் செய்கிறவைகளையெல்லாம் அவருக்கு காண்பிக்கிறார். நீங்கள் ஆச்சரியப்படத்தக்கதாக இவைகளைப் பார்க்கிலும் பெரிதான கிரியைகளையும் அவருக்கு காண்பிப்பார். நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை; நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன்; எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பிய பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது" (யோவா. 5:20,30) கிறிஸ்துவின் தெய்வீகப் பார்வையை மிக அழகாகச் சித்தரிக்கும் வசனம் இது. அவர் ஒன்றையும் தாமாகச் செய்யவில்லை. ஒரு வார்த்தையையும் தாமாகப் பேசவுமில்லை. பரிசுத்த ஆவியானவர் அவருக்கு எவைகளைக் காட்டினாரோ, அவைகளை மட்டுமே செய்தார். பிதாவானவர் தமது குமாரனிடத்தில் அன்பாய் இருந்து தாம் செய்கிறவைகளை எல்லாம் பரிசுத்த ஆவியானவர் மூலம் முன்கூட்டியே காட்டினார். அதைக் கிறிஸ்து ஆவியில் கண்டு அழகாகச் செய்து முடித்தார். பிதாவின் குரலையும் அவர் கேட்டு அதன்படி தீர்ப்பளித்தார். சில வல்லமையான தேவ ஊழியர்கள், தாம் செய்ய வேண்டியவைகளை முன்னரே தரிசனமாகக் கண்ட சம்பவங்களை ஏராளம் கேட்டிருக்கிறேன்.

நாமும் அப்படிப் பார்க்க முடியுமா என்று உங்களுக்குள் கேட்டுக் கொள்கிறீர்களா? நீங்கள் விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பீர்கள். விசுவாசியாவிட்டால் மாம்சக் கண்களினால் மாத்திரம் பார்த்து, மார்த்தாளைப் போல நாறும் பிணத்தையும், மூடின கல்லறையையும் மட்டுமே காண்பீர்கள். நீங்கள் தேவ ஆவியில் நிரம்பிய மகனாக இருந்தால் அசாதாரணக் காட்சிகள் உங்கள் முன் வரும்! அதற்காக வாஞ்சிப்பீர்களா? விசுவாசிப்பீர்களா?

பிலேயாமின் பார்வை:

பிலேயாமைப் பாருங்கள். புதிய ஏற்பாட்டுப் பார்வையில் அவன் ஒரு நல்ல தீர்க்கதரிசி அல்ல. இஸ்ரவேல் மக்கள் இடறுவ

தற்குக் காரணமாய் இருந்தவன். பண ஆசைக்குப் பலியானவன். அப்படிப்பட்ட மனிதனையே தேவ ஆவியானவர் நிரப்பி அவனது ஆவிக்குரிய கண்களைத் திறந்தாரானால், இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு பரிசுத்த ஆவியின் முழு நிறைவைப் பெற்ற உங்களுக்கு அவர் அப்படிச் செய்வது நிச்சயமல்லவா? எண்ணாகமம் 24வது அத்தியாயத்தில் அவனது அசாதாரணப் பார்வையை தெளிவாகக் காணலாம். இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம் என்பதை ஆவியானவர் மூலம் அவன் கண்டுபிடித்துவிட்டான். இன்றும் இத்தகைய உள்ளான பார்வை நமக்குக் கிடைத்தால், ஒருவரை ஒருவர் சபிக்கவோ, தூஷிக்கவோ முற்பட மாட்டோம். மாம்சக் கண்களினால் இஸ்ரவேலரை ஏறெடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தபொழுது, தேவ ஆவி அவன்மேல் வந்தது. இப்பொழுது அவன் பார்வை, அவர் பார்வையாக மாறிவிட்டது. அவனது வாயும் திறந்தது. அதை வேதம் மிக அழகாகக் கூறுகிறது. **“தன் கண்களை ஏறெடுத்து இஸ்ரவேல் தன் கோத்திரங்களின் படியே பாளயமிறங்கிருக்கிறதைப் பார்த்தான்; தேவ ஆவி அவன் மேல் வந்தது. அப்பொழுது அவன் தன் வாக்கியத்தை எடுத்துரைத்து: பேயோரின் குமாரனாகிய பிலேயாம் சொல்லுகிறதாவது, கண் திறக்கப்பட்டவன் உரைக்கிறதாவது, தேவன் அருளும் வார்த்தைகளைக் கேட்டு, சர்வ வல்லவரின் தரிசனத்தைக் கண்டு தாழ விழும்போது, கண் திறக்கப்பட்டவன் விளம்புகிறதாவது, யாக்கோபே உன் கூடாரங்களும், இஸ்ரவேலே உன் வாசஸ்தலங்களும் எவ்வளவு அழகானவைகள்! அவைகள் பரவிப் போகிற ஆறுகளைப் போலவும் நதியோரத்திலுள்ள தோட்டங்களைப் போலவும், கர்த்தர் நாட்டின சந்தன மரங்களைப் போலவும், தண்ணீர் அருகே உள்ள கேதுரு விருட்சங்களைப் போலவும் இருக்கிறது. அவர்களுடைய நீர்ச்சால்களிலிருந்து தண்ணீர்பாயும்; அவர்கள் வித்து திரளான தண்ணீர்களில் பரவும்; அவர்களுடைய ராஜா ஆகாகைப் பார்க்கிலும் உயருவான்; அவர்கள் ராஜ்யம் மேன்மையடையும்.”** (எண் 24:2–7) தேவ ஆவியானவர் பிலேயாம் மீது இறங்கினவுடன் அவன் கண்கள் திறக்கப்பட்டது. ஆவியினால் நிரம்பினவன் கண் திறக்கப்பட்டவன் என்ற உண்மை இங்கு புலனாகிறது. சர்வ 'வல்லவரின் தரிசனத்தைக் கண்டு பிலேயாம் தாழ விழுந்தான். தேவன் அருளும் வார்த்தைகளை தனது ஆவிக்குரிய காதுகளால் கேட்டான். அவனது தொலைதூரப் பார்வையை தியானிக்கும் பொழுதெல்லாம் என் உள்ளம் பிரமிப்படைகிறது. எத்தனையோ மைல்களுக்கு அப்பால் உள்ள இஸ்ரவேலின் கூடாரங்களையும், வாசஸ்தலங்களையும் பார்த்து ரசித்தான். அவர்களைப் பரவிப் போகிற ஆறுகளாகவும், செழிப்பான தோட்டங்களாகவும் ஓங்கி வளரும் கேதுரு மரங்களாகவும் கண்டான். இதிலும் விந்தை என்னவென்றால் இஸ்ரவேலரின்

ரிந்து திரளான தண்ணீர்களில் பரவுவதையும் துல்லியமாய்ப் பார்த் தான். சொல்லப் போனால் யூதர்கள் அமெரிக்கா, ரஷ்யா, ஆசியா போன்ற பல கண்டங்களில் பரவி இருக்கப் போகிறார்கள் என் பதை அவன் அன்றே பார்த்தான்.

அது மட்டுமா? இஸ்ரவேலருடைய ராஜா எவ்வளவாய் உய ருவான் என்பதையும் பார்த்தான். இதிலும் ஒரு அதிசயம்! இஸ்ர வேலரை அவன் பார்த்தபோது அவர்களுக்கு ராஜாக்களே கிடையாது. வனாந்தர பிரயாணத்தில் இஸ்ரவேலருக்கு ராஜா ஏது? கானானில் குடியேறி நியாயாதிபதிகள் ஆண்டு, சாமுவேல் தீர்க்கதரிசியின் காலத்தில்தான் இஸ்ரவேலருக்கு ராஜா வந்தான். ஆனால் இந்தப் பிலேயாம் இஸ்ரவேலின் ராஜாக்களைக் கூட தேவ ஆவியின் மூலம் அத்தனை தெளிவாகப் பார்த்தான். யாக்கோபிலி ருந்து மேசியா வரப் போவதைக்கூட அன்றே கண்டு எழுதி வைத் தான். **"யாக்கோபிலிருந்து தோன்றும் ஒருவர் ஆளுகை செய்வார்.. ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும், ஒரு செங்கோல் இஸ்ர வேலிருந்து எழும்பும்"** என்றெல்லாம் கண் திறக்கப்பட்டவன் துல் லியமாகக் கண்டான். எத்தனை சவால் பாருங்கள். பேயோரின் மகன் பிலேயாமே இப்படிப் பார்க்க முடியுமானால், ஆபிரகாமின் பிள்ளைகளாகிய நீங்கள் பார்க்க முடியாதா? பழைய ஏற்பாட்டுக் காலத்திலேயே தேவ ஆவியானவர் இத்தகு பார்வையைத் தருவா ரானால், புதிய ஏற்பாட்டுக் காலத்தில் தரமாட்டாரா? தருவது நிச்சயமல்லவா? பரிசுத்த ஆவியானவர் மூலம் அவர் ஆசீர்வதிக்கி றவர்களைப் பார்க்க முடியும். சபிக்கிறவர்களையும் பார்க்க முடியும். தேவ மக்களின் எதிர்காலத்தையும் பார்க்க முடியும். தேவனது திட் டங்களையும் பார்க்க முடியும். இத்தகு இயற்கைக்கு அப்பாற்பட்ட பார்வை இந்தக் கடைசிக் காலங்களில் கிடைக்கப் போகிறது. விசு வாசத்தோடு இத்தகு அனுபவங்களை வாஞ்சியுங்கள்.

எலிசாவின் பார்வை:

எலிசாவைப் பாருங்கள், அவன் மீது இருந்த தேவ ஆவியா னவர் இயற்கைக்கு அப்பாற்பட்டவைகளை அவனுக்குக் காட்டித் தந்தார். சீரியாவின் ராஜா இஸ்ரவேலுக்கு விரோதமாய் எந்தெந்த இடத்தில் பாளயமிறங்கலாம் என்று தீட்டின ரகசியத் திட்டங்க ளையும் அவன் அம்பலமாக்கினான். இதனால் சீரியா அரசன் மனம் குழம்பினான். ராஜாவுக்கு உளவாளியாய் இருப்பவன் யாரென்று அங்கலாய்த்தான். அப்பொழுது ராஜாவின் ஊழியக்காரன் ஒருவன், "ராஜாவே, நீர் உம்முடைய பள்ளி அறையிலே பேசுகிற வார்த்தைகளை யும், இஸ்ரவேலில் இருக்கிற தீர்க்கதரிசியாகிய எலிசா இஸ்ரவேலின் ராஜாவுக்கு அறிவிப்பான் என்றான்". (2 ராஜா. 6:12) பள்ளியறையில்

என்ன செய்வோம் என்று அங்கலாய்க்கும் ஊழியரும் எத்தனை எத்தனை ! இன்று நமக்குத் தேவை என்ன தெரியுமா? ஆவிக்குரிய கண்கள் திறக்கப்படுவதுதான் !

இதனால்தான் ஞானத்தையும் தெளிவையும் அளிக்கின்ற ஆவியானவர் ஆவிக்குரிய கண்களை திறக்க வேண்டும் என்று பவுல் அன்று எபேசு சபைக்காக வேண்டினான். (எபே.1:19) தேவ மனிதன் எலிசாவும் தன் வேலைக்காரன் கண்களைத் திறந்தருளும்படி ஜெபம் பண்ணினான். எலிசாவின் கண்களோ ஏற்கனவே திறக்கப்பட்டிருந்தன. அதனால் அவனது விசுவாசம் மலையென உயர்ந்து நின்றது. தேவ ஆவியானவர் ஒருவனை நிறைக்கும்பொழுது அவன் சூழ்நிலைகளைப்பார்த்து புலம்பாமல் ஆவிக்குரிய கண்களால் தன்னைச் சூழ்ந்து நிற்கும் பாதுகாப்பைக் கண்டு தைரியம் கொள்கிறான். எலிசாவின் ஜெபம் கேட்டு வேலைக்காரனின் கண்களைத் தேவன் திறந்தார். அக்கினிமயமான குதிரைகளையும் ரதங்களையும் கண்டு வேலைக்காரன் அதிசயித்தான். இத்தகு அனுபவங்களை நாமும் காணத் துடிக்க வேண்டாமா? அதற்காக ஆவியானவரின் த்தாசையை நாடி ஜெபிக்க வேண்டாமா? நீங்கள் விண்ணப்பம் பண்ணாமல் இருக்கிறதினால், உங்களுக்கு இத்தகு அனுபவங்கள் எட்டாத உயரமாகிவிட்டன. எலியாவின் வேலைக்காரன் எலிசாவுக்கு இரு மடங்கு வல்லமை கிடைத்ததானால், எலிசாவின் வேலைக்காரனுக்கு நான்கு மடங்கு வல்லமை கிடைத்திருக்கலாமே. அந்தோ, அவனுக்கு கிடைத்ததெல்லாம் குஷ்டரோகமும், சாபமும் தான்! காரணம் என்ன? எலிசா வாஞ்சித்தது வேறு, அவன் வேலைக்காரன் வாஞ்சித்தது வேறு. எலிசா தேவனுடைய வல்லமையை நாடி ஓடினான். ஆனால் கேயாசியோ உலக ஆதாயத்துக்காக தேடி ஓடினான். நாலு மடங்கு வல்லமை பெறவேண்டியவன் நாசமானான். நீங்கள் எதற்காக நாடித் தேடுகிறீர்கள்? உங்கள் உள்ளத்தின் ஆசை எதைச் சுற்றி வலம் வருகிறது? எலிசாவின் அனுபவங்கள் இன்றும் உங்களுக்கு சொந்தமாகலாம்.

பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் மேல் வந்தார். அவர் கண்களைத் திறந்தருளினார். பிலேயாமின் மேல் வந்தார், அவனும் கண் திறக்கப்பட்டவனானான். எலிசாவின் மேல் வந்தார், எதிரிகளின் இரகசியத் திட்டங்களை ஆவியானவர் மூலம் கண்டறிந்தான். பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள் வாசம் செய்ய வந்து எத்தனையோ ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. ஆனால் இன்னும் ஆவிக்குரிய கண்கள் திறக்கப்படவும் இல்லை. ஆவிக்குரிய காதுகள் அவர் குரலைக் கேட்டுப் பழகவும் இல்லை. இயற்கைக்கு அப்பாற்பட்ட அசாதாரணப் பார்வை, அசாதாரண வாழ்க்கை இன்னும் உங்கள் அனுபவம் ஆகவுமில்லை! மாம்சக் கண்களில் பார்த்து,

மனம் பதறி, உலக மனுஷரைப் போல் வாழ்வது எத்தனைக் காலம்? தேவனுடைய ஆவியானவரின் 'டுனாமிஸ்' என்னும் தெய்வீ கத் திறமை உங்களில் வெளிப்பட விட்டுக் கொடுங்கள். இப்பொ ழுதே ஆவியானவர் உங்களை இத்தகு அற்புத வாழ்க்கைக்கு அறைகூவி அழைக்கிறார்.

பேதுருவின் பார்வை : பேதுருவும் பரிசுத்த ஆவியானவரின் இத்தகு திறமையைப் பெற்றிருந்தான். அப்.10-ம் அத்தியாயத்தை இந்தக் கண்ணோட்டத்தோடு திரும்பத் திரும்ப தியானித்துப் பாருங்கள். ஒரு சாதாரணப் பெண்ணைப் பார்த்து, இயேசுவை சபித்து சத்தியமாய்த் தெரியாது என்று சொன்ன அவன் பரிசுத்த ஆவியைப் பெற்றான். டுனாமிஸ் வல்லமையையும், திறமையையும் அனுபவித்தான். அவனது ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டு தரிச னங்களைக் காணும் திறமை பெற்றான். அவன் நம்மைவிட பெரிய பக்தன் என்பதினால் அல்ல, அவன் மீது வந்து இறங்கின ஆவியா னவர்தான் அவனை அத்தகு பாக்கியசாலியாக்கினார். புறஜாதியா ருக்கு நற்செய்தியைச் சுமந்து செல்ல அவனது கண்களைக் கர்த்தர் திறந்தார். இத்தாலியப் பட்டாளத்தில் அதிபதி கொர்நெலியுவின் கண்களையும் திறந்தார். இந்தச் தரிசனங்கள்தான் தேவனுடைய சுவிசேஷம், புறஜாதியாருக்குச் செல்வதற்கு வழி திறந்து விட்டன. தரிசனங்கள், கனவுகள் என்று சொன்னாலே இன்று ஆவிக்குரிய உல கில் அச்சமும், பீதியும் தான் தாண்டவமாடுகிறது. நல்ல ஊழியர் கள்கூட இத்தகு அனுபவங்களை இன்று எள்ளி நகையாடுவது எத்தனை துக்ககரமான காரியம்! சில போலி அனுபவங்களைக் கண்டு, வருகிற கேலிகள்தான் இவை. தவறாய்ச் செய்த ஒன்றுக்கு பரிகாரம், அதைச் செய்யாமலே விட்டுவிடுவது அல்ல, அதைச் சரி யாய் செய்வது என்றார் ஒருவர்.

யாரோ ஒரு சிலர் தரிசனம், கனவு என்று சொல்லி மக்களைக் குழப்பிவிட்டது உண்மைதான். அதற்காக இத்தகு அனுபவங்களை ஏறத்தாழ ஒதுக்கிவிட்ட உண்மை பக்தர்களும் உண்டு. இவைகள் இரண்டுமே சாத்தானின் தந்திரம் என்று நான் ஆழமாய் நம்புகி றேன். இந்தக் கடைசி நாட்களில் அப்போஸ்தலரின்அனுபவங்களை நாம் வாஞ்சித்துத்தானாக வேண்டும். தவறான வெளிப்பாடுகளை கண்டிக்கிற நாம், சரியான வெளிப்பாடுகளை தட்டிக் கொடுக்க வேண்டும். பேதுருவின் அனுபவத்தைப் பாருங்கள். அவன் மிகுந்த பசியடைந்து சாப்பிட மனதாயிருந்தான். அதற்கு அவர்கள் ஆயத்தம் பண்ணுகையில் , அவன் ஞான திருஷ்டி அடைந்து, வானம் திறந்தி ருக்கிறதாகவும், நாலு முனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப் போல ஒரு விதமானகூடு தன்னிடத்தில் இறங்கி தரையில் விடப்பட்டி

ருக்கிறதாகவும், அதிலே பூமியிலுள்ள சகலவிதமான நாலுகால் ஜீவன் களும், காட்டு மிருகங்களும், ஊரும் பிராணிகளும், ஆகாயத்துப் பற வைகளும் இருக்கிறதாகவும் கண்டான். அல்லாமலும்: பேதுருவே, எழுந்திரு, அடித்துப் புசி என்று அவனுக்குச் சொல்லும் ஒரு சத்தம் உண்டாயிற்று. பேதுரு அந்தத் தரிசனத்தைக் குறித்து சிந்தனை பண் ணிக் கொண்டிருக்கையில் ஆவியானவர்: இதோ, மூன்று மனுஷர் உன் னைத் தேடுகிறார்கள். நீ எழுந்து, இறங்கி, ஒன்றுக்கும் சந்தேகப்படாமல், அவர்களுடனே கூடப் போ; நானே அவர்களை அனுப்பினேன் என்று அவனுக்குச் சொன்னார், (அப்.10:10-13,19-20) பரிசுத்த ஆவியானவர் பேதுருவை ஞான திருஷ்டி அடையச் செய் தார். வானத்திலிருந்து இறங்கி வருகிற கூட்டையும் மிருகங்களையும் பார்க்கும்படி செய்தார். அடித்துப் புசி எனும் சத்தத்தையும் கேட் கும்படி செய்தார். தரிசனத்தின் விளக்கத்தைக் குறித்து பேதுரு சிந் தித்தபோது, "இதோ மூன்று மனுஷர் உன்னைத் தேடுகிறார்கள். நீ எழுந்து சந்தேகப்படாமல் அவர்களோடு கூடப் போ", என்று ஆணையும் இட்டார். சற்று யோசித்துப் பாருங்கள். அன்று இத்த கைய அற்புதமான வெளிப்பாடுகள் அவனுக்குக் கிடையாமல் இருந் திருந்தால் புறஜாதிகளுக்கு நற்செய்தி சென்றிருக்க முடியுமா? கொர்நெலியு வீட்டிற்கு அவன் சென்றிருப்பானா? அவன் செல்லா மல் இருந்திருந்தால் சுவிசேஷம் புறஜாதிகளான நம்மைத் தேடி வந்திருக்குமா? அப்பப்பா. நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. இந்தியாவின் கடை முனையிலிருக்கும் நாம், சுவிசேஷ ஒளி இன்றி இருளில் மூழ்கிப் போயிருப்போம். நமக்கு சுவிசேஷம் வர முக்கியக் காரணம் பரிசுத்த ஆவி பெற்று, தெய்வீக டுனாமிஸ் அடைந்து, தரிசனங்களைக் கண்ட மனுஷர்கள்தான் என்பது எத்தனை உண்மை. உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்ற கட்டளையைப் பெற்ற பேதுருவுக்கு இத்தகு தரிசனங்கள் தேவைப்பட்டதானால் நமக்கு இன்று இவைகள் அவ சியம் இல்லையா? சிந்தித்துப் பாருங்கள் !

ஆதிச் சபை ஊழியர்களுக்கு இத்தகு அசாதாரணப் பார்வை யும், அசாதாரண வெளிப்பாடுகளும் அனுதின அனுபவமாயிருந்தது. ஆனால் பாதியில் வந்த சபைகள் இத்தகு ஆவியானவரின் வல்ல மையை இழந்து இக்கபோத்தாக மாறியது. அந்திக் கால சபை மீண்டும் ஆதிச் சபையின் அனுபவங்களை பெறப் போகின்றது. வெளிப்பாடுகள் பெற்ற பக்தர்கள் எங்கும் எழும்பப் போகிறார்கள். இத்தகு மகிமையான மணவாட்டிச் சபையை அழைத்துச் செல்லத் தான் இயேசு மீண்டும் வருகிறார். ஆகவே ஆவியானவருடைய அற் புத அனுபவங்களை பெற்றுக்கொள்ளும் நாள் இதுதான்!

அந்தியோகியா சபை ஊழியர்களை சற்று எட்டிப் பாருங்கள். அவர்கள் ஒருமித்துக்கூடி உபவாசித்து கர்த்தரை துதித்துக் கொண்டு இருந்தார்கள். அப்போது பர்னபாவையும், சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்து விடுங்கள் என்று பரி சுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார். (அப்.13:2) அன்றைக்கு ஆவி யானவரின் அசாதாரணக் குரலை ஊழியர்கள் கேட்டிராதிருந்தால் மிஷனரிப் பணி மலர்ந்திருக்குமா? பவுலின் அப்போஸ்தலப் பணி அரும்பியிருக்குமா ? இத்தனைக்கும் காரணம் ஆவியானவரின் அற் புத வெளிப்பாடுகள்தான். இன்று பரிசுத்த ஆவியானவர் நமது கண் களையும், காதுகளையும் திறக்க ஆவலோடு காத்திருக்கின்றார். கர்த்தர் மட்டும் போதும், தேவ வசனம் மட்டும் போதும் என்று நம்மை நாமே திருப்தி செய்து கொண்டிருப்பது பரிதாபமே, "கர்த் தரையும் அவரது வல்லமையையும் நாடுங்கள்" என்று வேதம் அழைக் கிறது. கர்த்தரை மட்டும் நாடினால் போதும் என்று இல்லாமல், அவரது வல்லமையையும் நாட வேண்டும் என்பதை மறந்து விடக் கூடாது. நீங்கள் வேத வாக்கியங்களையும், தேவனுடைய வல்லமை யையும் அறியாமல் தப்பான எண்ணம் கொள்ளுகிறீர்கள் என்று கிறிஸ்து இன்றும் நம்மைக் கடிந்து கொள்வார். (மத்.22:29) வேத வாக்கியங்களை அறிந்து கொண்டால் மட்டும் போதாது. தேவனு டைய வல்லமையையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். அன்று அந்தியோகியா சபை ஊழியர்கள் தேவக் குரல் கேட்காமலிருந்தி ருந்தால் பவுல் கொரிந்தியப் பட்டணத்துக்கோ, எபேசுப் பட்டணத் துக்கோ போயிருப்பானா? கொரிந்தியர் நிருபமும் எபேசியர் நிருபமும் உங்கள் கையில் கிடைத்திருக்குமா? ஆவியானவரின் தெளி வான குரலைக் கேட்பதும், திருக்காட்சிகளைக் காண்பதும் ஞான திருஷ்டி அடையும் அனுபவங்களும் இன்றைக்கும் அவசியம் என்பதை ஆழமாய் உணருகிறீர்களா?

பரிசுத்த ஆவியானவர் அன்று தேவக் குமாரனுக்கு வெளிப்பா டுகளைக் கொடுத்தார். எலிசாவுக்கும், பிலேயாமுக்கும், பேதுருவுக் கும் தரிசனங்களைத் தந்தார். அதே ஆவியானவர் இன்று உங்களுக்குள்ளும் மாறாதவராய் இருக்கிறார். உங்களோடு பேசவும் காட்சிகளைக் காட்டவும் ஆவலோடு இருக்கிறார். அவர் சாதார ணமானவரல்ல. அவருக்கு அனுமதி கொடுத்துப் பாருங்கள். உங்கள் வாழ்க்கை நிச்சயம் அசாதாரண வாழ்க்கையாக மாறும். மாம்சப் பார்வையில் பார்த்து துவண்டு விழும் நீங்கள், இயற்கைக்கு அப் பாற்பட்டவைகளைக்கண்டு அதிசயித்து எழுந்து நிற்பீர்கள். உங்க ளைச் சூழ நிற்கும் விண்ணக தூதர்களைக் கண்டு வீறு கொண்டு எழுவீர்கள். "வேதத்தின் அதிசயங்களைக் காண என் கண்களைத் திறந்தருளும். கிறிஸ்துவைப் போல பார்க்கும் பார்வையைத்

..நும்". என்று அனுதினமும் மன்றாடுங்கள். இந்தச் செய்தி உங்கள் ..ளத்தில் வாஞ்சையை தூண்டி விடுகிறது. இந்த வாஞ்சை ..று அநேக தேவ மனிதரைப் பற்றிப் பிடித்திருக்கிறது. உன் ..யகை மேகம் எழும்புகிறது. இது ஆவியானவருடைய காலம், அற் ..துங்களின் காலம். வரங்களின் மேல் வாஞ்சையைத் தூண்டிவிடும் ..லம். இக் காலத்தில் ஆவியானவரோடு இசைந்து ஓடுபவர்கள் ..க்கியசாலிகள். கர்த்தர் உங்களை இத்தகு பாக்கியசாலிகளாக்கு ..வாராக!

செய்தி – 2

அற்புத ஊழியர்கள் எங்கே?

பரிசுத்த ஆவியின் நிறைவோடும், அவருடைய வல்லமையோடும் ஊழியம் செய்யும் ஆட்கள் இன்றைக்கு மிக அவசரமாய்த் தேவை. அப்படிப்பட்டதொரு எழுப்புதல்தான் இன்று நமது அத்தியாவசியத் தேவை. இதுவரை நாம் கண்ட எழுப்புதல்களுக்காக நாம் கர்த்தரைத் துதிக்க வேண்டும். ஆனால் அவைகள் எல்லாம் முழுமையானது அல்ல. இந்த இறுதிக்கால எழுப்புதல் அற்புத அடையாளங்கள் நிறைந்த எழுப்புதலாய் மலரப் போகிறது. D.L.மூடி, சார்லஸ் பின்னி, ஜான் வெஸ்லி போன்ற வல்லமையான தேவதாசர்கள் மூலம், கர்த்தர் கிறிஸ்தவ நாடுகளிலே மிகப்பெரும் எழுப்புதலை அனுப்பினார். இதில் ஒரு காரியத்தை நாம் மறந்து விடக்கூடாது. அந்த எழுப்புதல் எல்லாமே கிறிஸ்தவர்கள் மத்தியில் நடந்தது. இந்த தேவதாசர்கள் ஆவியின் நிறைவோடும், வல்லமையோடும் தேவ வசனமாகிய பட்டயத்தைப் பாவிகளின் இருதயத்தில் பாய்ச்சினார்கள். ஆயிரமாயிரம் மக்கள் அழுது ஒப்புக் கொடுத்தார்கள். ஆனால் அதே போன்ற எழுப்புதலை நமது நாட்டிற்கும் நாம் எதிர்பார்ப்பது தவறு. நமது நாடு விக்கிரகங்களால் நிறைந்த, புறஜாதியார் மலிந்த நாடு. தேவனுடைய வசனத்தை விசுவாசிக்காத நாடு. கிறிஸ்துவை மகாத்மா காந்தி, புத்தரோடு ஒப்பிட்டுப் பேசும் நாடு. இத்தகைய நாட்டுக்கு கிறிஸ்துவை தேவக் குமாரனாகக் காட்டி, மக்களை அவருக்குக் கீழ்ப்படியச் செய்ய வேண்டுமானால், அற்புத அடையாளங்கள் ஊழியத்தில் கட்டாயம் தேவை.

இதுதான் பவுல் காட்டின வழி. புறஜாதியாருக்கு அப்போஸ்தலனாக கர்த்தர் அவனை எழுப்பினார். அவன் சென்ற இடமெல்லாம் அவன் மூலம் போதித்த "**தமது கிருபையுள்ள வசனத்திற்குச் சாட்சியாக அடையாளங்களும் அற்புதங்களும் . . . . செய்யப்படும்படி அநுக்கிரகம் பண்ணினார்**". (அப். 14:3) சென்ற இடமெல்லாம் கர்த்தர் வியத்தகு அற்புதங்களை செய்து கொண்டே இருந்தார். அதனால்தான் புறஜாதியார் பட்டணங்களில் சபைகளை அவனால் சுலபமாய் ஸ்தாபிக்க முடிந்தது. அவன் தனது ஊழியத்தைக் குறித்து சொல்லுவதைக் கேளுங்கள். "**புறஜாதியாரை வார்த்தையினாலும் செய்கையினாலும் கீழ்ப்படியப்பண்ணும்படிக்கு, அற்புத அடையாளங்களின் பலத்தினாலும், தேவ ஆவியின் பலத்தினாலும், கிறிஸ்துவானவர் என்னைக் கொண்டு நடப்பித்தவைகளைச் சொல்வதல்லாமல் வேறொன்றையும் சொல்ல நான் துணிவதில்லை. இப்படி எருசலேம் துவக்கிச் சுற்றிலும், இல்லிரிக்கம் தேசம் வரைக்கும் கிறிஸ்**

துவின் சுவிசேஷத்தைப் பூரணமாய்ப் பிரசங்கித்திருக்கிறேன்". (ரோம. 15:18,19) கிறிஸ்துவின் நாமம் சொல்லப்பட்டிராத இடங்களில் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி நாடினவன் பவுல். மற்றொருவனுடைய அஸ்திபாரத்தின் மேல் அவன் கட்டவில்லை. ஆனால் அவன் ஊழியமெல்லாம் புறஜாதியார் நடுவிலே வல்லமையாய்ப் பரம்பினது. புறஜாதியாரை வார்த்தையினால் மட்டும் கீழ்ப்படியப் பண்ண முடியாது என்பதை அவன் அறிந்தான்.

அப்படியென்றால் கர்த்தருடைய வார்த்தையின் வல்லமையை, அவன் குறைத்து மதிப்பிட்டானா? இல்லை. ஆனால் கர்த்தருடைய வார்த்தை மாத்திரம் புறஜாதியாரைக் கீழ்ப்படுத்தாமல், அதனோடு கூட செய்கைகளும் சேர்ந்தால்தான் அவர்களை ஆட்படுத்த முடியும் என்பதை அவன் விசுவாசித்தான். கர்த்தரும், அவன் விசுவாசத்தைக் கனம் பண்ணினார். ஆகவேதான் அற்புத அடையாளங்களின் பலத்தினாலும், தேவ ஆவியின் பலத்தினாலும், கிறிஸ்துவானவர் என்னைக் கொண்டு நடப்பித்தவைகளையென்றி வேறு ஒன்றையும் நான் சொல்லமாட்டேன் என்று திட்டமாய்ச் சொல்லுகிறார். இப்படி எருசலேம் துவக்கி இல்லிரிக்கம் தேசம் வரைக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பூரணமாய் பிரசங்கித்திருக்கிறேன் என்று நமக்குச் சவால் விடுகிறான். அப்படியானால் அர்த்தம் என்ன? அற்புத அடையாளங்களோடு சுவிசேஷத்தைச் சொல்வதுதான் பூரண சுவிசேஷம். அப்படியானால் நாம் பிரசங்கிக்கிற சுவிசேஷங்கள் இன்னும் அரைகுறை சுவிசேஷங்கள் என்றுதான் பொருள். இப்படி வல்லமையோடும், அற்புதங்களோடும், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்போது மட்டுமே நமது நாடு கிறிஸ்துவுக்குள் வரமுடியும்.

எபேசுவின் எழுப்புதல்

நமது நாட்டுக்கு இன்று தேவையான எழுப்புதல் புறஜாதி எபேசுப் பட்டணத்துக்கு வந்த எழுப்புதல்தான். எபேசுவின் எழுப்புதல், அற்புதங்களின் எழுப்புதல். எபேசுப் பட்டணத்து எழுப்புதலை அப்போஸ்தலர் 19ஆம் அத்தியாயத்தில் காணலாம். இந்த எபேசுப் பட்டணத்திற்கு அப்பொல்லோ எனும் ஊழியன் புறப்பட்டுச் சென்றான். அவன் "சாதுரியவானும் வேதாகமங்களில் வல்லவனுமானவன். அவன் கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டு, ஆவியில் அனலுள்ளவனாய் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய் போதகம் பண்ணிக் கொண்டு வந்தான். இயேசுவே கிறிஸ்து என்று வேத வாக்கியங்களைக் கொண்டு திருஷ்டாந்தப் படுத்தினான்." (அப். 18:24) அதின் விளைவாக அங்கே ஒரு சிறு சீஷர் கூட்டம் பிறந்தது. ஆனால் அது எபேசுவின் எழுப்புதல் அல்ல! இன்று நமது நாட்

டிலும் அப்பொல்லோக்களின் ஊழியம் நடந்து கொண்டுதான் இருக்கிறது. அதனால் ஒருசில சீஷர்கள் அங்குமிங்கும் எழும்பிக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆவியில் அனலுள்ளவர்களாய் கர்த் தருடைய வசனத்தை தெளிவாய் பிரசங்கிக்கிற ஊழியர்கள், மற்ற நாடுகளை விட இந்தியாவில் அதிகமாகவே இருக்கிறார்கள். உல கத்தின் பல பகுதிகளுக்கு சென்று வந்த ஊழியர்களை நான் கண் டிருக்கிறேன், இந்தியாவில் ஆழமாய் பிரசங்கிக்கிறவர்கள் இருப்பதுபோல, மற்ற நாடுகளில் இல்லை என்று அவர்கள் பெரு மையோடு சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால் இன்னும் நமது நாட்டில் பெயர்க் கிறிஸ்தவர்கள் உட்பட, நாம் மிகக் குறைவான வர்களாய் இருக்கிறோமே, அதன் காரணம் என்ன? இத்தனை கூட் டங்களும், மிஷனரிப் பணிகளும் தேசத்தில் எழும்பின பிறகும் நாம் சிறுபான்மையினராய் இந்தியாவின் ஒரு மூலையில் முடங்கிக் கிடக் கக் காரணம் என்ன?

நான் வட இந்தியாவில் ஆத்தும பாரத்தோடும், கண்ணீரோ டும் மிஷனரியாக இருந்தவன். மத்தியப் பிரதேசத்தில் ஒரு கிராமத் தில் நாங்கள் ஒரு சின்ன மிஷனரிக் குழுவாக இருந்தோம். அந்தப் பகுதிகளில் பல ஆண்டுகளாக கிறிஸ்தவ மிஷனரிகள் உழைத்திருக் கிறார்கள். அங்கு கொடுத்த சுவிசேஷப் புத்தகங்களும், கைப்பிரதி களும் எண்ணிக்கைக்கு அடங்காதவை. அவைகளை எல்லாம் சேகரித்தால் இரண்டு மூன்று லாரிகளில் நிரப்பலாம் என்று அப் குதிகளில் ஊழியம் செய்தவர்கள் எங்களுக்குச் சொன்னார்கள். ஆனால் நாங்கள் இருந்த இடத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில், பெயர் சொல்லக்கூட ஒரு கிறிஸ்தவரும் கிடையாது. அந்த நாட்க ளில் எங்களுடைய ஆவிக்குரிய கண்களை கர்த்தர் திறந்தார். புற ஜாதியாரை வெறுமனே வார்த்தையினால் அல்ல, செய்கையாலும், அற்புதங்களாலும் மட்டுமே கீழ்ப்படுத்த முடியும் என்பதைக் கண் டுபிடித்தேன். தேவனுடைய டுனாமிஸ் வெளிப்பட்டால் மட்டுமே, இந்தியாவை இயேசுவுக்குச் சொந்தமாக்க முடியும் என்று அறிந் தேன். அன்று முதல் இன்று வரை இந்த உணர்வு என் உள்ளத்தில் நாளுக்கு நாள் பெருகிவருகிறது.

நாம் செய்யும் பிரசங்கத்தையும், கர்த்தருடைய வசனங்களை யும் கர்த்தர் உறுதிப்படுத்த வேண்டும். கர்த்தருடைய வசனத்திற்கு வேறு ஒரு உறுதி தேவையா? அவைகள் புடமிட்ட வசனங்கள் ஆயிற்றே, என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் வேதம் அப்படித் தான் சொல்லுகிறது. அப்போஸ்தலர்கள் ஊழியத்தைக் குறித்து வேதம் சுருக்கமாய் சொல்வதைச் சிந்தியுங்கள். "அவர்கள் புறப்பட் டுப் போய், எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனே கூடக் கிரியை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே

வசனத்தை உறுதிப்படுத்தினார்". (மாற். 16:20). புறஜாதியார் நடுவில் நாம் சொல்லும் ஒவ்வொரு வார்த்தைகளையும், இப்படி உறுதிப்படுத்தவே அவர் நம்முடனே இருக்கிறார். அவர் கூட இருந்து கிரியை செய்ய விரும்புகிறார். இதை விசுவாசித்து அவருக்கு உடன் ஊழியராய் செயல்படுவோர் வாழ்க்கையில், கர்த்தர் இன்றும் அற்புதங்களைச் செய்து ஆத்துமாக்களைக் குவிக்கிறார்.

அப்பொல்லோவின் ஊழியம் எபேசுவில் ஓரளவு பலன் தந்தது. ஆனால் அந்த நாட்டில் அநேகரைக் கர்த்தரிடத்தில் திருப்ப வேண்டுமானால் பவுல்கள் அங்கு வந்தாக வேண்டும். ஏன் தெரியுமா? எபேசுப் பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்த பட்டணம். மந்திரவாதிகளும், மாயவித்தைக்காரர்களும் மலிந்து கிடந்த பட்டணம். கோவில் பெயரைச் சொல்லி மக்கள் மிகுந்த ஆதாயத்தைக் குவித்துக் கொண்டிருந்த பட்டணம். வேறு விதத்தில் சொன்னால் இன்றைய இந்தியாவைப்போலவே இருந்த பட்டணம் அது. இங்கே பவுல் வந்தான். சில சீஷரைக் கண்டான். அவர்களைப் பார்த்தவுடன் அவன் முதலாவது கேட்ட கேள்வி என்ன தெரியுமா? பரிசுத்த ஆவியைப் பற்றியதுதான். *"நீங்கள் விசுவாசிகளானபோது பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா என்று கேட்டான், அதற்கு அவர்கள்: பரிசுத்த ஆவி உண்டு என்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார்கள்". (அப். 19:2)* எபேசுவின் சீஷரைக் கண்டு, நீங்கள் இயேசுவை நேசிக்கிறீர்களா, வேதம் வாசிக்கிறீர்களா, ஜெபம் செய்கிறீர்களா, ஊழியம் செய்கிறீர்களா என்று கேட்காமல் பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா என்றுதான் கேட்டான். அவன் உள்ளத்தில் எபேசுப் பட்டணத்தின் இரட்சிப்பைக் குறித்து ஒரு திட்டம் இருந்தது. இருக்கும் ஒரு சிலரை பரிசுத்த ஆவியின் வல்லமைக்குள் நடத்தி, அவர்கள் மூலம் அற்புத அடையாளங்களோடு கிறிஸ்துவின் ஊழியத்தை செய்யவேண்டும் என்பதுதான் அது. ஆனால் அந்தச் சீஷர்களோ பரிசுத்த ஆவி உண்டு என்பதை கேள்விப்படவே இல்லை. இன்றும் இந்தியாவில் பல தேவப் பிள்ளைகளுக்கு பரிசுத்த ஆவியைக் குறித்த போதிய அறிவு கிடையாது. பரிசுத்த ஆவியானவர் உண்டு என்று விசுவாசிக்கிறோம் என்று ஒவ்வொரு ஞாயிறு ஆராதனைகளிலும் சொல்லுவது வேறு, ஆனால் பரிசுத்த ஆவியானவரை நெருங்கிய நண்பராக்கி அறிந்து பழகுவது வேறு. இரட்சிக்கப்பட்ட பொழுதே பரிசுத்த ஆவியானவர் வந்து விட்டார் என்று மனப்பால் குடிப்பது வேறு, பரிசுத்த ஆவியின் வல்லமையை வாழ்விலும், ஊழியத்திலும் அனுபவிப்பது வேறு. அனலாய் பிரசங்கிப்பது வேறு, அற்புதங்களோடு பிரசங்கிப்பது வேறு. அப்பொல்லோவின் ஊழியம் வேறு, பவுலின் ஊழியம் வேறு.

கிறிஸ்துவைக் கேட்டுப் பாருங்கள். அவர் உங்களுக்கு இந்த வித்தியாசத்தைச் சொல்லித் தருவார். தாயின் கர்ப்பம் முதல் தேவனுக்குப் பரிசுத்தராய் வாழ்ந்தவர் அவர். பன்னிரு வயதிலேயே தேவனுடைய வசனத்தைக் கற்றுத் தேர்ந்தவர் அவர். தாயின் கர்ப்பத்தில் உருவாகும்பொழுதே பரிசுத்த ஆவியினால் பிறந்தவர் அவர். அதனால் அவர் இவைகளை மாத்திரம் நம்பி ஊழியத்திற்குப் புறப்பட்டாரா? ஆவியில் பிறந்துவிட்டால் போதும், அதை நம்பியே தேவனுடைய ஊழியத்தைச் செய்துவிடலாம் என்று நினைத்தாரா? பரிசுத்தமாய் வாழ்ந்துவிட்டால் போதும், இந்த வாழ்க்கையைப் பார்த்தே புறஜாதிகள் மனம் திரும்புவார்கள் என்று இருந்துவிட்டாரா? கர்த்தருடைய வசனத்தைக் கற்றுத் தேர்ந்துவிட்டேன்; இதை வைத்து அனலுள்ளவனாய், வசனச் செறிவோடு பிரசங்கித்து, ஆத்துமாக்களை இரட்சித்துவிடுவேன் என்று துணிகரம் கொண்டாரா? இல்லவே இல்லை. பரிசுத்த ஆவியானவரின் வல்லமைக்காகக் காத்திருந்தார். உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்பட விரும்பினார். வேளை வந்தபோது யோவானிடம் சென்று எல்லா நீதியையும் நிறைவேற்ற திருமுழுக்கும் பெற்றார். அதோடு நில்லாமல் பரலோக புறா தம் மேல் வந்து அமரும்படி முழங்காலில் நின்றார். அன்று முதல் அவரது ஊழியம் அற்புத அடையாளங்களால் நிறைந்தது. அவரிடத்தில் கூடி வந்த மக்கள் வெறுமனே தேவ வசனத்தைக் கேட்க மட்டும் கூடி வரவில்லை. ***"திரளான ஜனங்கள் அவருடைய உபதேசத்தைக் கேட்பதற்கும், அவராலே தங்கள் பிணிகள் நீங்கிச் சவுக்கியம் அடைவதற்கும் கூடி வந்தார்கள்"***. (லூக்.5:15) அவர் சென்றவிடமெல்லாம் பிசாசுகள் அலறின. வியாதிகள் விலகின, சப்பாணிகள் நடந்தனர், ஊமையர் பேசினர், திரள் கூட்ட மக்கள் அவரது அற்புத அடையாளங்களைக் கண்டு அதிசயித்து நின்றனர். இயேசு மெய்யாகவே பரிசுத்த ஆவியானவரையும், அவரது வல்லமையையும் குறித்து சரியான அறிவுள்ளவராய் இருந்தார். அதை அனுபவிக்கவும் செய்தார். இன்று அநேகர் பரிசுத்த ஆவியானவரைக் குறித்து அறிந்துகொண்டோம் என்று மார்தட்டுகிறார்கள். சிலர் பெற்றுக் கொண்டோம் என்றும் பெருமை பேசுகிறார்கள். ஆனால் அப்போஸ்தலரும், பவுலும், கிறிஸ்துவும் பரிசுத்த ஆவியானவரை அறிந்ததுபோல நாம் அறிந்து கொள்ளவில்லையே!

மீண்டும் எபேசுவிற்கு வருவோம். பரிசுத்த ஆவியைக் குறித்து கேள்விப்படவே இல்லை என்று அந்தச் சீஷர்கள் விழித்தார்கள். உடனே பவுல் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான். `இரட்சிக்கப்பட்டீர்கள், ஞானஸ்நானம் பெற்றீர்கள் அது போதும் நேரே ஊழியத்திற்குப் புறப்படுங்கள் என்று

... சிந்தித்துப் பாருங்கள்! வேதம் என்ன ... "அப்பொழுது பவுல் அவர்கள் மேல் கைகளை வைத்த... பரிசுத்த ஆவி அவர்கள் மேல் வந்தார்; அப்போது அவர்கள் ... பேசித் தீர்க்கதரிசனம் சொன்னார்கள். அந்த மனுஷர் ... ஏறக்குறைய பன்னிரண்டு பேராயிருந்தார்கள்". இவர்க... எபேசுவில் ஊழியம் பரவத் தொடங்கியது. ... செய்து ஊழியத்திலேயே, ஆசியாவில் குடி... தேவ வசனத்தைக் கேட்டார்கள். மாபெரும் ... போது, தேச மக்களை பயம் கவ்விப் ... "பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் ... அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும், கச்சை... கொண்டு வந்து வியாதிக்காரர் மேல் போட வியாதிகள் ... விட்டு நீங்கிப் போயின; பொல்லாத ஆவிகளும் அவர் ... விட்டுப் புறப்பட்டன" (அப். 19:11,12) இயேசுவின் நாமம் ... திரள்கூட்ட மக்கள் விசுவாசித்தார்கள். மாயவித்... மனம் திரும்பினார்கள். மந்திரப் புத்தகங்கள் ஆயி... எரிக்கப்பட்டு சாம்பலாயின. கோயில் பூசாரிகளும், ... வடித்த தொழிலாளிகளும் நடுங்கினார்கள். தங்கள் ... அபாயம் என்று அபயமிட்டார்கள். மகாதேவியின் ... மறுக்கப்பட்டுப் போகும் என்று மனம் கலங்கினார்கள். ... எண்ணிப்பார்க்கவே முடியவில்லை. இதுதான் டுனாமிஸ ... இதுதான் டுனாமிஸ் ஊழியம். இதுதான் டுனாமிஸ் அறு... கர்த்தருடைய வசனம் மிகுந்த பலமாய் இந்தியாவில் விருத்... மேற்கொள்வதற்கு வேறு குறுக்குவழியே இல்லை. (அப். ...) இத்தகைய பவுலின் ஊழியம்தான் இன்று இந்தியாவுக்கு ... அவசரமும் ஆகும். இதற்கு உங்களை தயார் செய்யத் ... இன்று ஆவியானவர் என் மூலம் உங்களோடு பேசுகிறார். ... இத்தகைய எழுப்புதலை இந்தியாவுக்குத் தாரும் என்று நாம் கேட்...

நாம் பெற்ற பரிசுத்த ஆவியின் வல்லமை, நாம் நினைப்பதை ... ஆயிரம் மடங்கு பெரியது! பரிசுத்த ஆவியைப் பெற்ற மனிதன் ...சாதாரணமாய் வாழத் தேவையில்லை. வேதம் முழுவதிலும் தேடிப் ...ங்கள். கர்த்தருடைய ஆவியைப் பெற்ற எந்த மனிதராவது ...சாதாரணமாய் ஊழியம் செய்தார்களா? சிந்தியுங்கள்! கர்த்தரு... ஆவியானவர் வேதாகம பக்தர்மேல் வந்த பொழுதெல்லாம், ...சாதாரணத்திற்கு அப்பாற்பட்ட எதையாவது ஒன்றைச் செய்தார்கள் ... வேதத்தை திறந்த மனதோடு வாசிப்பவர்களுக்கு இந்த ... விளங்கும். அதிசயங்களையும், அற்புதங்களையும் செய்யாத

தேவ ஊழியர்களை வேதத்தில் பார்க்க முடியவில்லை. தேவனுடைய மனுஷன் என்று சொன்னாலே தேவனுடைய வல்லமையும், அற்புதங்களும் நிறைந்தவன் என்றுதான் பொருள். நாம் தேவமனுஷர்கள் என்பதை உலகம் அறிந்து கொள்ள வேண்டுமானால், நமது சாதாரண வாழ்க்கையில் திருப்தியடைவதை நிறுத்த வேண்டும். போலி அற்புதங்களைச் செய்யும் மனிதர்களை நமது நாட்டு மக்கள் தெய்வத்தின் அவதாரம் என்றே கும்பிடுகிறார்கள். மனித உள்ளம் தேவனையும் அற்புதத்தையும் இணைத்தே பார்க்க விரும்புகிறது. இயற்கைக்கு அப்பாற்பட்டவைகளை காணத் துடிக்கிறது. அதனால் தான் சாத்தான் நமது நாட்டை போலி அற்புதங்களாலும், அதிசயங்களாலும் ஏமாற்றுகிறான். அருவருப்பான மக்களை தமது அசுத்த வல்லமையினால் நிறைக்கிறான். அவர்கள் வாழ்க்கை எவ்வளவு சீர் கெட்டதாயிருந்தாலும் திரள் கூட்ட மக்கள் தெய்வமென நம்பி அவர்கள் காலில் விழுந்து கும்பிடுகிறார்கள். இதைக் கண்டு நாம் எரிச்சல் அடைவது மட்டும் போதாது. உண்மையான தேவ மனுஷர்கள் நாம்தான் என்பதை புறஜாதிகளுக்கு புலப்படுத்தியாக வேண்டும்.

அதை எப்படிச் செய்வது? எலியாவைப் பாருங்கள். புறஜாதிப்பட்டணமான சாறிபாத்தில் ஒரு விதவையைச் சந்தித்தான். பஞ்ச காலத்தில் தேவனுடைய அபிஷேக வல்லமையினால் அவள் குடும்பத்தைப் போஷித்தான். பானையில் இருந்த மாவும், கலசத்தில் இருந்த எண்ணையும் எடுக்க எடுக்க குறையாது வளர்ந்தது. அவள் உள்ளம் அற்புதத்தைக் கண்டு நெகிழ்ந்தது. எலியா ஒரு தேவ மனுஷன் என்பதை அவள் கண்டுபிடித்தாள். ஒருநாள் அவளது ஒரே மகன் வியாதிப்பட்டு மரணமடைந்தான். "**அப்பொழுது அவள் எலியாவை நோக்கி: தேவனுடைய மனுஷனே, எனக்கும் உமக்கும் என்ன? என் அக்கிரமத்தை நினைக்கப் பண்ணவும், என் குமாரனைச் சாகப் பண்ணவுமா என்னிடத்தில் வந்தீர்? என்றாள்**". (1 ராஜா. 17:18) எலியாவை, தேவனுடைய மனுஷனே என்று அவள் அழைத்ததைப் பாருங்கள்.

எலியா உடனே மரித்த சடலத்தின் மேல் மூன்று தரம் முகம் குப்புற விழுந்து விண்ணப்பம் பண்ணினான். அவனுக்குள்ளிருந்த கர்த்தருடைய ஜீவனும், பரிசுத்த ஆவியானவரின் அசாதாரண வல்லமையும் சடலத்துக்குள் பாய்ந்தது. சடுதியில் அவனது குரலைக் கேட்ட கர்த்தர், பிள்ளையின் உயிரை திரும்ப அனுப்பினார். அவன் பிள்ளையைத் தாயினிடம் கொண்டு வந்து, பார் உன் பிள்ளை உயிரோடு இருக்கிறான் என்று பெருமிதத்தோடு பேசினான். அப்பொழுது அந்த ஸ்திரீ சொன்ன வார்த்தையை தியானித்துப் பாருங்கள். "**அப்பொழுது அந்த ஸ்திரீ எலியாவை நோக்கி: நீர் தேவ**

முடைய மனுஷன் என்றும், உம்முடைய வாயிலிருந்து பிறக்கும் கர்த்தரின் வார்த்தை உண்மை என்றும், இதினால் இப்போது அறிந்திருக்கிறேன் என்றாள்". (1 ராஜா. 17:24) எலியா ஒரு தேவனுடைய மனுஷன் என்பதையும் அவன் வாயில் புறப்படும் வார்த்தை கர்த்தருடைய வார்த்தை என்பதையும் இப்பொழுதுதான் அறிந்தாளாம்! இதினால் இப்போது அறிந்திருக்கிறேன் என்றாள். இதை வாசிக்கும்பொழுதெல்லாம் எனக்கு வேடிக்கையாயிருக்கும். முன்னமே எலியாவை "தேவனுடைய மனுஷனே" என்று அவள் சொன்னாளே. எலியாவின் வார்த்தைகள் உண்மை என்று கண்டாளே. ஆனால் இப்பொழுது திடீரென்று ஒரு புது வெளிப்பாடு பெற்றவளைப் போல இதினால் இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்று எப்படிச் சொல்லுகிறாள்? ஆம், நமது ஊழியத்தில் அற்புதங்கள், அடையாளங்களைக் காணும்போது மக்கள் நம்மை தேவ மனுஷர்கள் என்று கொஞ்சமும் சந்தேகம் இன்றி விசுவாசிக்கிறார்கள். நமது வாயிலிருந்து வரும் வார்த்தைகள் முற்றிலும் உண்மையானது என்று ஒத்துக் கொள்கிறார்கள். இதற்குத்தான் அற்புத அடையாளங்களை நாம் நாடவேண்டும். அவைகளில் நாளுக்கு நாள் நாம் தேறவும் வேண்டும். கொஞ்சத்தில் நாம் திருப்தியடையவே கூடாது. உண்ணவும், உடுக்கவும் இருந்தால் போதும் என்று திருப்தியடையலாம். ஆனால், அபிஷேக ஊழியத்தில் கொஞ்சத்தில் நாம் திருப்தியடையவே கூடாது. ஆவியானவரின் அற்புதங்கள் நாளுக்கு நாள் பெருக வேண்டும் என்று நாம் எதிர்பார்க்க வேண்டும். வேதத்தின் தேவ மனுஷர்கள் அற்புத அடையாளங்களால் தங்களை தேவ மனுஷர்கள் என்று நிரூபித்துக் காட்டினார்கள். நாம் எப்படி நிரூபிக்கப் போகிறோம்?

பவுலைப் பாருங்கள், அவன் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை இல்லாமல் ஊழியம் செய்வதை விரும்பவே இல்லை. தன் சுய ஞானத்திலும், தன் சுய பெலத்திலும் ஊழியம் செய்து விடுவோமோ என்று அவன் பயந்தான். அவன் ஒரு வேத பண்டிதன், கமாலியேல் என்னும் பேராசிரியர் பாதத்தில் பாடம் படித்த பெருமை பெற்றவன். தாலந்துகளும், திறமைகளும் நிறைந்தவன். அவன் மனிதருக்கும் பயப்படவில்லை. சாத்தானுக்கும் பயப்படவில்லை. அரசர்களுக்கும் அஞ்சவில்லை. ஆனால் அவனுக்குள் ஒரு பயம் மட்டும் எப்பொழுதும் இருந்தது. அது என்ன பயம் தெரியுமா? தன் சொந்த ஞானத்திலும், திறமையிலும் ஊழியம் செய்து மக்களுடைய உணர்ச்சிகளைத் தூண்டி, சிந்தனையைக் கிளறி அதன் மூலம் அவர்களைக் கிறிஸ்துவண்டை நடத்திவிடக்கூடாதே என்று நடுங்கினான். "சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்தபோது, தேவனைப் பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது அறிவிக்

கிறவனாக வரவில்லை. இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்க தீர்மானித்திருந்தேன். அல்லாமலும் நான் பலவீனத்தோடும் பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும் உங்களிடத்தில் இருந்தேன். உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு, என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது." (1 கொரி. 2:1–5) பவுலின் பயத்தையும் நடுக்கத்தையும் பார்த்தீர்களா? இந்த பயம் ஒவ்வொரு சாதுரியப் பிரசிங்கிமாருக்கும் இன்று இருக்கவேண்டியது அவசியம். பவுல் ஒவ்வொரு முறையும் இந்தப் பயத்தோடுதான் பிரசங்கித்திருப்பான். தேவனை நோக்கி இப்படிக் கதறியிருப்பான்: "ஆண்டவரே, நான் நியாயப்பிரமாணத்தில் தேறினேன், அதிகம் படித்தவன் நான். அதனால் பிரசங்க மேடையில் ஏறும்போதெல்லாம் எனக்கு ஒரு சோதனை வருகிறது. சிறந்த வசனிப்போடும் மடைதிறந்த வெள்ளம் போலவும் என் வார்த்தைகள் புரண்டு வந்து விழும். அப்போது என்னுடைய சுய ஞானத்தில் நான் பிரசங்கித்தால் மக்களுடைய விசுவாசம் என் ஞானத்தில் அல்லவா கட்டப்படும்? அது நிரந்தரமாகாதே! என்னுடைய வார்த்தைகள் எல்லாம் உமது ஆவியினால் உமது பெலத்தினால் உறுதிப்படுத்தப்பட வேண்டுமே," என்று கதறியிருப்பான். தேவன் அந்த விண்ணப்பத்தைக் கேட்டு மகிழ்ந்திருப்பார். இத்தகைய பவுல்களைத்தான் கர்த்தருடைய உள்ளம் இன்றும் நாடுகின்றது.

விசுவாசிகளைச் சந்திக்கும் போதெல்லாம் அவன் அழகான பிரசங்க குறிப்புகளோடு மட்டும் செல்லவில்லை. "நீங்கள் ஸ்திரப்படுவதற்காக ஆவிக்குரிய சில வரங்களை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கும்" எனக்கு நல்ல பிரயாணம் கிடைக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுங்கள் என்று சபையாரை கேட்கிறான். அவன் எங்கு சென்றாலும் அவனுக்குள்ளிருக்கும் அபிஷேக வல்லமையின் மூலம், ஆவிக்குரிய வரங்கள் விசுவாசிகளுக்குக் கிடைத்தது. கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தோடு மட்டுமல்ல, அதன் சம்பூரண ஆசீர்வாதத்தோடும்தான் அவன் மக்களைச் சந்தித்தான். (ரோம. 1:10–12;15:29) அவன் கரங்களை வைத்தபோது மக்கள் அபிஷேக வல்லமையையோ, வரங்களையோ, அற்புத சுகத்தையோ, விடுதலையையோ பெற்றார்கள். இத்தகு ஊழியர்களைத்தான் கர்த்தர் இன்றும் தேடுகின்றார். கைப்பிரதிகளைக் கொடுப்பதற்கு தேவ வல்லமை தேவையில்லையே! மனம் திரும்பாதவர்கள் கூட இதை ஒரு தொழிலாகக் கருதி, சுவிசேஷப் புத்தகங்கள் விற்பதை நீங்கள் பார்த்ததில்லையா? இயேசுவைக் குறித்த நற்செய்தியைச் சொல்லு

... மட்டும் தேவ வல்லமை தேவையா? வேத அறிவும், புத்திக் ... இருந்தால் இயேசுவைப் பிரசங்கிக்க முடியாதா? கொஞ் ... நகைச்சுவையும், உணர்ச்சிகளைத் தூண்டும் சம்பவங்களையும் ... மனிதருடைய மனதைக் கவர்ச்சிக்க முடியாதா? இப்படிப் ... பிரசங்கங்களை மக்கள் நம்பி, கர்த்தரை மேலோட்டமாய் ... செய்வதும் சாத்தியம்தான். இதற்காகவா பரிசுத்த ... அவருடைய வல்லமை? "**பரிசுத்த ஆவியானவர் வரும்பொழுது ... பெலனடைந்து . . . பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் ... களாய் இருப்பீர்கள்**" என்று கிறிஸ்து சொன்னபொழுது எந்த ... தை அவர் நினைத்தார்? தேவனுடைய வல்லமையும், அற் ... அடையாளங்களும் இல்லாத ஊழியத்தையா?

இப்படிச் சொல்வதால் கர்த்தருடைய வசனத்தை போதிக்க ... ம் என்று நான் சொல்லவில்லை. கர்த்தருடைய வசனத்தில் ... டைய வல்லமை இருக்கிறது. கிறிஸ்துவின் சுவிசேஷத்தி ... தேவ பெலன் இருக்கிறது. அதை நான் மறுக்கவில்லை. பவு அதை ஒப்புக் கொள்கிறான். "**கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் ... து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும், பின்பு கிரேக்கரிலும் ... விசுவாசிக்கிறவன் எவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது ... பெலனாய் இருக்கிறது**" (ரோம 1:16) என்று திட்டமாய்க் ... ன். சுவிசேஷத்தை அபிஷேகத்தோடு அறிவிக்கும்பொழுது ... சுவிசேஷச் செய்தியே தேவ பெலனாக மாறுகிறது என்பதை விசுவாசித்தான். ஆனால் அதில் மட்டுமே அவன் திருப்திய ... தானா? சுவிசேஷத்தின் சம்பூரண ஆசீர்வாதங்களையும், அற் அடையாளங்களையும் அவன் நாடவில்லையா? ஆம், ... தும் வேண்டும், செய்கையும் வேண்டும். சிலர் தேவனுடைய ... த்தை தெளிவாகப் பிரசங்கிப்பதிலேயே திருப்தியடைந்துவிட் ... அதுதான் எங்கள் ஊழியம் என்று ஏறத்தாழ எல்லோருமே ... ந்துவிட்டனர். வேறு சிலரோ கர்த்தருடைய வசனத்தைத் ... ய் போதியாமல் வெறும் அற்புத அடையாளங்களை மட் ... டி மக்களை கிறிஸ்துவுக்குள் கட்டி எழுப்பிவிடலாம் என்று ... கின்றனர். ஆனால் வேதமோ இவைகளையும் செய்ய வேண் ... அவைகளையும் விட்டு விடாதிருக்க வேண்டும் என்று சொல்லு ... கிறிஸ்துவண்டை வந்தவர்கள் அவரிடம் தேவ வசனத்தைக் ... கவும் வந்தார்கள், அற்புதங்களைப் பெறவும் வந்தார்கள். பிர ... உங்களுக்கு உதவி செய்யும் அதே அபிஷேகம், உங்கள் ... அற்புதங்களையும் செய்யும் என்று ஏன் நீங்கள் எதிர்பார்க் ... பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையை எத்தனை ... உங்கள் அவிசுவாசத்தினால் மட்டுப்படுத்தப் போகிறீர்கள்?

வேலையாட்களோ கொஞ்சம்

கிறிஸ்து [illegible] மக்களுக்காக மனம் உருகி அர் [illegible] ஆசையோடு தேடுகின்றார். அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம் என்று இயேசு வேத [illegible] எப்படிப்பட்ட ஆட்களை நினைத்தார்? [illegible] ஆத்துமாக்களைத் தேடி அவரது [illegible] சொல்லுவோரைத்தான் 'கொஞ்சம்' என்று இயேசு சொன்னார் என்று நினைத்தேன். ஆனால் பிறகுதான் அவர் எப்படிப்பட்ட வேலையாட்களை எதிர்பார்க்கிறார் என்பது எனக்குப் புரிந்தது. தயவு செய்து கிறிஸ்து, "யாரை கொஞ்சம்" என்று சொல்லுகிறார் என்று பாருங்கள். திறந்த மனதோடு அந்த வேதப் பகுதியை தியானித்தால் நிச்சயம் அவரது உள்ளக் கதறல் நமக்கு விளங்கும். "பின்பு இயேசு சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி நடந்து, ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும், சகல நோய்களையும் நீக்கி, அவர்களைச் சொஸ்தமாக்கினார். அவர் திரளான ஜனங்களைக் கண்ட பொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலத் தொய்ந்து போனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள் மேல் மனதுருகி, தம்முடைய சீஷர்களை நோக்கி, அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம், ஆதலால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார். அப்பொழுது, அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷர்களையும் தம்மிடத்தில் வரவழைத்து அசுத்த ஆவிகளைத் துரத்தவும் சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்". (மத். 9:35–38; 10:1) இந்த வசனங்களை கூர்ந்து கவனித்தால் மாபெரும் உண்மை ஒன்று நமக்குப் புலப்படும். வியாக்கியானச் சட்டப்படி ஒரு குறிப்பிட்ட வசனத்தை மட்டும் எடுத்து பொருள் காண்பது தவறு. அந்த வசனம் எந்த இடத்தில் வருகிறது என்று அந்த முழுப் பகுதியையும் சேர்த்து பொருளை உணரவேண்டும். இங்கே கவனியுங்கள். இயேசு சகல பட்டணங்களிலும், கிராமங்களிலும் உபதேசித்து, பிரசங்கித்து, சகல வியாதிகளையும் சொஸ்தமாக்கிக் கொண்டு இருந்தார். அதனால் திரள் கூட்ட மக்கள் அவரை மொய்த்துக் கொண்டனர். அந்த மக்களின் தேவை அத்தனை பெரியது! அந்த மக்களை கிறிஸ்து உற்றுப் பார்த்தார். அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல தொய்ந்து போய்க் கிடந்தார்கள். வியாதிகள் அவர்களைக் கொடுமைப்படுத்தியது. வறுமை அவர்களை வதைத்தது. துயரம் அவர்களைத் துவளச் செய்தது. ஆனால் அவர்கள் தேவையைச் சந்திக்க மேய்ப்பர்கள்தான் இல்லை. இதைக் கண்ட

...அவர் மனம் உருகியது. அவரது பாசம் கண்களைக் குளமாக் ... மன வேதனையோடு தமது சீஷர்கள் பக்கம் திரும்பி ... மிகுதி வேலையாட்களோ கொஞ்சம்" என்று சொல்லி ... வேலையாட்களை அனுப்பும்படி வேண்டிக்கொள்ளச் சொன்னார். ... நாட்களில் பல இரவுகள் தேவ சமூகத்தில் செலவிட்டார். ஒரு ... அதிகாலை தமது பன்னிரண்டு சீஷர்களையும் அழைத்தார். ... அசுத்த ஆவிகளைத் துரத்தவும் சகல நோய்களையும் குண ... க்கவும் அவர்களுக்கு வல்லமையும், அதிகாரமும் கொடுத்தார்.

இதைக் கோர்வையாக வாசித்துப் பாருங்கள். வேலையாட்கள் ... என்று இயேசு யாரைக் குறித்துச் சொன்னார்? அவர் ... த்தில் வேதத்தில் தேறின வேதபாரகர்கள் இல்லையா? ஆசா ...கள் இல்லையா? பரிசேயர்கள் இல்லையா? பின் ஏன் அப்படிச் ...னார்? தம்மைப் போலவே மக்களுக்கு மனதுருகி நன்மை ... வேலையாட்கள்தான் இல்லை என்று சொன்னார்: வெறு ... உபதேசத்தோடு நில்லாமல் தம்மைப் போலவே மக்களின் ...களை குணமாக்கும் வல்லமை பெற்றோர் இல்லை என்று ...னார் அதிகாரத்தோடும், அபிஷேகத்தோடும் அற்புதங்களைச் ...வோர் இல்லை என்று சொன்னார். அதனால்தான் உடனே ... சீஷர்களை அழைத்து அவர்களுக்கு அதிகாரமும், வல்லமையும் ...டுத்து அனுப்பினார். ஆம், அருமையானவர்களே, "இன்றைக்கு ...தியாவில் அறுவடைக்கு ஆட்கள் இல்லை என்று சொல்வதை ... தேவனுடைய வல்லமையோடு அறுவடைக் களத்திற்குள் ...யும் ஆட்கள் இல்லை என்பதுதான் மிகவும் பொருத்தம். இந்த ...த்திற்கு நாம் இனியும் நம்முடைய கண்களை மூடிக் கொள் ... கூடாது." வெறும் பிரசங்க ஊழியத்தில் திருப்தியடைந்துவிடக் ...து. இயேசுவை விட திறமையான பிரசங்கிகள் யார் இருக்கக் ... அவரே "நீங்கள் அடையாளங்களையும், அற்புதங்களையும் ...ணாவிட்டால் விசுவாசிக்க மாட்டீர்கள்" என்றாரே! நாம் வெறும் ...சங்கத்தில் மக்களை விசுவாசிக்கச் செய்து விடலாம் என்று ...னைக்கலாமா? அவரைவிட நாம் ஆற்றல் வாய்ந்த பிரசங்கிகளா? ...ல்லவே! தயவு செய்து யோசித்துப் பாருங்கள்.

...டளை

...றிந்து தாம் அழைத்த பன்னிருவருக்குமே தமது வல்லமை ...யும், அதிகாரங்களையும் கொடுத்தார். அது மட்டுமா, தாம் ...ரம்பின எழுபது சீஷர்களுக்கும் வியாதிகளைக் குணமாக்கும் அதி ...த்தைக் கொடுத்தார். இவைகளை நாம் ஏனோ தானோ என்று ...ள்ளிவிட முடியுமா ? இயேசு தமது பன்னிரு சீஷர்களை அனுப்

பும் பொழுது அவர் கட்டளையிட்டுச் சொன்னதைக் கவனியுங்கள். இந்தப் பன்னிருவரையும் இயேசு அனுப்புகையில், அவர்களுக்குக் கட்டளையிட்டுச் சொன்னது என்ன வென்றால் ... பரலோக ராஜ்யம் சமீபத்திருக்கிறது என்று பிரசங்கியுங்கள். வியாதியுள்ளவர்களை சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம் பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள், இலவசமாய் பெற்றீர்கள் இலவசமாய்க் கொடுங்கள். (மத். 10:7,8) போங்கள் என்பது கட்டளையானால், வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள் என்பதும் கட்டளைதானே? கர்த்தருடைய கட்டளை என்று அடிக்கடி சொல்லுகிறவர்கள் இதை மட்டும் ஏறத்தாழ வலியுறுத்தாமல் விட்டுவிடுவது ஏன்?

நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, ஞானஸ்நானம் கொடுங்கள் ... நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் என்பதும் இறுதிக் கட்டளை இல்லையா? (மத். 28:19,20) கட்டளையிட்ட **யாவையும்** என்பதில் வியாதிகளைச் சுகமாக்குவதும் பிசாசுகளைத் துரத்துவதும் அடக்கமில்லையா? ஏன், ஒரு சத்தியத்தை வலியுறுத்துபவர்கள், அடுத்த சத்தியத்திற்கு வாய் மூடி விடுகிறார்கள்? இதனால்தான் கிறிஸ்து கட்டளையிட்டு இரண்டாயிரம் ஆண்டுகள் ஆன பின்பும், தேசங்களை நற்செய்தி மயமாக்க முடியவில்லை என்பதை தாழ்மையோடு ஒப்புக் கொள்ளுகிறீர்களா? இன்று நடைபெறும் ஊழியங்கள் எல்லாவற்றிற்காகவும் நான் நன்றி சொல்லுகிறேன். இந்த அப்பொல்லோக்களும் இல்லாவிட்டால் தேசத்தில் ஒருவர் கூட கிறிஸ்துவண்டை வந்திருக்க முடியாது. ஆனால் தேசத்தின் மாபெரும் தேவைக்கு முன், இவைகள் எல்லாம் கடலில் கரைத்த பெருங்காயம் போலத்தான். இன்னும் இரண்டாயிரம் ஆண்டுகள் ஆனாலும் இந்த வேகத்தில் நாம் சிறு நடைபோட்டால் இந்தியாவை எப்படி பிடிக்க முடியும்? இது சிற்றுளி கொண்டு இமயத்தை பெயர்க்கும் கதையாக முடியும் அல்லவா? ஏதோ, நமது திருப்திக்கு ஒரு சில கற்களை உடைத்தெறியலாம். ஆனால் இமயம் இமயமாகத்தான் இருக்கும். அதனால் தான் கர்த்தர், உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரை நீங்கள் எருசலேமை விட்டுப் போகாதிருங்கள் என்று கட்டளையிட்டார். டுனாமிஸ் என்னும் வெடிகுண்டுகளை வைத்துத்தான் இமயமலையை நாம் தகர்க்க வேண்டும். இத்தகு வல்லமையுள்ள ஊழியர்களைத்தான் கர்த்தர் இன்றும் நாடுகிறார்.

உங்கள் அழைப்பு எதுவாய் இருந்தாலும் இந்த வல்லமையை நாடுங்கள். நீங்கள் ஒரு வேளை அப்போஸ்தலர்களாய் இருக்கலாம், அப்போஸ்தலர்களைக் குறித்து பவுல் சொல்லும் விளக்கத்தைக் கவ

... "அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் எல்லாவிதமான ...மையோடும் அதிசயங்களோடும் , அற்புதங்களோடும், வல்லமை ...டும் உங்களுக்குள்ளே நடப்பிக்கப்பட்டதே" என்றான் அவன். (...12:12) அப்போஸ்தலனுக்குரிய அடையாளம் என்ன? அவ... ஊழியத்தில் காணப்படும் அதிசயங்களும், அற்புதங்களும் ...களும்தான். இத்தகு அப்போஸ்தலர்கள் கொஞ்சம் என்று ... முதலாம் அப்போஸ்தலன் மொழிந்தார்.

...கள் ஒரு தீர்க்கதரிசி என்று நினைக்கலாம், எப்படிப் பட்ட ...சிகளை தேவன் இன்று தேடுகிறார் என்பதை நீங்கள் ... வேண்டும். "யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரி... போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தை" ... கேட்டானே ? யாரைக் கர்த்தர் அப்போது தேடினார் ? ...வின் நாட்களில் தீர்க்கதரிசிகளும் இருந்தார்கள். ஆனால் ... நாடிய தீர்க்கதரிசிகள் வேறு. கர்த்தரை தரிசனங்களில் ... நாடுகளின் எதிர்காலங்களையும், தேவ மக்களின் வாழ்க்கை ... தரிசனங்களிலும், சொப்பனங்களிலும் கண்டுபிடிக்கும் தீர்க்... ...களை அவர் நாடினார். கர்த்தருடைய குரலை தெளிவாய்க் ... "கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்" என்று திட்ட... கூறும் தீர்க்கதரிசிகள் தேவை என்றார். எதிர்கால சம்பவங் ... இப்பொழுதே கண்டு முன்னறிவிக்கும் தீர்க்கதரிசிகள் தேவை. ... சொன்னால் இயற்கைக்கு அப்பாற்பட்ட வெளிப்பாடுகள் ... தீர்க்கதரிசிகள் தேவை. இப்படிப்பட்ட தீர்க்கதரிசிகள் ...ஞ்சம் என்றுதான் நமது பிரதான தீர்க்கதரிசி பேசினார். ..., எலிசா, சாமுவேல் போன்று அற்புதங்களைச் செய்யும் தீர்க்...கள் தேவை. எசேக்கியேல், ஏசாயாவைப் போல ஆவிக்குள் ... அற்புத மனிதர்கள் தேவை. வரப்போகும் பஞ்சத்தை ...னால் அறிவிக்கும் அகபுக்கள் தேவை. இயேசுவைப் போல ...தங்களைச் செய்யும் தீர்க்கதரிசிகள் தேவை. இதோ, அடியேன் ...னை அனுப்பும் என்று ஏசாயாவைப் போல உங்களை அர்ப்ப...பீர்களா?

சுவிசேஷகர்களைக் குறித்து சொல்லவே வேண்டாம். உங்க... கர்த்தர் சுவிசேஷகர்களாய் அழைத்திருக்கிறாரா? அப்படியா... எப்பாடு பட்டாகிலும் அற்புதங்களைச் செய்யும் ...மையைப் பெற்றுக் கொள்ளுங்கள். நற்செய்தியைச் சொல்லுபவர் ...தை நடப்பித்தும் காட்ட வேண்டும். தரித்திரருக்குச் சுவிசேஷத்தைச் ...ல்ல மட்டுமல்ல, நறுங்குண்ட இருதயத்தைக் குணமாக்கவும், ...களாலும் நோய்களாலும் சிறைப்பட்டவர்களை விடுதலை ...கவும் குருடருக்குப் பார்வையைப் பிரசித்தப்படுத்தவும் கூடத் ... கர்த்தருடைய ஆவியானவர் உங்கள் மேல் தங்கி இருக்கிறார்.

சுவிசேஷகன் பிலிப்புவைப் பாருங்கள்! கிறிஸ்துவைக் குறித்துப் பிர சிங்கித்தது மட்டும் அல்ல, அதிசயங்களையும் மக்கள் முன்பு நிகழ்த் திக் காட்டினான். அசுத்த ஆவிகள் அலறின. திமிர்வாதக்காரனும் சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள். இத்தகைய சுவிசேஷகர் களை கர்த்தர் இன்றும் தேடுகிறார். இப்படிப்பட்டவர்கள்தான் கொஞ்சம் என்று நமது நல்ல சுவிசேஷகன் நவின்றார்.

நீங்கள் ஒரு மேய்ப்பரா ? அற்புத ஊழியம் சுவிசேஷகர் மட் டும் செய்ய வேண்டும் என்று நினைத்துவிடாதீர்கள். மேய்ப்பரைக் குறித்து கர்த்தர் குறைபட்டுக் கொள்வதைக் கேளுங்கள். "**நீங்கள் பலவீனமானவைகளைப் பலப்படுத்தாமலும், நசல் கொண்டவைகளைக் குணமாக்காமலும், எலும்பு முறிந்தவைகளைக் காயங்கட்டாமலும், துரத்துண்டவைகளைத் திருப்பிக் கொண்டு வராமலும், காணாமற்போ னவைகளைத் தேடாமலும் போய், பலாத்காரமும் கடூரமுமாய் அவை களை ஆண்டீர்கள்**" (எசே. 34:4) நசல்கொண்டவைகளைக் குணமாக்கவும், எலும்பு முறிந்தவைகளைக் காயங்கட்டவும், இப்ப டிப்பட்ட மேய்ப்பர்கள் இல்லாததால்தான் ஆடுகள் தொய்ந்து போகின்றன. இத்தகு மேய்ப்பர்கள் கொஞ்சம் என்பதுதான் நமது நல்ல மேய்ப்பனாம் இயேசுவின் ஏக்கம்.

"என்னுடைய ஊழியம் போதக ஊழியம்தான். வசனத்தைப் போதிப்பது மட்டும்தான் என்னுடைய வரம்", என்று சொல்லி உங் கள் ஊழியத்தை மட்டுப்படுத்தி கொள்ளாதீர்கள். நீங்கள் ஒரு போதகரா ? நீங்கள் ஜெப ஆலயங்களில் போதகம் பண்ணும் போது அசுத்த ஆவிகள் அலற வேண்டும் என்று எதிர்பாருங்கள். கிறிஸ்து போதிக்கும் பொழுது நடந்தது இதுதான். உங்கள் வசனம் அதிகாரமுள்ளதாய் இருக்கட்டும். இயேசுவின் போதனையைக் கண்டு மக்கள் பிரமிப்படைந்தார்கள். வேதபாரகரைப்போல் போதி யாமல் அதிகாரமுடையவராய்ப் போதித்தார். வேதபாரகரின் போதனையில் வேத வசனங்கள் இருந்தது. கிறிஸ்துவின் போதனை யிலோ வல்லமை இருந்தது. இந்த அபிஷேகத்தை நாடுங்கள். அப் பொழுது அதிகாரிகளும் வந்து, "**நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களை செய்ய மாட்டான்**" என்று அறிக்கையிடுவர். (யோவா. 3:2) பவுல் நெடுநே ரம் பிரசங்கம் பண்ணினவன்தான். ஆனால் நித்திரை மயக்கத்தில் மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்து செத்துப்போனவனுக்கு, திரும்பவும் உயிரைக் கொண்டு வரும் வல்லமையும், விசுவாசமும் அவனுக்குள் இருந்தது. (அப்.20:8-12) இத்தகைய வல்லமையான போதகர்கள் எங்கே ? இப்படிப்பட்ட போதகர்கள் கொஞ்சம் என் பதுதான் நமது நல்ல போதகரின் தாகம்.

வேதாகமத்தில் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையோ, ...ளிப்பாடுகளோ இல்லாமல் ஊழியம் செய்தது யார் ? பேதுரு ... மேலிருந்த அபிஷேகம்தான் உங்கள் மேலும் இருக்கிறது. ...தாகமத் தீர்க்கதரிசிகள் மேல் இருந்த அபிஷேகம்தான் உங்கள் ...லும் இருக்கிறது. அபிஷேகத்தைப் பயன்படுத்தினவர்கள் வல்ல...யாய் பிரகாசித்தார்கள். அதை மட்டுப் படுத்தினவர்கள் கால...லாம் சாதாரண வாழ்க்கையில் சஞ்சலப்பட்டு தமது ...த்தை முடித்துவிட்டார்கள். ஒரு சிலர் தங்களுக்குள் இருக்கும் ...மையை பயன்படுத்தினார்கள். வேறு சிலர் அதைக் கண்ணா... பெட்டியில் வைத்து வேடிக்கை பார்ப்பதுபோல் வாழ்க்கையை ...யம் செய்து விட்டார்கள். ஆனால் கிறிஸ்துவோ பட்சபாதமில்...வர்! ஐசுவரிய சம்பன்னர்! அவர் எல்லாவற்றையுமே அபரிமி...ாய் வழங்கியிருக்கிறார். ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களாலும் ...மை நிறைத்திருக்கிறார். பெற்ற வல்லமையைப் பயன்படுத்தும் ...களை இன்றும் தேடுகின்றார். "**தம்மைப் பற்றி உத்தம இருதயத்தோடு இருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்...ம்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்...ாண்டிருக்கிறது**". (2 நாளா 16:9) இந்த கண்களுக்கு நீங்கள் ...ன்படுவீர்களா?

நான் அடிக்கடி கிறிஸ்துவின் ஊழியத்தைத் தியானிப்பது ...ண்டு. அவர் மிஷனரிகளை எப்படி அழைத்தார் என்பதைப் பார்க்...பொழுதெல்லாம் என் உள்ளம் ஏங்கும். அவர் தமக்கு ஊழியர்...ளைப் பிரித்தெடுத்த விதமே அற்புதம்தான். ஆயிரம்பேருக்கு ...ஷனரி சவால் செய்தியைக் கொடுத்து, அவர்களில் முன்னுக்கு ...த ஒரு சிலருக்கு நேர்முகத் தேர்வு நடத்தி, அவர்கள் திறமைக...யும் தாலந்துகளையும் பார்த்து, பணிக்களம் அனுப்பி வைத்...ாரா? இரவெல்லாம் ஜெபம் பண்ணினார். பிதா அவருக்கு யாரை அழைக்க வேண்டும் என்று சொன்னாரோ அவர்களது பெயரையும், ...ழ்க்கையையும், எதிர்காலத்தையும் பரிசுத்த ஆவியானவர் அவ...க்கு வெளிப்படுத்தினார். பேதுருவே வா, சகேயுவே வா, நாத்தான்...ேல் வா, என்று திட்டமாய் அழைப்பு கொடுத்தார். இது எனக்கு ...ரு பெரும் சவாலாய் இருப்பது உண்டு. நானும் மிஷனரிச் சவால் ...திகளைக் கொடுப்பவன்தான். கண்ணீரோடும், வேதனையோடும் ...வை மக்கள் முன் வைத்திருக்கிறேன். பலர் அழுகையோடு ...ழியத்திற்கு ஒப்புக் கொடுத்திருக்கின்றனர். ஆனால் அடுத்த ...றை அதே இடத்திற்குப் போய் பார்த்தால், அழுது ஒப்புக் ...டுத்தவர்கள் அங்கேயே அமரிக்கையாய் இருப்பதைப் பார்த்து ...தனைப் பட்டிருக்கிறேன். அடிக்கடி இயேசுவைப் போல திட்ட

மான வெளிப்பாடுகள் இருந்தால், எத்தனை நன்றாய் இருக்கும் என்று ஏக்கப் பெருமூச்சு விட்டிருக்கிறேன். நான் சொல்வதின் கருத்தை விளங்கிக்கொள்ளுங்கள். நாம் மக்களுக்கு பணிக்களத் தேவைகளைச் சொல்லி கிறிஸ்துவுக்குச் சேவை செய்ய வேண்டும் என்று சவால் விடுவது மிக மிக அவசியம். ஆனால் அம்மட்டோடு நின்று விடாமல், இப்படிப்பட்ட திட்டமான வெளிப்பாடுகளைப் பெற்று மக்களை அழைப்பது அதனினும் அவசியம் என்று கூறுகிறேன். இவைகள் எல்லாவற்றையும் வாஞ்சிப்பதுதான் அற்புத வாழ்க்கைக்கு அஸ்திபாரம் போன்றது. **தேவனுடைய வேலை தேவனுடைய பெலத்தில் செய்து முடிக்கப்பட வேண்டிய வேலை. ஆயிரம் பிரசங்கங்கள் சாதிக்காததை ஒரு அற்புதம் சாதித்து விடும்.**

இயேசுவைப் போல் மாறுவது என்றால் என்ன? இயேசுவைப் போல் எல்லாவிதத்திலும் மாறுவதுதான்! ஆனால் இன்று அநேகர் இயேசுவைப் போல் பரிசுத்தம், இயேசுவைப் போல் தாழ்மை, இயேசுவைப் போல் அன்பு என்று சொல்லி அதோடு நின்றுவிடுவதைத் தான் என்னால் செரித்துக்கொள்ள முடியவில்லை. இயேசுவைப் போல் வல்லமையை ஏன் நாம் எதிர்பார்க்கக்கூடாது? இயேசுவின் அதிகாரத்தை ஏன் நாம் வாஞ்சிக்கக்கூடாது? இயேசு கிறிஸ்துவின் சிந்தையை ஏன் நாம் விரும்புவதில்லை?

நான் ஆழமாய் விசுவாசிக்கிறேன். கடைசி நாட்களில் இயேசுவைப் போல வல்லமையும், சுபாவமும்கொண்ட தாசர்கள் எங்கும் எழும்பப் போகிறார்கள். கிறிஸ்து அவர்கள் நடுவில் வாசம் பண்ணி அவர்கள் மூலம் டுனாமிசை வெளிப்படுத்தப்போகிறார். கிறிஸ்துவின் சரீரத்திலிருந்து வல்லமை கசிந்தது போல அவர்கள் சரீரத்திலிருந்தும் தேவனுடைய வல்லமை புறப்பட்டு வியாதிகளைச் சுகமாக்கப் போகிறது. கிறிஸ்துவாகிய தலையைப் போலவே அவருடைய சரீரமும் வல்லமையாய் மாறப்போகிறது. இயேசு இன்றும் ஜீவிக்கிறார் என்பதற்கு அவர் சபை உயிருள்ள சாட்சியாகப் போகிறது. இந்த எழுப்புதல் விரைந்து வருகிறது. விசுவாசிக்கிறவர்கள் இதை அனுபவித்துக் களி கூருவார்கள். விசுவாசியாதவர்கள் மற்றவர்கள் அனுபவிப்பதை பார்த்து மௌனமாய் நிற்பார்கள். விசுவாசிப்பவர்கள் மெய்யாகவே அவர் செய்த கிரியைகளை தானும் செய்வார்கள். அவைகளைப் பார்க்கிலும் பெரியவைகளையும் செய்வார்கள். இத்தகு எழுப்புதலுக்கு நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ளும் காலம் வந்துவிட்டது. ஆவிக்குரிய வல்லமை வெளிப்பட வேண்டும், வியாதிகள் சுகமடைய வேண்டும், வெளிப்பாட்டு வரங்களின் கிரியை வேண்டும் என்று யார் ஏங்குகிறார்களோ அவர்களைத்தான் கர்த்தர் நம்பியிருக்கிறார். அவர்கள் மூலமாகத்தான் நாடுகளைச் சந்திக்கப் போகிறார். அவர்கள்தான் இந்தியாவிற்கும் பதில்!

கனிகளும் வரங்களும்

ஆவிக்குரிய உலகில் இரண்டு வகைக் கூட்டம் உண்டு. ஒரு கூட்டம் கனிகளின் கூட்டம், மறு கூட்டம் வரங்களின் கூட்டம். ஒரு சாரார் அன்பு தான் முக்கியம், பரிசுத்தம்தான் முக்கியம், தாழ்மை தான் முக்கியம் என்று வாதிடுவார்கள். அடுத்த சாரார் வரங்கள் தான் முக்கியம், அற்புதங்கள்தான் முக்கியம் என்று வழக்காடுவார்கள். இதைப் பார்த்து பரலோகம் பரிதவித்து நிற்கும். கனிகளும், வரங்களும் இணைந்து செயல்பட வேண்டுமே! அன்பைப் பேசுவோர் அற்புதத்தை நாடுவதில்லையே, அற்புதத்தை பேசுவோர் அன்பின்றி வாழ்கிறார்களே என்று தேவதூதர்களும் செய்வதறியாது திகைத்து நிற்பார்கள் என்று நான் நினைக்கிறேன். வேதத்தில் 1 கொரிந்தியர் 12ம் 14ம் வரங்களைக் குறித்துப் பேசுகிறது. இவ்விரண்டு அத்தியாயங்களையும் இணைக்கும் பாலம்தான் அன்பைக் குறித்துப் பேசும் 13–ஆம் அத்தியாயம். இவைகள் எல்லாமே பரிசுத்த ஆவியானவரிடம் இருந்துதான் வருகின்றன. பரிசுத்த ஆவியானவர் நம்மை நிறைக்கும்போது தமது சுபாவத்தோடும், வரங்களோடும் நமக்குள் வருகிறார். அவரது சுபாவம் தான் கனிகளாய் வெளிப்படுகின்றன. சிலர் அவரது கனிகளை வாஞ்சிக்கிறோம். சிலர் அவரது வல்லமையை வாஞ்சிக்கிறோம். ஆனால் வேதத்தை திறந்த மனதோடு வாசிப்பவர்கள் இவைகள் இரண்டும் இணை பிரியாதவை என்பதை கண்டு கொள்வார்கள்.

கிறிஸ்துவின் வாழ்க்கையில் இவைகள் இரண்டும் ஒருமிக்கச் செயல்பட்டன. வியாதியஸ்தர்களைக் கண்டபொழுது மனம் உருகினார். அதுதான் அன்பு! உடனே அந்த வியாதியஸ்தர் மீது கைகளை வைத்து சுகமாக்கினார். அது தான் வல்லமை! சற்று யோசித்துப் பாருங்கள், வியாதியஸ்தர்களைக் கண்டு, அன்பு காட்டி, நான்கு ஆறுதல் வார்த்தைகளைச் சொல்லிவிட்டால் மக்கள் திருப்தி அடைந்து போய்விடுவார்களா? அதனால் அவர்களுக்கு லாபம் என்ன? மனதுருக்கம் தேவ வல்லமையாய் மாறுகின்ற போதுதான். மக்கள் விடுதலை அடைவார்கள்! இத்தகு மனிதர்கள்தான் இன்றைய தேவை.

பழைய ஏற்பாட்டில் இருந்து ஒரு உதாரணத்தை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அதுதான் நாம் அனைவரும் விரும்பும் யோசேப்பின் சரித்திரம். பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களில் யோசேப்பு ஒரு தலைசிறந்த மனிதன். ஆவிக்குரிய கனிகள் அத்தனையும் அவனுக்குள் பழுத்துக் கிடந்தன. இச்சை அடக்கம் என்னும் கனி அவனுக்குள் காணப்பட்டது போல, வேதபக்தர்களில் பலருக்குள் காணப்படவில்லை. போத்திபாரின் மனைவி.

தன்னைப் பிடித்து இச்சிக்க விரும்பியபோது, அச்செயல் அசிங்க மென எண்ணி பதறி ஓடி தனது பரிசுத்தத்தைப் பாதுகாத்துக் கொண்டான்! அதனால் தவறான குற்றச்சாட்டுகள் அவன் மேல் விழுந்தன. சிறைக் கைதியாகவும் வைக்கப்பட்டான். ஆனாலும் அவன் சுய பரிதாபத்தில் தொய்ந்து போகவில்லை. சிறைக்கைதிகள் இருவரை, ஒரு நாள் அதிகாலை வேளையில் துயர முகத்தோடு இருக்கக் கண்டான். **"உங்கள் முகங்கள் இன்று துக்கமாய் இருக்கிறது. என்ன என்று கேட்டான். அதற்கு அவர்கள்: சொப்பனம் கண்டோம், அதற்கு அர்த்தம் சொல்லுகிறவன் ஒருவனுமில்லை என்றார்கள். அதற்கு யோசேப்பு: சொப்பனத்துக்கு அர்த்தம் சொல்லுதல் தேவனுக்குரியதல்லவா? அவைகளை என்னிடத்தில் சொல்லுங்கள் என்றான்."** (ஆதி.40:7, 8) எத்தனை அக்கறையோடு துயரப்பட்டவர்களை அவன் விசாரிக்கிறான் என்று பாருங்கள். இதுதான் அவனுக்குள் காணப்பட்ட தயவும், நற்குணமும் எனும் கனி. அவர்கள் இருவரும் சொப்பனம் கண்டோம் என்று சொன்னதும் அவன் சொன்னதைக் கேளுங்கள், சொப்பனத்தின் அர்த்தம் சொல்லுவது என் யேகோவா தேவனுக்கு உரியது. நான் அவரது பிரதிநிதி. என்னிடத்தில் சொல்லுங்கள், நான் அதன் அர்த்தத்தைச் சொல்லுகிறேன் என்றான். எத்தனை விசுவாசம்!

நாம் அவன் இடத்தில் இருந்திருந்தால் என்ன சொல்லி இருப்போம் தெரியுமா? அடடா, சொப்பனமா அதற்கெல்லாம் அவ்வளவு முக்கியம் கொடுக்காதீர்கள். 'தொல்லையின் மிகுதியினால் சொப்பனம் பிறக்கும். இதையெல்லாம் பெரிது படுத்தினால் மோசம் போய் விடுவீர்கள்,' என்று நமக்குத் தெரிந்த அரைகுறை உபதேசத்தை அவிழ்த்துவிட்டிருப்போம். அன்று மட்டும் யோசேப்பு அப்படிச் சொல்லியிருந்தால் அவன் வாழ்க்கை சிறையிலேயே முடிந்திருக்கும். ஆனால் அந்த"சொப்பனக்காரன்" அப்படிச் சொல்லவில்லை. தனக்குள் இருந்த தேவ ஆவியை அவன் நம்பினான். ஆவியானவர், எதிர்காலத்தை சொப்பனங்கள் மூலம் வெளிப்படுத்துகிறவர் என்று அவன் விசுவாசித்தான். ஆனால் நமக்கோ யோசேப்பின் வாழ்க்கை பிடிக்கும், அவன் சொப்பனம் பிடிக்காது. அவனது வாழ்க்கையைத் தியானிக்கும்போது, அவனது இயற்கைக்கு அப்பாற்பட்ட கனவுகளைக் குறித்தும், கனவுகளுக்கு பொருள் சொல்லும் ஆற்றலைக் குறித்தும் நாம் தியானிப்பதும் இல்லை, வாஞ்சிப்பதும் இல்லை. கனவுகளில் கர்த்தர் பேசுகிறார் என்று கேட்டாலே சிலர் சிரிப்பார்கள், சிலர் உதட்டைப் பிதுக்குவார்கள், சிலர் பயப்படுவார்கள்.

இப்படி புதிய ஏற்பாட்டு யோசேப்பு பயந்திருந்தால் மரியாளை மனைவியாகச் சேர்த்திருக்கவே மாட்டான். குழந்தை இயே

கனை சொப்பனம் பார்த்தவர்களுக்கு மறைவாக, எதிர்த்து தோன்றுக்கு தப்பியிருக்கவும் மாட்டான். இவைகளை எல்லாம் நீங்கள் நினைத்துப் பார்த்தது உண்டா? பவுலோடு கர்த்தர் சொப்பனங்களிலே பேசி னார். ஊழியத் திட்டங்களைக்கூடக் கொடுத்தார். இவைகளை நீங் கள் எதிர்பார்க்காவிட்டால் நஷ்டம் யாருக்கு? பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் கர்த்தர் தமது மக்களோடு கனவுகளில் பேசினார். அவைகளில் கனவுகளும் ஒன்று என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. என்னிடம் கனவுகள் மூலம் கர்த்தர் எத் தனையோ காரியங்களைப் பேசி இருக்கிறார். அடுத்த நாள் என்ன செய்து கொடுக்க வேண்டும் என்றுகூட இரவுக் கனவுகளில் அவர் சொல்லியிருக்கிறார்.

இவைகளை எல்லாம் இனிவரும் நாட்களில் எதிர்பாருங்கள், விசுவாசியுங்கள். *"கடைசி நாட்களில் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்,"* என்று கர்த்தர் சொல்லவில்லையா? பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளும்பொழுது நாம் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு உலகில் நுழைகிறோம். சிலர் இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் பெற்று பரிசுத்த ஆவியைப் பெற்றவுடன் எல்லாம் முடிந்துவிட்டது என்று சொகுசாய்ப் படுத்துவிடுகிறார்கள். ஆனால் ஒரு தேவனு டைய பிள்ளை பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்ட பிறகுதான் தன்னுடைய பாலர் வகுப்பை முடித்திருக்கிறான் என்று அர்த்தம். அதற்குப் பிறகு அவன் படிக்க வேண்டிய பாடங்கள் ஏராளம்! ஏராளம்!

ஒரு சிலர் சொப்பனம், தரிசனம் என்று கூறி மக்களை வஞ் சிப்பது உண்மைதான். தன் சொந்த எண்ணங்களையே தரிசனம் என்று நினைத்து மக்களைக் குழப்புவர்களும் உண்டுதான். ஆனால் இவைகளைப் பார்த்து உண்மையான அனுபவங்களை நாம் உதறித் தள்ள முடியாது. `இவைகள் எல்லாம் வேண்டாம், அறிந்து கொண் டதில் உண்மையாய் இருந்தால் போதும்' என்று ஆயாசமாய் இருந்துவிடக் கூடாது.

கனிகளையும் நாட வேண்டும், வரங்களையும் தேட வேண்டும். யோசேப்பைக் கவனியுங்கள், அவன் அன்று சிறைச்சாலையில் இரண்டு பேருக்கும் கொடுத்த சொப்பன விளக்கம்தான் அரசனண் டையில் கொண்டு போய் அவனை உயர்த்தியது. அரசர்களுக்கும், அதிகாரிகளுக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷம் செல்ல வேண்டுமானால் இயற்கைக்கு அப்பாற்பட்ட இவ்வித அனுபவங்களை திருச்சபை நாட வேண்டும். தானியேலின் வெளிப்பாட்டு வரங்கள்தான் அவ னது ஏற்றத்திற்கும் தோற்றத்திற்கும் காரணமாய் இருந்தது. கிறிஸ்

ருவின் ஊழியத்தில் நடந்த அற்புதங்கள் ஏரோது வரை எட்டியது. அப்போஸ்தலர் வாழ்க்கையில் காணப்பட்ட அற்புதங்கள் தேசாதிபதிகளையே நடுங்க வைத்தது. இத்தரு சாதாரண மக்களை அரசர்களிடம் கொண்டு போனது என்ன? ஆவிக்குரிய அற்புத வரங்கள்தான், டுனாமிஸ் வல்லமைதான்!

நாட்கள் வந்துவிட்டது. ஏன் துக்கமாய் இருக்கிறீர்கள்?' என்று மக்களைப் பார்த்துக் கேட்கவும் வேண்டும். 'தேவனல்லவா சொப்பனத்தின் அர்த்தம் சொல்லக்கூடியவர், என்னிடம் சொல்லுங்கள்' என்று கேட்கும் நெஞ்சத் துணிவும் நமக்கு வேண்டும். வியாதிகளைக் கண்டு மனதுருகவும் வேண்டும், இயேசுவின் நாமத்தில் எழுந்து நட என்று கட்டளை கொடுக்கவும் வேண்டும். வேதத்தில் இங்கே கொஞ்சம், அங்கே கொஞ்சம் என்று நாம் எடுத்தாளும் காலம் அல்ல இது. வேதம் முழுவதையும் புதியதோர் கண்ணோட்டத்தோடு பார்க்க வேண்டிய நேரம் இது.

நாம் வாழும் தேசம் விக்கிரகங்களால் நிறைந்தது. இந்த நாடு விக்கிரகத்தின் வல்லமையை பார்த்திருக்கிறது. மந்திரவாதிகளின் சக்தியை கண்டு வியந்திருக்கிறது. ஏறத்தாழ நம் நாட்டுத் தலைவர்கள் அனைவருமே, போலிச்சாமியாரின் ஆசீர்வாதங்களுக்குப் பின் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். லட்சக்கணக்கான மக்கள் வியாதியிலும், பிசாசின் பிடியிலும் சிக்கிச் சீரழிகின்றார்கள். இந்த நாட்டில் நாம் மிகச் சொற்பமாய் வாழ்ந்து வருகின்றோம். அடிமைகளைப் போல் அடங்கி வாழ்கிறோம். ஓநாய்கள் நடுவிலே ஆடுகளைப் போல் அஞ்சி வாழ்கிறோம். இன்று நாட்டுக்குத் தேவை வெள்ளியும் பொன்னும் அல்ல, சமுதாய சேவை அல்ல, நமக்குள் இருக்கும் வல்லமைதான். இந்தியாவுக்கு என்ன கொடுக்கப் போகிறீர்கள்? பேதுரு, யோவானைப் போல, என்னிடத்தில் உள்ளதை உனக்குக் கொடுக்கிறேன். நீ எழுந்து நட என்று சப்பாணிகளைப் பார்த்து கட்டளையிடும் வல்லமையைக் கொடுப்பீர்களா? எங்கள் தேவனுடைய வல்லமை இதுதான் என்று இந்திய மக்களுக்கு எடுத்துக் காட்ட வேண்டும். அண்டை நாடுகளில் எழுப்புதல் தீ பற்றி எரிகிறது. கொரியாவில் அலைமோதும் எழுப்புதல், ஏன் இந்தியாவுக்கு எட்டக் கூடாது? ஊழியத்தில் அற்புதங்கள் இல்லாமல் போன காரணம் என்ன தெரியுமா? நீங்களும் நானும் அதை வாஞ்சிக்கவில்லை, அதற்காக ஏங்கவுமில்லை. 'ஆவிக்குரிய வரங்களை நாடுங்கள்' எனும் வசனத்தை நாம் சிரமேற்கொள்ளவில்லை.

அது மட்டுமல்ல, நமது அவிசுவாசம் தேவனுடைய வல்லமையை மட்டுப்படுத்திவிட்டது. பிசாசுகளைத் துரத்த முடியாமல் துவண்டுபோன சீஷர்களுக்கு இயேசு எச்சரித்து சொன்னதை எண்ணிப்பாருங்கள். 'உங்கள் அவிசுவாசத்தினாலேதான்,' என்று அழுத்

தும். திருத்தமாய் அறுதியிட்டுக் கூறினார். கடலில் இயேசுவைப் போல நடந்த பேதுரு இடையிலே அமிழ்ந்து போகக் காரணம் என்ன? அவிசுவாசம்தான்! இயேசு, தமது சொந்த ஊரான நாசரேத்தூரில் பெரிய அற்புதங்களைச் செய்ய முடியாமல் திகைத்து நின்ற காரணம் என்ன? அவிசுவாசம்தான்! இந்த அவிசுவாசத்தை இயேசுவின் நாமத்தில் எதிர்த்து நில்லுங்கள்.

தீமோத்தேயுவைப் போன்ற தேவ தாசர்களே! உங்கள் கண்ணீரைக் கர்த்தர் அறிந்திருக்கிறார். உங்கள் மாயமற்ற விசுவாசத்தை அறிந்திருக்கிறார். பரிசுத்தவான்களுக்கு, நீங்கள் செய்த உத்தமச் சேவையை அறிந்திருக்கிறார். உங்களால் முடிந்த அளவு, நீங்கள் செய்யும் ஊழியங்களையும் அறிந்திருக்கிறார். ஆனால் ஒன்றை உங்களுக்கு இன்று நினைப்பூட்ட விரும்புகிறேன். பரிசுத்த ஆவியானவர் உங்கள் மீது வந்தபோது, உங்களுக்கு உண்டான தேவ வரத்தை அனல் மூட்டி எழுப்புங்கள். தீர்க்கதரிசனம் சொல்ல நாடுங்கள். அந்நிய பாஷை பேச தடை பண்ணாதிருங்கள். விசுவாசத்தோடு வியாதியஸ்தர் மீது கைகளை வைத்து அவர்களைச் சொஸ்தமாக்குங்கள். இயேசுவின் அதிகாரமுள்ள நாமத்தில் பிசாசுகளைத் துரத்துங்கள். தேவனுடைய வல்லமை வெளிப்படும்படி, இயேசுவைப் போல உபவாசத்திலும், ஜெபத்திலும் தரித்திருங்கள். ஆவிக்குரிய வரங்களும், அற்புதங்களும் வெளிப்பட உன்னதத் தகுதி வேண்டுமென்று ஒதுங்கி நில்லாதீர்கள். வேதம் சொல்லுவதை விநயமாய் கவனியுங்கள். "**தேவரீர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கிக் கொண்டுபோனீர்; தேவனாகிய கர்த்தர் மனுஷர்களுக்குள் வாசம் பண்ணும்பொருட்டு, துரோகிகளாகிய மனுஷர்களுக்காகவும் வரங்களைப் பெற்றுக்கொண்டீர்.**" (சங். 68:18) எத்தனை ஆறுதலான வசனம்! துரோகிகளான மனிதர்களுக்காக வரங்களைப் பெற்று அருளினராம். அப்போஸ்தலர்கள் எல்லாரும் கிறிஸ்துவுக்கு துரோகம் செய்தவர்கள்தான்; ஆபத்து வேளையில் அவரைத் தனியே விட்டு தள்ளிப்போனவர்கள்தான்; வல்லமையான பவுல் கிறிஸ்துவுக்கு விரோதியாய் இருந்தவன்தான்; அவர்களையெல்லாம் பயன்படுத்தின கர்த்தர் உங்களைப் பயன்படுத்த மாட்டாரா? மனம் கலங்காமல் உங்கள் தலைகளை உயர்த்திப்பாருங்கள். பலவீனமான மனிதர்களை கரத்திலெடுத்து தமது வல்லமையாலும், பெலத்தாலும் நிரப்பி பயன்படுத்துவது கர்த்தருக்குக் கை வந்த கலை. இனி வரும் நாட்களில் இதுவரை இல்லாத அளவுக்கு கர்த்தர் உங்களை எடுத்து பயன்படுத்தப் போகிறார். எழும்புங்கள்! தேவனுடைய வல்லமையைத் தரித்துக் கொள்ளுங்கள்!!

செய்தி-3

இயேசுவின் இறுதிக் கட்டளை

இந்த வல்லமை முகாமுக்கு வந்த உங்கள் ஒவ்வொருவருக்கும் என் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வல்லமை முகாமின் பிரதான நோக்கத்தை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். உங்களுக்குள் இருக்கும் தேவனுடைய வல்லமையை அவிழ்த்து விடுவதுதான் எங்கள் நோக்கம். `வல்லமை தாரும் தேவா', என்று நாம் காலமெல்லாம் பாடிக் காலத்தைக் கழிக்க முடியாது. பரிசுத்த ஆவியைப் பெற்ற ஒவ்வொருவருக்குள்ளும் தேவனுடைய வல்லமை ஏற்கனவே வந்துவிட்டது என்பதை உணர்ந்து, அந்த வல்லமையை தேசத்தின் ஆசீர்வாதத்திற்காக மடை திறந்து விடுவதுதான் இன்றைய அத்தியாவசியத் தேவை. பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெற்ற ஒவ்வொரு விசுவாசிகளும் தங்களுக்குள் இருக்கும் வல்லமையை அவிழ்த்துவிடப் பழகியிருந்தால் தேசம் எப்பொழுதோ இரட்சிக்கப்பட்டிருக்கும். கிறிஸ்துவின் அற்புத திருநாமம் இந்திய தேசத்தில் என்றோ உயர்த்தப்பட்டிருக்கும்!

கிறிஸ்துவின் சரீரத்திலிருந்து வல்லமை புறப்பட்டு எல்லோரையும் குணமாக்கினது என்று நாம் வாசிக்கிறோமே, அந்த வல்லமை இன்று நம் ஒவ்வொருவர் மூலமும் புறப்பட்டுப் போக நாம் விட்டுக் கொடுக்க வேண்டும். அவர் சரீரத்திலிருந்து புறப்பட்ட வல்லமைக்கும், கிரேக்க மொழியில் டுனாமிஸ் என்னும் சொல்தான் வருகிறது. இந்தச் சத்தியம் உங்கள் ஆவியில் ஆழமாய்ப் பதிய வேண்டும். இயேசு தன்னிலிருந்து வல்லமை புறப்பட்டுப் போனதை தன் சரீரத்தில் உணர்ந்தார். அவரைத் தொட்டு சுகமடைந்த பன்னிரண்டு வருடப் பெரும்பாடுள்ள ஸ்திரீயும் தன் சரீரத்தில் சுகமடைந்ததை உணர்ந்தாள். கிறிஸ்தவ மார்க்கம் என்பது உணர்ச்சியற்ற செத்த சடலம் அல்ல. ஒரு சிலருக்கு உணர்ச்சி என்று சொன்னாலே, தேவையில்லாத பயம் வருகிறது. தேவனுடைய வல்லமையை உணர்வதில் தவறொன்றும் இல்லை. அன்று கிறிஸ்துவிலிருந்து புறப்பட்ட வல்லமை இன்றும் அவருடைய சரீரமாகிய சபையிலிருந்தும் புறப்பட வேண்டும் என்பதுதான் தேவ சித்தம்.

செய்யவும் உபதேசிக்கவும்

இன்றைய செய்திக்கு ஆதாரமாக அப்போஸ்தல நடபடிகள் முதலாவது அத்தியாயத்தை நாம் தியானிக்கப் போகிறோம். தெயோப்பிலுவே, இயேசுவானவர் தாம் தெரிந்து கொண்ட அப்போஸ்

தலருக்குப் பரிசுத்த ஆவியினாலே கட்டளையிட்டபின்பு, அவர் எடுத்துக் கொள்ளப்பட்ட நாள் வரைக்கும் செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையும் குறித்து, முதலாம் பிரபந்தத்தை உண்டுபண்ணினேன். அவர் பாடுபட்டபின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார். (அப். 1:1- 3) அப்போஸ்தலர் நடபடிகளின் ஆசிரியர், தாம் எழுதின முதலாம் பிரபந்தத்தை ரத்தினச் சுருக்கமாய் இங்கே குறிப்பிடுகின்றார். இயேசு கிறிஸ்து செய்யவும், உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையும் குறித்து முதலாம் பிரபந்தம் கூறுகிறது. இங்கே கவனியுங்கள்.

இயேசு முதலாவது செய்தார், பின்புதான் உபதேசித்தார். அவரது ஊழியத்தில் அவர் செய்த அற்புதங்களும் உபதேசங்களும் இணை பிரியாமல் இருந்தன. இவைகள் இரண்டும் பரிசுத்த புறாவின் இரண்டு சிறகுகள் என்று சொல்லலாம். இயேசு ஆதி முதல் அந்தம் வரை அற்புதங்களைச் செய்து கொண்டே இருந்தார். எந்த நேரத்திலும் யாரையாவது சுகமாக்கிக்கொண்டிருந்தார். பட்டணத்திலும், கிராமத்திலும், பயண நேரத்திலும், களைத்த நேரத்திலும், உண்ணும்பொழுதும், உறங்கும்பொழுதும், பசி நேரத்திலும், தாகத்திலும் அவர் அற்புதங்களைச் செய்து கொண்டே இருந்தார். மெய்யாகவே அவர் அதிசயமானவர்தான்! அவரது வாழ்க்கையைக் குறித்து யோவான் எப்படிச் சொல்லுகிறான் என்று பாருங்கள். வேறு விதத்தில் சொன்னால் முதலாம் பிரபந்தமாகிய சுவிசேஷப் புத்தகங்களின் முடிவுரையைப் பாருங்கள். "இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு; அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன். ஆமென்." (யோவா.20:30; யோவா. 21:25) நாமோ நமது பிரசங்கப் புத்தகங்கள் எத்தனை அதிகம் என்று பெருமை பாராட்டுகிறோம். ஆனால் கிறிஸ்துவின் அற்புதங்களைப் புத்தகங்களாக எழுதினால் எழுதப்படும் புத்தகங்களை உலகமே கொள்ளாது என்று யோவான் எழுதுகிறார். மூன்றரை வருடத்தின் ஊழியத்தில் இத்தனை அற்புதங்களை அவர் எப்படித்தான் செய்தாரோ! " இயேசு செய்த வேறு அநேக பிரசங்கங்களும் உண்டு. அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புத்தகங்கள் உலகம் கொள்ளாது என்று எண்ணுகிறேன்," என்று யோவான் கூறவில்லை. அவர் உபதேசித்ததைவிட செய்தவைகள்தான் அதிகம். பரிசுத்த ஆவியானவர் முதலாவது செயல்

வீரர். அடுத்துதான் போதகர். இந்த மேசியாவை உலகத்திற்குக் காட்ட வேறு குறுக்கு வழி இல்லை. நாமோ புகழ்பெற்ற பிரசங்கிமார்களின் பிரசங்கத் தொகுப்புகளிலும், நாம் செய்த எண்ணிறைந்த பிரசங்கங்களிலும் மூழ்கிப்போய்விட்டோம். இந்தியத் திருச்சபை பிரசங்கப் பெருமைக்குப் பலியாகிவிட்டது. ஆழமான உபதேசங்கள், ஆராய்ச்சிப் புத்தகங்கள் என்று பெருமையாகப் பேசுகிறோமே தவிர, அவர் நம்மூலம் செய்த அற்புதங்கள் எத்தனை என்பதை யோசித்துப் பார்ப்பதில்லை!

பரிசுத்த ஆவியில் நிறைந்தவர் வாழ்க்கையில் தெய்வீக வல்லமை கட்டாயம் வெளிப்படும்! கிறிஸ்துவின் வாழ்க்கையில் காணப்பட்ட தெய்வீக வல்லமைக்கு அளவே இல்லை! ஒரு நாள் யோவான் ஸ்நானகனுக்கு கிறிஸ்து மேசியாதானோ என்ற கேள்வி எழும்பிவிட்டது. யோவானின் சீஷர்கள் கிறிஸ்து செய்த அற்புதங்களை அவனுக்கு விவரித்துச் சொன்னார்கள். அப்பொழுது அவன் இயேசுவினிடம் ஆள் அனுப்பி வருகிறவர் நீர்தானோ, அல்லது வேறொருவர் வரக் காத்திருக்க வேண்டுமா என்று கேட்டு வரச் சொன்னான். *"அந்தச் சமயத்திலே நோய்களையும் கொடிய வியாதிகளையும் பொல்லாத ஆவிகளையும் கொண்டிருந்த அநேகரை அவர் குணமாக்கி, அநேகங் குருடருக்குப் பார்வையளித்தார். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் போய் கண்டவைகளையும் கேட்டவைகளையும் யோவானுக்கு அறிவியுங்கள்; குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான் என்றார்".* (லூக்.7:21-23)

இயேசு அவர்களுக்கு சொன்ன பதில் எத்தனை ஆழமானது. *"நீங்கள் போய் கண்டவைகளையும்"* கேட்டவைகளையும் யோவானுக்கு அறிவியுங்கள் என்றார். கிறிஸ்துவின் ஊழியத்தில் காணத்தக்கதாக சில அற்புதங்கள் நடந்தன. கேட்கத்தக்கதாக உபதேசங்களும் கிடைத்தன. ஆனால் இன்று நமது ஊழியத்திலோ கேட்பதற்கு மாத்திரம் ஏராளம் உண்டு. காண்பதற்கோ ஒன்றும் இல்லை. இது இப்படியே தொடர நாம் ஒருபோதும் விடக்கூடாது. கிறிஸ்துவின் ஊழியத்தில் குருடர்கள் பார்வையடைந்தார்கள், சப்பாணிகள் நடந்தார்கள், குஷ்டரோகிகள் சுத்தமானார்கள், செவிடர் கேட்டார்கள், மரித்தோரும் எழுந்தார்கள், தரித்திரர் நற்செய்தியைக் கேட்டார்கள். இங்கே ஒரு கேள்வி. கிறிஸ்துவின் ஊழியத்தில் உபதேசங்களுக்கு கொடுத்த பங்கு எவ்வளவு? ஒரு சிறு புள்ளி விபரக் கணக்குப் போட்டால் இங்கே கூறப்பட்ட ஆறு காரியங்களில் ஐந்து காரியங்கள் அவர் செய்த அற்புதங்களைக் காட்டி ஒன்று

...ம அவரது உபதேசத்தைக் குறித்துப் பேசுகிறது. சொல்லப் ...னால் அவரது ஊழியத்தில் ஐந்து மடங்கு அற்புதங்களும், ...லே ஒரு பகுதி உபதேசங்களுமாக இருந்தது என்று சொல்லலாம். ...ல் நமது ஊழியத்தில் நூற்றுக்கு நூறு வெறுமனே பிரசங் ...கள் மாத்திரமே! இந்த கடைசி நாட்களில் கிறிஸ்து அன்று செய் ... போல் அவரது சபையும் அற்புதங்களுக்குக் கொடுக்க ...வேண்டிய இடத்தைக் கொடுக்கப் போகிறது என்பது என்னுடைய ...மான விசுவாசம். இறுதிக்கால எழுப்புதல் இயேசுவின் ஊழியத் ...தொடர்ச்சியாய் இருக்கும்.

துவக்கம் மட்டுமே

வேறு ஒரு உண்மையையும் நாம் இங்கு உணர வேண்டும். ...யேசு செய்த அத்தனையும் துவக்கம் மாத்திரமே, முடிவு அல்ல. ...னால்தான் வேதம் "அவர் ...செய்யவும், உபதேசிக்கவும் தொடங் ... எல்லாவற்றையும் குறித்து முதலாம் பிரபந்தத்தை" ... 1:2)உண்டு பண்ணினதாக கூறுகிறது. அவர் செய்த அத்தனை ... இனிச் செய்யப் போகும் அற்புதங்களின் துவக்கம்தான். அற் ... ஊழியத்தை துவங்கி வைத்து தொடக்க விழா கொண்டாட ...வர்தான் இயேசு கிறிஸ்து. வேறு விதத்தில் சொன்னால் அவர் ...மைப் பார்த்து "நான் குருடர்களுக்குப் பார்வையை அளிக்கும் ...மியைத் துவங்கி வைத்தேன், நீங்கள் அதைத் தொடர வேண்டும்; ...ராணிகளை நடக்க வைக்கும் ஊழியத்தைத் தொடங்கி விட் ...ன், நீங்கள்தான் தொடரவேண்டும். நான் செய்த அத்தனை அற் ...ங்களையும் நீங்கள் தொடர வேண்டும்" என்று பேசுகிறார் ...ன்று அர்த்தம்.

அதனால் தான் இயேசு, "மெய்யாகவே, மெய்யாகவே நான் உங் ...ளுக்குச் சொல்லுகிறேன். நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடி ...யினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் ...தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் ...ய்வான். நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமார ...னில் பிதா மகிமைப் படும்படியாக அதைச் செய்வேன் என்றார்." ...யோவா. 14:12,13) இந்தச் சத்தியத்தை நாம் எளிதில் நம்பமாட் ...டோம் என்பதனால்தான் மெய்யாகவே மெய்யாகவே நான் உங்க ...ளுக்குச் சொல்லுகிறேன் என்று அழுத்தமாய், இயேசு முகவுரை ...கிறார். கிறிஸ்து அன்று தொடங்கினார், அப்போஸ்தலர்கள் ...அதைத் தொடர்ந்தார்கள், அந்திகால சபை அதைச் செய்து முடிக் ... போகிறது. அல்லேலூயா! இந்த அற்புதங்களைச் செய்யும் ...ஊ பரிசுத்த ஆவி பெற்ற சாதாரண விசுவாசி ஒவ்வொருவருக் ...கும் இருக்கிறது. நான் "என் பிதாவினிடத்திற்குப் போகிறபடி

யினால் இனி அற்புதங்கள் நடக்கப் போவதில்லை, குருடர்கள் பார்வையடையப் போவதில்லை, மரித்தோர் எழும்ப மாட்டார்கள், என்று இயேசு அங்கலாய்த்துக் கொண்டாரா? அவர் பிதாவினிடத்திற்குப் போனபடியால்தான், அவரை விசுவாசிக்கிறவர்கள் இன்னும் பெரிய கிரியைகளைச் செய்வார்கள் என்று எதிர்பார்த்து சொன்னார்.

வரம் பெற்ற ஒரு சில தேவ தாசர்கள், நான் செய்த கிரியைகளை தாங்களும் செய்வார்கள் என்று சொல்லாமல், என்னை விசுவாசிக்கிறவன் செய்வான் என்றுதான் சொன்னார். தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடைவான் என்னும் வசனம் ஒவ்வொரு விசுவாசிக்கும் உண்மையானால், விசுவாசிக்கிறவன் இயேசுவின் கிரியைகளைச் செய்ய முடியும் என்பதும் உண்மைதான்! ஆகவே கிறிஸ்துவின் அற்புத ஊழியங்களை தொடரவேண்டிய பொறுப்பும், சிலாக்கியமும் உங்களுக்கும் எனக்கும் உரியது என்பதை மறந்து விடாதீர்கள். அப்போஸ்தலர் நடபடிகளில் சவுலின் கண்களைத் திறந்துவிட்டு அவனைப் பரிசுத்த ஆவிக்குள் நடத்தினது யார்? ஒரு சாதாரண சீஷன்தானே? பந்தி விசாரணை செய்த ஸ்தேவான் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்யவில்லையா? (அப்.6:8) சாதாரண பிலிப்பு சமாரியப் பட்டணத்தில் திமிர்வாதக்காரரையும், சப்பாணிகளையும் குணமாக்கவில்லையா? இறுதிக் காலத்தில் யாரோ ஒரு சில வரம் பெற்றவர்களின் மூலம் மட்டும் அற்புதங்கள் நடக்கப் போவதில்லை, தனக்குள் இருக்கும் டுனாமிஸ் வல்லமையை அறிந்து கொண்ட எவரும் அசாதாரண மனிதர்களாய் மாறப் போகிறார்கள். விசுவாசிக்கிறவர்கள் இதைச் செய்வார்கள்.

என்னுடைய பள்ளிப் பருவத்தில் கிறிஸ்துவின் வல்லமையைக் குறித்து, இதர மதத்து மாணவர்களும் அறிந்து கொள்ளவேண்டும் என்று ஏங்கினேன். "என் இயேசு எத்தனை வல்லமை உள்ளவர் தெரியுமா? எனக்குத் தெரிந்த ஒரு கிறிஸ்தவ பக்தன் உண்டு. அவரைக் கண்டால் பிசாசுகள் அலறும்! அவர் கை பட்டால் கொடிய கேன்சர் மறையும் ! அவர், ஆயிரக்கணக்காக மக்கள் மத்தியில் ஒரு சிலரது பெயரையும் அடையாளங்களையும் சொல்லி அழைப்பார். ஆவியானவர் அவருக்குச் சொல்வதை அறிவிப்பார்" என்று கூறி, அதனால் என், `இயேசு பெரியவர்' என்பதை அவர்களிடையே நிரூபிக்கப் பிரயாசப்படுவேன். உடனே இந்து மாணவன், ஆமாம் எசேக்கியா, நீ சொல்வது முற்றிலும் உண்மை. எங்கள் இந்து மதத்திலும் ஒரு சாமியார் உண்டு. அவர் மாம்பழத்தை மந்திரித்துக் கொடுப்பார். பிள்ளை இல்லாத மலடிகளெல்லாம் பிள்ளை பெறு

கள். அவர் உன்னைப் பார்த்தால் போதும். உன்னைப் பற்றிய விபரங்களையும் அப்படியே படம் பிடித்து வைத்துவிடுவார் ு அவனது சாமியாரின் பெருமையை மார்தட்டிப் பேசுவான். னோ குழம்பிவிடுவேன். இயேசு இவர்களது தெய்வத்தைக் காட் ம் மேலானவர் என்று எப்படி நிரூபிப்பது என்று தடுமாறு ன

உடனே ஒரு முஸ்லீம் நண்பனிடம் செல்வேன். அவனிடமும் ு வல்லமையுள்ள தேவதாசரைக் குறித்துப் புகழ் பாடுவேன். னே எங்கள் அசரத்துக்கள், அல்லாவைத் தொழுதுவிட்டு மசூ விட்டு வெளியே வருவார்கள். மக்கள் வரிசையாக நிற்பார்கள். ர்களது முகங்களில் ஊதுவார்கள். ஒரு நொடியில் மக்களது வியா கள், சூரியனைக் கண்ட பனிபோல் மறைந்து போகும்! என்று னது குருமாரின் புகழ் பாட ஆரம்பித்து விடுவான். நானோ னும் மிகுதியாகக் குழம்பி விடுவேன். மேலும் அவன் சொல்வான் வொரு மதத்திலும் சில வரம்பெற்ற ஞானிகள் இருக்கத்தான் கிறார்கள். அவர்களை நாம் மதித்து போற்றத்தான் வேண்டும் று பேசுவான். என் பிஞ்சு மூளைக்கு ஒன்றுமே புரியாது.

கடைசியாக தேவ சமுகத்தை நாடி இதற்கு விளக்கம் கேட்க மபித்தேன். நான் வட இந்தியாவில் மிஷனரியாக இருந்தபோது ன், இதற்குரிய விளக்கத்தைத் தேவன் தெளிவாக தெரியப்படுத் ார். ஒரு சில தேவ மனுஷர்கள் மட்டும் அற்புத அடையாளங் செய்து கொண்டிருக்கும் நிலைமை இருக்குமானால் மற்ற தது மக்களும் இப்படி சாக்குப் போக்குச் சொல்லி தப்பிவிட யுண்டு. அதனால் கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படுவதைவிட வ ஊழியரின் நாமங்கள் மகிமைப்பட ஏதுவுண்டு. ஆனால் 'ஒவ் ாரு விசுவாசியும்' இயேசுவின் நாமத்தில் எழும்பி அற்புத அடை ளங்களோடு வசனத்தை உறுதிப்படுத்தத் தொடங்கிவிட்டால் தைக் காணும் வேறு மதத்து மக்கள், இயேசுவின் நாமத்தில் தா ஒரு மகிமை இருக்கத்தான் செய்கிறது என்று எண்ணுவார் மேலும் இயேசு உண்மையில் நாம் வழிபடும் தெய்வங்களைக் டிலும் மகா பெரியவர்தான் என்று ஒப்புக் கொள்ளுவார்கள் ற வெளிப்பாட்டினைத் தேவன் எனக்குச் சொல்லித் தந்தார். ஸ்துவின் இறுதிக் கட்டளை இதை நமக்குப் படம் பிடித்துக் டுகிறது. அவரது இறுதி வாக்கியங்களை புதியதோர் கண் ாட்டத்தில் வாசிப்போம்.

“பின்பு அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய் சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவ ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்— (அப்படி) விசு

விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள், நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக் கேதுவான யாதொன்றைக் குடித்தாலும், அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள்; அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார். இவ்விதமாய்க் கர்த்தர் அவர்களுடனே பேசினபின்பு, பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார்."

உலகம் இரட்சிக்கப்படுவதற்கு கிறிஸ்துவானவர் காட்டிய ஒப்பற்ற வழியை உணர்ந்து பாருங்கள். கிறிஸ்துவின் ஊழியர்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும். அந்த சுவிசேஷத்தைக் கேட்டு விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். அப்படி விசுவாசித்து இரட்சிக்கப்படுகிறவர்களால் சில அடையாளங்கள் நடக்கும். இயேசுவின் நாமத்தில் பிசாசுகளைத் துரத்தி நோய்களைக் குணமாக்குவார்கள். இந்த வரிசைக்கிரமத்தை விளங்கிக்கொண்டீர்களா? கிறிஸ்துவைக் குறித்துக் கேள்விப்பட்டிராத மலைவாழ் மக்களிடம் நீங்கள் நற்செய்தியினைக் கொண்டு செல்கிறீர்கள். அந்த நற்செய்தியைக் கேட்டு ஒரு சில ஆதிவாசிகள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுகிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த ஒரு சில ஆதிவாசிகள் பிசாசுகளுக்குக் கட்டளையிடுவார்கள். அவைகள் அலறியடித்து ஓட்டம் பிடிக்கும். வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள். மருத்துவர்களால் தீர்க்கமுடியாத நோய்களும் ஒரு நொடியில் பறந்துவிடும். அப்படி அவர்கள் அற்புதங்களைச் செய்தால் மலைவாழ் மக்கள் என்ன நினைப்பார்கள்? சுவிசேஷகராகிய நீங்கள் அற்புதங்களைச் செய்யும்பொழுது, "தேவர்கள் மனுஷரூபமெடுத்து நம்மிடத்தில் இறங்கி வந்திருக்கிறார்கள்" என்று சத்தமிடுவார்கள். பலியிடுவார்கள். பூஜை செய்வார்கள். ஆனால் உங்கள் செய்தியை நம்புகிற ஒவ்வொருவரும் உங்களைப்போல் அற்புத அடையாளங்களைச் செய்யத்துவங்கிவிட்டால் உலகத்தார் என்ன நினைப்பார்கள். "இயேசுவின் நாமத்திற்கே ஒரு ஒப்பற்ற சக்தி உண்டு. அந்த நாமத்தைக் கூறும் மிக சாமான்ய மக்களும் அசாதாரணக் காரியங்களைச் செய்கிறார்களே! இவர்கள் வணங்கும் தேவன் அல்லவா பெரியவர்" என்று இயேசுவின் நாமத்தை மகிமைப்படுத்துவார்கள். இதுதான் கிறிஸ்து காட்டும் நெறி. ஆம். ஒவ்வொரு விசுவாசிகளும் தங்களுக்குள் புதைந்துகிடக்கும் தேவ வல்லமையை உணர்ந்து வெளிப்படுத்துவதுதான் இன்றைய அத்தியாவசியத் தேவை.

…ம் வாழும் காலம் முதலாம் பிரபந்தக் காலம் அல்ல, முத… பிரபந்தம் வெறுமனே துவக்கம்தான். அப்போஸ்தலர் காலம் … இன்றுவரை இயேசுவின் நாமத்தில் விசுவாசம் வைத்த … குருடர்களுக்கு அற்புத வல்லமையால் பார்வை … செய்திருக்கிறார்கள். சப்பாணிகள் இன்றும் இயேசுவின் … அங்குமிங்குமாக கால் பெற்றுக் கொண்டுதான் இருக்கி… ஆவியானவரின் வல்லமையை விசுவாசிக்கும் வீரர்கள் …இயேசுவின் அற்புதங்களை இன்றும் தொடர்ந்துகொண்டுதான் …கிறார்கள். அவர்களைப் பார்க்கும் பொழுதெல்லாம் அவர்க… குறித்துக் கேள்விப்படும் பொழுதெல்லாம் என் உள்ளம் பர… அடைகிறது. இத்தகு தாசர்களுக்காக கர்த்தரை நான் …மோடு துதிக்கிறேன். ஆனால் அது போதாது. கடலில் … பெருங்காயம்போலத்தான் அது. இப்பொழுது நாம் …போகும் எழுப்புதல் மகா வல்லமையாய் மாறப்போகிறது. …ம் பிரபந்தம் இயேசு செய்தவைகளைச் சொல்லுகிறது. …டாம் பிரபந்தம் அப்போஸ்தலர்கள் சாதித்தவைகளையும், … சாதிக்கப் போகிறவைகளையும் பேசுகிறது. முதலாம் பிரபந்…ல் இயேசுவின் வல்லமை. இரண்டாம் பிரபந்தத்தில் திருச்ச…யின் வல்லமை. கிறிஸ்து இயேசு அப்போஸ்தலர்கள் மூலம் …து தொடர்ந்ததை பரிசுத்த ஆவியானவர் மூலம் இன்றும் …ரப் போகிறார். அபிஷேகத்தைப் பெற்ற ஒவ்வொருவரும் …திகளைக் குணமாக்கவும், தீர்க்கதரிசனம் சொல்லவும் காலம் …துவிட்டது. இதுதான் நாம் வாழும் காலம். அவர் தொடங்கி…த நாம் தொடர்ந்து முடிக்கப் போகிறோம்.

…ர்களுக்கும் அற்புதம் தேவை

இயேசு பாடுபட்டபின்பு நாற்பது நாட்கள் அப்போஸ்தலர்க…டு பேசி, **“அநேகம்தெளிவானதிருஷ்டாந்தங்களினாலேஅவர்களுக்… தம்மை உயிரோடு இருக்கிறவராகக் காண்பித்தாராம்”**. அவரோடு …டு உறங்கி அற்புதங்களைக் கண்ட அப்போஸ்தலர்களுக்கே …ர் உயிர்த்தெழுந்த வல்லமையை தெளிவான திருஷ்டாந்தங்கள் …ம் நிரூபிக்க வேண்டுமானால், இன்றைய திருச்சபைக்கு எத்… அதிகமாய் இத்தகு திருஷ்டாந்தங்கள் தேவை. என்னுடைய …மைக் காலங்களில் அற்புத அடையாளங்களோடு கர்த்தரை நிரூ…பது புறஜாதிகளுக்கு மட்டும்தான் தேவை என்று நினைத்தேன். …னால் கர்த்தர் என் கண்களைத் திறந்தார். அவரது ஊழியர்க…ளும் அவரது பிள்ளைகளுக்கும்கூட, அவரது அற்புதக் கிரியைகள் …வை என்பதை இப்பொழுது நான் கண்டுகொண்டேன். அற்புத …டையாளங்களைப் பார்க்காத தேவ மக்கள் பல வேளைகளில்

உள்ளூரச் சோர்ந்துபோய், குளிர்ந்து போய் விடுகிறார்கள். கர்த்தா மீது, யாருக்கும் சொல்லாமல் உள்ளத்தின் ஆழத்தில் சந்தேகங்களும் எழும்பி விடுகிறது.

வேதாகமம் முழுவதிலும், அற்புதங்கள் இல்லாத நாட்களில் மக்கள் பின்வாங்கிப் போனதை நீங்கள் பார்க்கலாம். ஒரு விசுவாசியை எப்பொழுதும் புதுத்தெம்போடு வைத்துக்கொள்ள, அற்புதங்கள் அவசியம் என்பதை எனது சொந்த அனுபவத்தில் நான் கண்டு இருக்கிறேன். அற்புதங்களை எதிர்பார்க்கும் பொழுதும், என்னில் அவரது வல்லமை வெளிப்படும்பொழுதும் எனது ஜெப நேரம் உற்சாகமடைகிறது. வேத வாசிப்பில் புது ஆர்வம் பிறக்கிறது. அற்புதங்கள் இல்லாமல், சாதாரண வாழ்க்கையில் நாட்களைக் கடத்தும்பொழுது எனக்குள் ஆழமான சோர்வு வருவதையும் ஆர்வம் குறைவதையும் நான் தாழ்மையோடு ஒப்புக் கொள்கிறேன். அதனால்தான் என்னவோ கிறிஸ்து தாம் செய்த முதலாவது அற்புதத்தை தமது சீஷர்களது விசுவாசத்திற்காகவே செய்தார். **இவ்விதமாக இயேசு இந்த முதலாம் அற்புதத்தைக் கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே செய்து, தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார். அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்.** (யோவா.2:11) கல்யாண வீட்டில் அவர் செய்த அற்புதம், தன்னை நம்பி வந்த கூட்டம் தன் மேல் ஆழமான விசுவாசம் வைக்க வேண்டும் என்பதற்காகத்தான். அப்போஸ்தலர்கள் எல்லாவற்றையும் விட்டு அவர் பின்னே ஓடி வந்ததற்குக் காரணம் அவர்கள் கண்ட அற்புதங்கள்தான். அவர்கள் ஆத்தும பாரத்தாலும், தியாகத்தாலும் நிறைந்து அவருக்காக எல்லாவற்றையும் துறந்து ஊழியத்துக்கு வந்தார்கள் என்று நான் நினைக்கவில்லை. "**இதோ நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின் பற்றினோமே எங்களுக்கு என்ன கிடைக்கும்**"? என்பதுதான் அவர்கள் மனப் பாங்கு. (லூக்.18:28) பேதுரு கிறிஸ்துவுக்காக முழுவதும் வந்ததைப் பாருங்கள், அற்புத சக்தியினால் அவனது படகு நிறைய மீன்களைப் பிடிக்கச் செய்தார், அவனும் அவனது கூட்டாளிகளும் பிரமிப்படைந்தார்கள். சீமோன் பயந்தான், இயேசு அவனைப் பார்த்து, "**பயப்படாதே இது முதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாய் இருப்பாய் என்றார். அவர்கள் படகுகளைக் கரையிலே கொண்டுபோய் நிறுத்தி, எல்லாவற்றையும் விட்டு, அவருக்குப் பின் சென்றார்கள்.** (லூக் 5:10). படகு நிறைய மீன்களை நிரப்பினவரை நம்பி ஊழியத்திற்கு வருவது சுலபம் தானே. பேதுருவை முதலாவது கண்டபோது "**நீ யோனாவின் குமாரனாகிய சீமோன்**" என்று அவனது பெயரையும் தகப்பன் பெயரையும் சொல்லித் திகைப்பூட்டினார். நாத்தான்வேலைப் பார்த்து அவனது அந்தரங்கங்களையும் சொன்னார். இந்த அற்புதங்களைக்

சீஷர்கள் அவர்மீது விசுவாசம் வைத்து அவர் பின்னே ஓடி ...னர். கிறிஸ்துவின் வல்லமையைக் காணும் விசுவாசிகள் உள்ளங் ... அசாதாரண விசுவாசம் எழும்புகிறது. எந்தத் தியாகத்தையும் ...யும் துணிச்சல் அவர்களுக்கு அதன் மூலம் கிடைக்கிறது. என் ... இன்றும் ஜீவிக்கிறார் என்பது அவர்களது அனுதின அனு ...கிறது. என்றோ கண்ட அற்புதம், கடைசி வரை நமது விசு ...த்தை தூண்டிவிடப் போதாது. மனித மூளை அற்புதங்களைக் மறந்துவிடுகிறது. அதனால்தான் கர்த்தர் அடிக்கடி அற்புதங் ...க் காட்டி தமது சீஷர்களின் விசுவாசத்தை வளர்த்துக் கொண் ...தார். லாசரு மரித்துப் போன போது, "நான் அங்கே ...திருந்தால் நீங்கள் விசுவாசமுள்ளவர்களாகிறதற்கு ஏது உண் ...று உங்கள் நிமித்தம் சந்தோஷப்படுகிறேன் என்றார்". (யோவா. ...)

தோமா என்பவனைக் குறித்துச் சொல்லவேண்டியதில்லை. ... சீஷர்கள் கர்த்தரைக் கண்டோம் என்று அவனுடனே சொன் ...து அவன் "அவருடைய கைகளில் ஆணிகளினால் உண்டான ...த்தை நான் கண்டு, என்கையை அவருடைய விலாவிலே போட் ... ஒழிய விசுவாசிக்கமாட்டேன் என்றான்." அவனது விசுவாசத் ...த் தூண்டி எழுப்ப இயேசு மீண்டும் தரிசனமாகி, தனது ...ங்களைக் காட்ட வேண்டியிருந்தது. காணாதிருந்தும் விசுவாசிக் ...வர்கள் பாக்கியவான்கள்தான், ஆனால் அற்ப விசுவாசிகளாகிய ...கு அற்புதங்கள் அவசியப்படுகிறது என்பதை இயேசு அறிந்து ...ததிருந்தார். `யூத ராஜ சிங்கம் உயிர்த்தெழுந்தார்' என்று பாட் பாடி மகிழ்ந்த அப்போஸ்தலர்கள் திடீரென்று பின்வாங்கத் ...ங்கினார்கள். தலைவன் பேதுரு சொன்னான், "மீன் பிடிக்கப் ...கிறேன்" என்று. மற்ற சீஷர்கள், தலைவன் எவ்வழியோ ...ண்டரும் அவ்வழிதான் என்பதுபோல அவனைப் பின் ...டர்ந்தனர். அவர்களை மீண்டும் திரும்பக் கொண்டுவர ...ிஸ்து மற்றொரு அற்புதம் செய்ய வேண்டியதாயிற்று. ஆதியில் ...னை அழைத்த போது படகை மீன்களால் நிறைத்த கர்த்தர், ...டும் அதே அற்புதத்தைச் செய்து அவனது பலவீன விசுவா ...த்தை பெலப்படுத்தினார். நூற்று ஐம்பத்து மூன்று பெரிய மீன் ... அவனது வலையில் சிக்கின.(யோவா. 21:11) அதனால் அவன் ...ிஸ்துவின் வலையில் நிரந்தரமாய் சிக்கிவிட்டான். இந்த அற்பு ...தைக் கண்டபிறகுதான் அவன் வலையில் கை வைப்பதையே ...த்தினான்.

பின்மாற்றக்காரர்கள் நிறைந்த திருச்சபைக்கு அற்புதங்கள் ...ன்றும் தேவை. அற்புத அடையாளங்களை அடிக்கடி காணாத

விசுவாசிகள் இன்றும் ஆதி அன்பில் குறைந்து போகிறார்கள். எந்தச் சபையில் கர்த்தருடைய வல்லமை வெளிப்பட்டு அற்புதங்கள் நடக்கிறதோ, அங்கே தேவ மக்கள் நடுவில் ஒரு அசாதாரண எதிர்பார்ப்பு உண்டாகிறது. புறஜாதியாருக்கு மட்டுமல்ல, அவரது ஊழியர்களை ஊக்குவிக்கக்கூட அற்புதங்கள் தேவை என்பதை என்னுடைய கடந்த கால மிஷனரிப் பணியிலும் நான் கண்டிருக்கிறேன். தேவனுடைய ஊழியத்திற்கென்று எழுந்து புறப்பட்ட மிஷனரிகள் இயேசுவின் நாமத்தில் அற்புதங்களைச் செய்யும் பொழுது, அசாதாரன விசுவாசம் அவர்களில் பற்றி எரிகிறது.

கிறிஸ்துவின் காலத்தில் அவர் அனுப்பின எழுபது பேரும் சந்தோஷத்தோடே திரும்பி வந்து, ஆண்டவரே உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது என்று சொன்னது போல, அந்த மிஷனரிகளை புதுத் தெம்பு நிறைக்கிறது. இன்னும் தீவிரமாய் ஊழியம் செய்யும் ஆர்வம் பிறக்கிறது. ஆம், புறஜாதியாருக்கு மட்டுமல்ல, புறஜாதியாருக்கு நற்செய்தியைச் சொல்லும் தாசர்களுக்கும் அற்புதங்கள் தேவை என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். அற்புதங்களைக் கண்டவர்தான் அற்புதங்களைச் செய்ய முடியும். அதனால்தான் கிறிஸ்து அற்புதங்களின் மூலம் தமது ஊழியர்களின் விசுவாசத்தைத் தட்டி எழுப்பிக் கொண்டிருந்தார். அவர்களது சந்தேகத்தை அற்புத வல்லமையினால் முறியடித்தார். இன்றும் நமது விசுவாசத்தைத் தட்டி எழுப்ப, அவர் அற்புதங்களைச் செய்ய ஆவலோடு இருக்கிறார்.

இறுதிக் கட்டளை:-

கிறிஸ்துவின் இறுதிக்கட்டளையைக் குறித்து நமக்கு தெளிவு தேவை. இதை வேதம் மிகத் தெளிவாகச் சொல்லுகிறது. வானத்திலிருந்து வந்த மேகம் கிறிஸ்துவை எடுத்துச் செல்வதற்கு முன்பாக அவர் வாயிலிருந்து புறப்பட்ட இறுதி வார்த்தைகளைக் கேளுங்கள். **“இவைகளை அவர் சொன்ன பின்பு அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில் உயர எடுத்துக் கொள்ளப்பட்டார்”.** (அப். 1:9) என்று வேதம் சொல்லுகிறது. எவைகளை அவர் சொன்ன பின்பு? இந்த வசனங்களைக் கவனித்துப் பாருங்கள். **“அன்றியும், அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும்போது, அவர்களை நோக்கி: யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங்கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக்காத்திருங்கள் என்று கட்டளையிட்டார். பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும் யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும்**

எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்". (அப். 1:4,5,8) பரிசுத்த ஆவியைப் பெறும்வரை எருசலேமை விட்டுப் போகாமல் காத்திருந்து, பரிசுத்த ஆவியைப் பெற்று அவரது (டுனாமிஸ்) வல்லமையோடு, பூமியின் கடைசி பரியந்தமும் சாட்சியாய் இருங்கள் என்பதுதான் கிறிஸ்துவின் உதடுகளில் இருந்து வந்த இறுதிச் சொற்கள். "உலக மெங்கும் போங்கள்" என்பதை மட்டுமே இறுதிக் கட்டளை என்று நாம் எடுக்காமல் "நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல்" என் பதையும் இணைத்துத்தான் அவரது இறுதிக் கட்டளையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இவைகளில் ஒன்றை மிகைப்படுத்தி, அடுத்ததை அறவே மறந்துவிடுவது சரிசமமான போதனை அல்ல. பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெறாமல் போவதும் ஆபத்து. பரி சுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றுக்கொண்ட பின்பு போகாமல் இருப்பதும் ஆபத்து. இவைகள் இரண்டுமே கீழ்ப்படியாமைதான். இன்று நாம் காணுவது என்ன? ஒரு சிலர் பரிசுத்த ஆவியின் வல் லமையைப் பெற்றுக் கொள்ளுங்கள், வல்லமையாய் வாழுங்கள், எரு சலேமில் கூடுங்கள் என்று கோஷமிடுகிறார்கள். வேறு சிலரோ உலகமெங்கும் போங்கள், காத்திருக்க நேரமில்லை, இரட்சிக்கப்பட் டவுடன் புறப்பட்டுப் போங்கள், சுவிசேஷம் சொல்லுவதுதான் இறுதிக்கட்டளை என்று முழக்கமிடுகிறார்கள். ஆனால் வேதத்தை திறந்த மனதோடு வாசித்தவர்கள் எருசலேமை விட்டுப் போகாதீர் கள் எனும் கட்டளையையும், உலகமெங்கும் போங்கள் எனும் கட் டளையையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகப் பார்ப்பார்கள்.

பரிசுத்த ஆவியின் (டுனாமிஸ்) வல்லமையைப் பெறும் வரை ஊழியம் என்று புறப்படுவது ஆபத்துதான். சிலர் இவைகளுக்குக் கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தைக் கொடுக்காமல் புறப்பட்டுப் போய்விடுகிறார்கள். அப்படிப் புறப்பட்டுப் போன பலர் போன படியே திரும்பி வந்ததையும் நான் பார்த்திருக்கிறேன். அல்லது ஊழியக் களத்திலேயே இருந்தாலும் உற்சாகம் குன்றி, அவர்கள் உள்ளம் ஊழியத்தில் முழுவதுமாய் இல்லாமல் திரும்பிவிட்டதையும் கண்டிருக்கிறேன். தேவனுடைய அபிஷேக நிறைவின்றி, வல்லமை யின் அனுபவமின்றி குடும்ப வாழ்வில் நுழைகிறவர்களும், ஊழியத் தில் நுழைபவர்களும் நிச்சயம் சோர்வடைவார்கள். இந்தக் கடைசி நாட்களில் அப்போஸ்தலர் காலத்து எழுப்புதலை நாம் விரைவில் காணப் போகிறோம். அப்போஸ்தலர் காலத்து எழுப்புதலுக்கு அப் போஸ்தலர்களின் ஆயத்தம்தான் தேவை. அவர்கள் ஆயத்தம் என்ன? எருசலேமில் மேல்வீட்டில் ஏறினார்கள். நூற்று இருபது பேர் கூடினர். ஜெபத்திலும் வேண்டுதலிலும் ஒருமனப்பட்டுத் தரித் திருந்தார்கள். அப்போஸ்தலரின் முதல் கூடுகையின் நோக்கம்

என்ன? அவர்கள் ஜெபத்தின் கருப்பொருள் என்ன? பரிசுத்த ஆவி யானவரின் நிறைவும், அவரிடம் இருந்து வரும் (டுனாமிஸ்) வல்லமையும்தான்! பரிசுத்த ஆவியானவர், அவரது வல்லமை, என்றபொழுது அவர்களுக்குள் இருந்த பிரிவினைகள் உடைந்தன. பரிசுத்த ஆவி என்னும் செய்தி அவர்களை ஒன்று சேர்த்தது. அவர்களை ஜெபிக்க வைத்தது. இந்தக் கடைசி நாட்களில் எல்லாக் கூடுகைகளின் பிரதான நோக்கமும் அதுவாகத்தான் இருக்க வேண்டும். எதில் வேறுபாடுகள் வந்தாலும், பரிசுத்த ஆவியின் வல்லமையோடு ஊழியம் செய்ய வேண்டும் என்பதில் மட்டும் கருத்து வேறுபாடுகள் நம்மில் வரக்கூடாது. இதுதான் அப்போஸ்தலர் கால எழுப்புதலுக்கு முதலாவது காணப்படவேண்டிய ஆயத்தம்.

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டேன் என்று சொன்னால் மட்டும் போதாது. அந்நிய பாஷை பேசுவதற்காக மட்டும் பரிசுத்த ஆவியானவர் நம்மீது வரவில்லை. "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து" என்றுதான் இயேசு சொன்னார். பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டவனுக்குள் தெய்வீக பெலன் வெளிப்பட வேண்டும். அதுதான் டுனாமிஸ் என்பதினுடைய பொருள்.

இயற்கைக்கு அப்பாற்பட்ட சாதனை புரியும் வல்லமையோடு உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும் என்பதுதான் கிறிஸ்துவின் கட்டளை. அதனால்தான் இயேசு "மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாய் இருக்கிறீர்கள். என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்." (லூக். 24:47-49) பரிசுத்த ஆவி பெற்றுக் கொண்டவன் உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படுகிறான். இந்த பெலனால் தரிப்பிக்கப்பட்டவன் சாதாரண ஊழியத்தைச் செய்ய வேண்டுவது அவசியம் இல்லையே. எருசலேமில் தொடங்கின ஊழியம் சகல தேசத்தாருக்கும் அறிவிக்கப்படவேண்டும். எருசலேமின் ஊழியம் அற்புத அடையாளங்களோடு தொடங்கினதைப் போலவே, சகல தேசங்களிலும் அது தொடர வேண்டும். இயேசுவின் நாமத்தினாலே, நற்செய்தி அதிகாரத்தோடும் வல்லமையோடும் பிரசங்கிக்கப்படவேண்டும். இந்த வல்லமையோடு ஊழியம் செய்வதற்குத்தான் நம்மை சாட்சிகளாக்கி இருக்கிறார். இந்த அற்புத ஊழியத்தைச் செய்ய வேண்டியவர் பரிசுத்த ஆவியானவர். அவரோடு இணைந்து நாம் செய்யும்பொழுது அவர் நம் மூலம் தமது வசனத்தை உறு

...டுத்துகிறார். உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் ... உங்களுடனே கூட இருக்கிறேன் என்று அவர் சொல்லவில்லையா? எதற்காக அவர் நம்மோடு கூட இருக்கிறார்? அற்புத ...யாளங்கள் மூலம் நாம் சொல்லும் நற்செய்தியை உறுதிப்படுத்துவதற்காகத்தான் என்று வேதம் திட்டமாய் தெரிவிக்கிறது. பரிசுத்த ஆவி பெற்றுக் கொண்டவர்கள் இந்த வல்லமை தங்களது ஊழியத்தில் வெளிப்படும் வரை திருப்தியடையவே கூடாது. இது ...ன் கிறிஸ்துவின் இறுதிக்கட்டளையில் முக்கிய அம்சம்.

திசை மாறின கூட்டம்

ஆனால் இந்த முக்கியச் செய்தியை விட்டு நாம் வேறு சத்தியங்களில் மூழ்கிவிடுகிறோம். இதே தவறை அன்று அப்போஸ்தலர்களும் செய்தார்கள். பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேற எருசலேமில் காத்திருங்கள் என்று இயேசு கட்டளையிட்டதும் சீஷர்கள் கவனத்தை வேறு பக்கம் திருப்பினதைக் கவனியுங்கள். "அப்பொழுது கூடி வந்திருந்தவர்கள் அவரை நோக்கி: ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர் என்று கேட்டார்கள்". "அதற்கு அவர்: பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல. பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்". (அப்.1:6-8) வல்லமையான ஊழியத்தைக் குறித்து இயேசு சொல்லிக் கொண்டிருந்தபோது, சீஷர்கள் இஸ்ரவேலுக்குக் கிடைக்கப் போகும் ராஜ்யத்தைக் குறித்து ஆர்வம் காட்டத் துவங்கிவிட்டனர். அதன் காலத்தைக் குறித்து கேள்வி கேட்டு விவரம் அறிய விரும்பினர். இது தேவையில்லாத திசை திருப்பம் என்பதை இயேசு அறிந்து கொண்டு, உடனே அவர்கள் கவனத்தை மீண்டும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமைக்கு நேரே திருப்பி விட்டார்.

இதில் நாம் ஒரு பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். நாம் கற்றுக் கொள்ளவேண்டிய சத்தியங்கள் ஏராளம் உண்டு. அவைகள் எல்லாம் முக்கியமானவைகள் தான். பரிசுத்த ஆவியின் வல்லமையோடும், அற்புதங்களோடும் பூமியின் கடைசி பரியந்தமும் அவருக்குச் சாட்சியாய் இருக்க வேண்டும் என்பதுதான் அதிமுக்கிய சத்தியம். இன்றைய திருச்சபையின் நிலைமையைச் சிந்தித்துப் பாருங்கள். இந்த அதி முக்கிய உண்மையைக் குறித்து ஆர்வம் காட்டுவதை விட அதிகமாக அந்திக் கிறிஸ்துவின் காலத்தைக் குறித்தும், அர்மகெதோனின் யுத்தத்தைக் குறித்தும், அத்திமரத்தின் காலத்தைக் குறித்தும் விவாதித்து வேறுபட்டு நிற்கின்றனர். சிலர் வேத

ஆராய்ச்சி என்று சொல்லி, சின்ன சத்தியங்களை பெரிதுபடுத்தி, காலத்தை வீணாக்கிக் கொண்டிருக்கின்றனர். இவைகள் எல்லாம் அவசியமற்றது என்று நான் சொல்லவில்லை. ஆனால், இன்றைய திருச்சபை உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டியது, பரிசுத்த ஆவியானவரைக் குறித்தும், அவருக்கு வல்லமையோடு ஊழியம் செய்வதைக் குறித்தும்தான். ஆனால் நாமோ அப்போஸ்தலரைப் போல வேறு பல உபதேசங்களில் முழுவதும் மூழ்கிவிட்டோம். தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல, பெலத்திலே உண்டாகியிருக்கிறது. காலத்தைக் குறித்து விவாதிக்கும் நேரம் இது அல்ல. கர்த்தருடைய வல்லமையை நாட வேண்டிய நேரம் இது. கர்த்தரின் வல்லமையைக் கண்டடையத்தக்க சமயம் இது. தர்க்கங்களிலும், வீண் பேச்சுகளிலும் காலத்தை நாம் விரயமாக்க முடியாது.

எலிசா இந்த உண்மையை நன்கு அறிந்தவன். எலியாவை கர்த்தர் எடுத்துக் கொள்ளப் போகிறார் என்பதை அவன் அறிந்தான். எலியாவின் மேல் இருந்த வல்லமையை இரு மடங்காகப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று துடித்தான். பேச்சைக் குறைத்து எலியாவின் பின்னே ஓடினான். ஆனால், பெத்தேலிலும், எரிகோவிலும் இருந்த தீர்க்கதரிசிகளின் புத்திரரோ அறிவுப் பெருமையிலும், அவசியம் இல்லாத வீண் பேச்சிலும் வல்லமையை இழந்தார்கள். எலிசாவையும் திசை திருப்பப் பார்த்தார்கள். **"இன்றைக்குக் கர்த்தர் உனக்குத் தலைமையாய் இருக்கிற உன் எஜமானை உன்னை விட்டு எடுத்துக் கொள்வார் என்பது உனக்குத் தெரியுமா என்றார்கள்."** (2 ராஜா. 2:5) அவனோ இந்த வியாக்கியானங்களுக்கு விடை கொடுத்து காலத்தை வீணாக்கவில்லை. "எனக்குத் தெரியும் சும்மா இருங்கள்" என்று திரும்பத்திரும்பச் சொல்லி எலியாவின் வல்லமையை நாடினான். தேவனுடைய வல்லமை உங்கள் வாழ்க்கையில் வெளிப்படத் துடிக்கிறீர்களா? எலிசாவைப்போல எல்லாவற்றையும் விட்டு, உங்கள் கவனத்தை தேவ வல்லமையின் பக்கம் திருப்புங்கள். அதை விட்டு திசைதிருப்பும் எந்த உபதேசங்களுக்கும் இரண்டாவது இடத்தைக் கொடுங்கள்.

அத்தேனே பட்டணத்தாரைப்போல வெறும் பிரசங்க ஆசையிலேயே மூழ்கி, நாம் பொழுதுபோக்க முடியாது. அத்தேனே பட்டணத்தாரைக் குறித்து வேதம் சொல்லுவதைக் கேளுங்கள். **"அந்த அத்தேனே பட்டணத்தார் எல்லாரும், அங்கே தங்குகிற அந்நியரும், நவமான காரியங்களைச் சொல்லுகிறதிலும், கேட்கிறதிலுமே ஒழிய வேறு ஒன்றிலும் பொழுதுபோக்குகிறது இல்லை".** (அப்.17:21) இன்று நாமும் புதுப் புது பிரசங்கங்களைக் கேட்பதிலும், அவைகளுக்கு மதிப்பெண்கள் கொடுப்பதிலும் பொழுதுபோக்கிக் கொண்டிருக்கிறோம். தேவனுடைய ஊழியம், பிரசங்கங்களைச் செய்வதும்

..பதும்தான் என்று நினைக்கிறீர்கள். "தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல, பெலத்திலே உண்டாயிருக்கிறது". (1கொரி. 4:20)

..கேர் கூட்டம்

சிலர் பேசிப் பேசியே வல்லமையை இழந்து விடுகிறார்கள். ..றொருசாரார், பிரகாசித்துக் கொண்டிருக்கும் தேவ ஊழியர்களைப் பார்த்துப்பார்த்து ரசிப்பதிலேயே பொழுதுபோக்கி விடுகின்..ர். இந்தத் தவறையும் அப்போஸ்தலர்கள் செய்யத் ..வங்கினார்கள். உடனே கர்த்தருடைய தூதர்கள் அவர்களுடைய கவ..தைத் திருப்பினர். "அவர் போகிறபோது அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கையில் இதோ வெண்மையான ..ஸ்திரந்தரித்தவர்கள் இரண்டு பேர் அவர்களருகே நின்று கலிலேயரா..ய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கி..ர்கள்? உங்களிடத்திலிருந்து வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக எழுந்தருளிப்போ..னாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்". (அப்.1:10,11) ..றிஸ்து மேகத்தின் மேல் ஏறுவதை அவர்கள் அண்ணாந்து பார்த்..க் கொண்டே வெகு நேரம் இருந்திருப்பார்கள். அதனால்தான் ..தூதர்கள் அவர்களைப் பார்த்து, நீங்கள் ஏன் வானத்தை அண்..ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? என்று சொல்லி, மேல் வீட்டறைக்கு ..திதப்படுத்தி அனுப்பி வைத்தார்கள். ஆம், மறைந்து சென்ற வல்..மையான ஊழியர்களை அண்ணாந்து பார்த்து அழுது புலம்பும் ..லம் அல்ல இது. கிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும் வல்லமை..ான அற்புத ஊழியரும் தங்கள் தங்கள் காலத்தில், தங்கள் வேலை..யைச் செய்து முடித்தார்கள். இது உங்களுடைய காலம்! நீங்கள் ..ற்ற வல்லமையை அப்பியாசிக்க வேண்டிய காலம்! மறைந்த ஊழியர்களுக்கு நினைவுச் சின்னம் எடுப்பதோ, கிறிஸ்துவின் பர..றின நாளை பண்டிகையாகக் கொண்டாடிக் கொண்டிருப்பதோ ..ன்று முக்கியமல்ல. இன்றைய திருச்சபை கர்த்தருக்குக் காத்தி..ந்து, பரிசுத்த ஆவியின் வல்லமையால் நிரம்பி, கிறிஸ்து மீண்டும் ..வதற்குள் அவரது வேலையைத் துரிதமாய்ச் செய்து முடிக்க ..வேண்டும். அண்ணாந்து பார்க்கும் காலம் அல்ல இது. அவரது வல்லமையை அணுகி நாடும் காலம் இது. அது மட்டுமல்ல, கிறிஸ்..துவுக்காக வல்லமையாய் எழும்பி பிரகாசிக்கும் ஊழியர்களை வலம் ..ந்துகொண்டிருக்கும் காலமும் அல்ல.மற்ற ஊழியரை மதிக்க ..வேண்டியதுதான். ஆனால் அவர்கள் வரங்களை மாத்திரம் பார்த்து, ..ங்களுக்குள் இருக்கும் வரங்களைப் பயன்படுத்தாமல் இருப்பது ..ஷ்டம். "எனக்காக ஜெபித்து தேவ சித்தத்தை எழுதுங்கள், என் ..ரீரம் சுகமடைய ஜெபியுங்கள், என் தேவைகள் சந்திக்கப்பட"

ஜெபியுங்கள்'' என்று ஊழியர்களுக்கு எழுதிக்கொண்டே, காலம் எல்லாம் கர்த்தருக்குப் பயன்படாமல் போகும் பக்தர்கள் இன்று ஏராளம். ஆனால் கிறிஸ்து உங்களைப் பார்த்து இன்று பேசுகிறார். 'மற்றவரை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்காதே. உன்னுடைய ஜெப அறைக்குள் பிரவேசி. தேவனுடைய வல்லமையை ஜெபத்திலும், வேண்டுதலிலும் நாடு. பரிசுத்த ஆவி உன் மீது வந்தபோது உனக்குள் வந்த அசாதாரண சக்தியை ஊழியத்தில் அப்பியாசப்படுத்து' என்பதே.

என்னுடைய கல்லூரி நாட்களில் எந்த ஊழியரையும் நான் விட்டு வைப்பதில்லை. வல்லமையான ஊழியர்களையும், அற்புதம் செய்கிறவர்களையும் பார்த்து விட்டால் அவர்கள் பின்னாலேயே ஓடப் பார்ப்பேன். அவரது கைகள் நம் தலைமீது கொஞ்சம் படாதா என்று ஏங்குவேன். இப்படிப்பட்ட ஏக்கம் தவறானது என்று நான் சொல்லவில்லை. ஆனால் பரிசுத்த ஆவி பெற்றுக் கொண்டவர்கள் தாம் பெற்ற மகிமையான வல்லமையை எண்ணிப் பாராது, மற்றவர்களது வல்லமையான ஊழியத்தை மட்டுமே பார்த்துப்பார்த்து பரவசப்பட்டு பயனில்லாமல் வாழ்கிறார்களே. இதனால் பரலோக ராஜ்யத்திற்கு எத்தனை பெரிய நஷ்டம் என்பதுதான் என்னுடைய மனக்கவலை. மற்றவரை அண்ணாந்து பார்ப்பதில் தவறில்லை. ஆனால் அண்ணாந்து பார்த்துக்கொண்டே இருப்பதுதான் தவறு. உண்மை ஊழியரைப் பார்த்து பாராட்டுவதில் தவறில்லை. ஆனால், அதையே ஊழியமாகக் கொள்வதுதான் தவறு. மற்ற ஊழியர் உங்களுக்காக ஜெபம் பண்ண வேண்டும் என்று விரும்புவதில் தவறில்லை. ஆனால் அவர்களது ஜெப வல்லமையிலேயே உங்கள் வாழ்க்கையை நடத்திக்கொண்டிருப்பதுதான் தவறு.

தேவனுடைய திருச்சபையே, நீ வளர வேண்டிய காலம் வந்துவிட்டது. இனிக்குழந்தையைப் போல மற்றவர்கள் உன்னைச் சுமக்க வேண்டும் என்று நீ விரும்பக்கூடாது. எழும்பு, எழும்பு உன் வல்லமையைத் தரித்துக் கொள், தூசியை உதறிவிட்டு எழுந்திரு, உன் அலங்கார வஸ்திரங்களை உடுத்திக்கொள் என்று கர்த்தர் உன்னை இன்று அழைக்கிறார்.

எலியாவும்—எலிசாவும்

இதைப் போலவே வேதத்தில் வேறு ஒரு சம்பவம் இப்பொழுது என் நினைவுக்கு வருகிறது. எலியாவும் எலிசாவும், தீர்க்கதரிசிகளின் புத்திரரும் எனக்கு முன் வருகிறார்கள். இதை இரண்டு ராஜாக்களின் புத்தகம் இரண்டாவது அத்தியாயம் அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. எலியா எடுத்துக் கொள்ளப்படும் வேளை

...டும்போது எலிசா அவன் பின்னே ஓடினதை முன்பு தியானித் ...ம். எலியா எடுத்துக் கொள்ளப்படும் செய்தி எல்லாத் தீர்க்க ...சிகளுக்கும் தெரிந்தது. ஆனால் அவர்களோ **"தூரத்திலே ...ர்த்துக் கொண்டு நின்றார்கள்".** எலிசாவோ காலத்தின் அவச ...ரத்தை உணர்ந்தான். எலியாவின் அற்புதங்கள் முடியப்போவதை ...ண்ணினான். அவரது வல்லமையான ஊழியம் முடிவடைவதைக் ...ண்டான். அவன் உள்ளம் பதைத்தது. தனது நாட்டின் நிலை ...மையை உணர்ந்தான். "இப்பொழுதுதான் ஆகாப் போன்ற பல ...ாசர்களை அசைத்தார்; கர்த்தரே தெய்வம் என்று நிரூபித்துக் ...ட்டினார்; இதற்குள் இவர் போகிறாரே; மக்கள் இன்னும் வியா ...தியிலும், பாவத்திலும், சாபத்திலும் விழுந்து கிடக்கிறார்களே; ...வர்கள் தேவையை இனி யார் சந்திப்பார்? அற்புத வல்லமையை ...ந்த தேசங்களுக்கு யார் காட்டுவார் ? " என்று அவன் உள்ளம் ...ஏங்கியது. இந்த நேரத்தை வீணடித்தால் இனி நேரம் இல்லை என் ...பதைக் கண்டு கொண்டான். எலியாவின் வல்லமையை இப்பொழுது ...றாவிட்டால், இனி எப்பொழுதும் பெற முடியாது; வாழ்க்கை ...முழுவதும் வறட்சியாய்த்தான் வாழ வேண்டும் என்பதைக் கண்ட ...ந்தான். விடாப்பிடியாக எலியாவைப் பின் தொடர்ந்தான்.

எலியாவோ எலிசாவை ஊக்குவிப்பதாகத் தெரியவில்லை. நீ ...ங்கே இரு, கர்த்தர் என்னை பெத்தேல் மட்டும் போக அனுப்பு ...றார் என்றான். பெத்தேலிலிருந்து எரிகோவுக்குப் போனான். அங் ...கயிருந்து யோர்தானுக்குப் போனான். என்னை மட்டும் கர்த்தர் ...ாகச் சொல்லுகிறார், உன்னை அல்ல என்பது போலப் பேசி ...னான். இதனால் எலிசா தளர்ந்துவிடவில்லை. **"நான் உம்மை விடு ...றதில்லை என்று கர்த்தரின் ஜீவனையும் உம்முடைய ஜீவனையும் ...கொண்டு சொல்லுகிறேன்"** என்று விடாப்பிடியாய் எலியாவைப் ...டித்துக் கொண்டான். அவனை அதைரியப்படுத்த வந்த மற்ற ...ர்க்கதரிசிகளின் வார்த்தைகளை அவன் பொருட்படுத்தவில்லை. ...வ்வொரு சோதனைகளையும் தாண்டி ஓடினான். இறுதியில் யோர் ...ான் கரைக்கு வந்தான். அப்பொழுதுதான் தீர்க்கதரிசிகளின் புத் ...ரர் ஐம்பது பேர் தூரத்திலே பார்த்துக் கொண்டு நின்றார்கள். ...லியா யோர்தானைப் பிளந்தான். அதைக் கண்டு அவர்கள் கை ...டியிருக்கலாம். என்ன அற்புதமான மனிதர்! என்று பாராட்டி ...ருக்கலாம். ஆனால் எலிசாவின் பார்வையோ வித்தியாசமானது. ...லியா செய்ததை தானும் செய்ய முடியும் என்று எண்ணினான். ...சுவாசம் இமயம் என உயர்ந்தது! நான் உனக்குச் செய்ய வேண் ...யது என்ன? கேள், என்று எலியா சொன்னதுதான் தாமதம். ...னே **"உம்மிடத்தில் உள்ள ஆவியின் வரம், எனக்கு இரட்டிப்பாய் ...கிடைக்கும்படி வேண்டுகிறேன்."** என்றான். அதற்கு எலியா **"அரி**

தான காரியத்தைக் கேட்டாய்; உன்னை விட்டு எடுத்துக் கொள்ளப்படுகையில் என்னை நீ கண்டால் உனக்குக் கிடைக்கும். இல்லாவிட்டால் கிடையாது என்றான்". அரிதான காரியத்தைக் கேட்பவர்கள் பாக்கியசாலிகள்! எலியா சுழல் காற்றிலே ஏறிப்போனான். எலிசாவோ, எலியாவைக் கண்டு "என் தகப்பனே, என் தகப்பனே, இஸ்ரவேலுக்கு ரதமும் குதிரை வீரமாய் இருந்தவரே" என்று ஏங்கி புலம்பினான். புலம்பிக்கொண்டே அவன் நின்றிருக்கவில்லை. கீழே விழுந்த எலியாவின் சால்வையைப் பிடித்து, எலியாவின் தேவன் எங்கே? என்று கூச்சலிட்டு தண்ணீரை ஓங்கி அடித்தான். என்ன ஆச்சரியம்! யோர்தான் நதி இரண்டாய் பிளந்தது. எலிசாவின் எழுச்சி நமக்கெல்லாம் ஒரு ஒப்பற்ற பாடமாக இருக்கட்டும். நாம் அங்கிருந்தால் என்ன செய்திருப்போம் தெரியுமா? எலியா எடுத்துக் கொள்ளப்பட்ட இடத்தில் நினைவாலயம் எழுப்பி வலம் வந்திருப்போம். அல்லது இயேசு பரமேறின ஒலிவமலையை படம் வரைந்து வீட்டில் மாட்டியிருப்போம். இது அல்ல தேவ சித்தம்.

அருமையானவர்களே! விக்கிள்ஸ் வொர்த் போன்ற மனிதர்களின் அற்புதங்களை பேசிக் கொண்டிருக்கிற காலம் அல்ல இது. அதைச் செய்ய வேண்டிய காலம். T.L. ஆஸ்போர்ன் கூட்டங்களின் வல்லமையைக் குறித்து வியாக்கியானம் செய்கிற காலம் அல்ல இது. அந்த வல்லமையை நமது கூட்டங்களில் செய்து காட்ட வேண்டும் எனும் திரம் பிறக்க வேண்டிய காலம் இது. இயேசுவின் வல்லமைக்கும், அற்புதங்களுக்கும் புது விளக்கம் கொடுத்துக் கொண்டிருக்கிற காலம் அல்ல இது. அவரது கிரியைகளை நாமும் செய்ய முடியும் என்று சிறகடித்து எழும்ப வேண்டிய காலம் இது. அப்போஸ்தலர் நடபடிகளை நமக்கு அனுபவமாக்கவேண்டிய காலம் இது. மீண்டும் எலிசாவின் சம்பவத்துக்கு வருவோம். எலிசா அண்ணாந்து பார்த்தான், அழுதான். அதோடு நின்றுவிடாமல் சால்வையைப் பிடித்து யோர்தானைப் பிளந்தான். எலியாவின் வல்லமை இரு மடங்காய் அவன் மூலம் செயல்படத் துவங்கியது. இப்பொழுது நமது தீர்க்கதரிசிகளைப் பாருங்கள், "எரிகோவில் பார்த்துக்கொண்டு நின்ற தீர்க்கதரிசிகளின் புத்திரர் அவனைக் கண்டவுடனே எலியாவின் ஆவி எலிசாவின் மேல் இறங்கியிருக்கிறது என்று சொல்லி, அவனுக்கு எதிர்கொண்டுபோய்த் தரைமட்டும் குனிந்து அவனை வணங்கினார்கள்". இவர்கள் பார்வையாளர்கள் மட்டுமே, பங்காளர்கள் அல்ல. இன்றும் இந்தக் கூட்டத்திற்கு பஞ்சம் இல்லை. தேவ வல்லமையை இவர்கள் வாஞ்சிக்க மாட்டார்கள். எவர்கள் மேல் அந்த வல்லமை விழுகிறதோ அவர்களை இவர்கள் பணிந்து கொள்வார்கள். அவர்களுக்குத் தொண்டு செய்வதையே தங்கள் தொழிலாக்கிக் கொள்வார்கள். இப்படித்தான் அன்று அப்போஸ்தலர்களும் அண்ணாந்து பார்த்து

...ன்று கொண்டிருந்தார்கள். கர்த்தருடைய தூதர்கள் அவர்களை ...வசரப்படுத்தி, பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றுக்கொள்ள ...அவர்களை ஜெப அறைக்கு அனுப்பி வைத்தார்கள். இதைத்தான் ...தேவ ஊழியனாகிய நானும் இன்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ...ன் கதைகளை பேசுவதை விட்டு, ரசிகர் மன்றங்களை உருவாக் ...குவதை விட்டு வெளியே வாருங்கள். கர்த்தரின் வல்லமையான ...எழுப்புதல் ஒன்று நமது தேசத்தை நோக்கி விரைந்து வருகிறது. ...இதுவரை நீங்கள் கண்டிராத அற்புத அடையாளங்களைக் காணப் ...போகிறீர்கள். வாக்குத்தத்தத்தைப் பற்றிக் கொண்டு அவர் வாச ...லில் காத்திருங்கள். அடிக்கடி தேவ சமுகத்தைத் தேடுங்கள். ஆதி ...அப்போஸ்தலரைப்போல ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்தி ...ருந்து அசாதாரண பலத்தைத் தரித்துக் கொள்ளுங்கள்.

தன்னலக் கூட்டம்

தேவனுடைய வல்லமையை மக்கள் ஏன் அனுபவிக்கத் தவறு ...றார்கள் என்று புரிகிறதா? ஒரு கூட்டத்தார் பரிசுத்த ஆவியா ...னவருக்கு கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தைக் கருதாமல் அதைவிட அதிகமாய் மற்ற உபதேசங்களில் திசை மாறி விடுகின் ...றனர். அடுத்த கூட்டத்தினரோ, தேவனால் பயன்படுத்தப்படும் ...மனிதர்களைப் பார்த்து ரசிப்பதிலேயே திருப்தியடைந்துவிடுகின்ற ...னர். மூன்றாவது கூட்டத்தினர் தேவனுடைய வல்லமையை நாடுவ ...தற்குப் பதிலாக, தங்கள் சுய லாபத்தையும், ஆதாயத்தையும் நாடி ...தங்கள் வல்லமையை வீணடித்து விடுகின்றனர். இத்தனைக்கும் கார ...ணம் கர்த்தருடைய வல்லமையை பெற்று அனுபவிக்க வேண்டிய ...காலம் இதுதான் என்பதை அறியாததுதான். நல்ல வேளை அப் ...போஸ்தலர்கள் எல்லாவற்றையும் ஒதுக்கி வைத்துவிட்டு, மேல் வீட் ...டறையில் ஏறி ஒருமனப்பட்டு ஜெபத்திலும் வேண்டுதலிலும் ...தரித்திருந்தார்கள். அனுதினமும் தேவாலயத்திலே தேவனைப் ...புகழ்ந்து துதித்துக் கொண்டிருந்தார்கள். அதனால்தான் ஆசீர்வாத ...மான பெந்தெகொஸ்தே அனுபவம் அவர்களுக்குச் சொந்தமானது. ...அந்த பெந்தெகொஸ்தே வல்லமையை அப்போஸ்தலர்களில் ஒருவன் அனுபவிக்கத் தவறிவிட்டான். அவன்தான் யூதாஸ் காரியோத்து. ...அவனுக்கு வாய்ப்பு இருந்தது. அதை நழுவவிட்டுவிட்டான். "சகோ ...தரரே, இயேசுவைப் பிடித்தவர்களுக்கு வழிகாட்டின யூதாசைக்குறித்துப் ...பரிசுத்த ஆவி தாவீதின் வாக்கினால் முன் சொன்ன வேதவாக்கியம் ...நிறைவேற வேண்டியதாயிருந்தது. அவன் எங்களில் ஒருவனாக எண்ணப் ...பட்டு, இந்த ஊழியத்திலே பங்கு பெற்றவனாயிருந்தான். அநீதத்தின் ...கூலியினால் அவன் ஒரு நிலத்தைச் சம்பாதித்து, தலைகீழாக விழுந் ...தான்; அவன் வயிறு வெடித்து, குடல்களெல்லாம் சரிந்து போயிற்று".

(அப்.1:16–18) யூதாஸ் காரியோத்து அழைக்கப்பட்ட அப்போஸ்தலன்தான். கனமான ஊழியத்திலே பங்குபெற்ற பாக்கியசாலிதான். கிறிஸ்துவின் அதிகாரத்தையும், வல்லமையையும் ஓரளவு பெற்று அனுபவித்தவன்தான். ஆனால் பெந்தெகொஸ்தே நாளைப் பார்த்து மகிழும் பாக்கியம் அவனுக்கு இல்லை. அப்போஸ்தலர் எழுப்புதலில் பங்குபெறவும் இல்லை. கிறிஸ்து பரிசுத்த ஆவியானவரைக் குறித்து பேசினதை எல்லாம் அவன் கேட்டிருப்பான். கிறிஸ்துவின் மேலிருந்த அபிஷேகத்தின் வல்லமை குறித்தும் அறிந்திருப்பான். ஆனால் வல்லமையை நாட வேண்டிய காலத்தில் சுய லாபத்தையும், வீடு நிலத்தையும், ஆஸ்திகளையும் நாடினான். தேவனுடைய டுனாமிஸ் வல்லமை பெறுவதை இழந்து வயிறு வெடித்துச் செத்தான். அவன் வாங்கின நிலமும் சபிக்கப்பட்டது. அவனது ஊழியத்தை வேறொருவன் பெற்றான். இதில் ஒரு பெரிய பாடத்தை நாம் கற்கிறோம். கர்த்தருடைய வல்லமை வெளிப்படப்போகும் இக்காலத்தில் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும் நாம் அதை நாடித் தேட வேண்டும்.

இதை அப்போஸ்தலர்கள் அறிந்து வைத்திருந்தனர். கிறிஸ்துவின் இறுதி வாசகங்கள் அவர்கள் காதுகளில் தொனித்துக் கொண்டிருந்தது. வீண் பேச்சுக்களையும், தர்க்கங்களையும் ஒதுக்கி வைத்து தேவனுடைய அற்புத சக்தியை ஆவலோடு நாடி அனுபவித்தார்கள். உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரை அவர்கள் உள்ளம் வேறு எதையும் நாடவில்லை. உன்னத பெலனால் நிரம்பினபிறகு தேவ வல்லமையை தேசங்களுக்கு வெளிப்படுத்திக் காட்டுவதிலேயே தங்களை உடைத்து ஊற்றினார்கள். பந்தி விசாரணை செய்யும் பொறுப்புகளைக்கூட பாங்காய்த் தள்ளி வைத்தார்கள். வெள்ளியும் பொன்னும் பாதங்களில் குவிந்த பொழுதும் அவர்கள் இருதயம் அதில் பறிபோகவில்லை. அதுதான் அவர்கள் வாழ்க்கையிலிருந்து புரண்டு வந்த வல்லமைக்கு வழிகோலியது. அவர்கள் நிழலைத் தொட மக்கள் அலை மோதியது. தாவீதைப் போல ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன் என்று கர்த்தருடைய மகிமையையும், வல்லமையையும் நாடிக்கொண்டே இருந்தார்கள். பிரசங்கப் பெருமையிலும், பிரசங்க வேந்தன் என்னும் பட்டப் பெயரிலும் அவர்கள் உள்ளம் திருப்தியடையவில்லை. கிறிஸ்துவின் கிரியைகளை தாங்களும் செய்தார்கள். அவைகளையும் மிஞ்சினார்கள். எருசலேமிலும் அற்புதங்கள், யூதேயாவிலும் அற்புதங்கள், சமாரியாவிலும் அற்புதங்கள், அப்பப்பா! அவர்கள் வார்த்தையிலும், வாழ்க்கையிலும், ஊழியத்திலும் கர்த்தருடைய டுனாமிஸ் வல்லமை வெள்ளமெனப் பாய்ந்தது. ஆம், கர்த்தருடைய வல்லமையை நீங்கள் அனுபவிக்க வேண்டுமானால் சுய நல விருப்

... சாம்பலாகத்தான் வேண்டும். கர்த்தருடைய வல்லமை வேண் ...லும் ஆசைத் தீயில் அவைகள் வெந்தழிய வேண்டும். இத்தகு ...தான் எலியாவையும் எலிசாவையும் அற்புத வீரர்களாய் மாற் ...

...ஸே—கேயாஸ்

எலியாவின் வல்லமையை எலிசா இரு மடங்கு பெற்றான். எலி ...வின் வல்லமையை பெறவேண்டிய அவனது வாரிசு கேயாசியோ ...ஸைப்போல சுயநலப் புயலில் சூறையாக்கப்பட்டான். அவனது ...ம் வல்லமையை நாடவும் இல்லை, அற்புதங்களைத் தேடவும் ...லை. அற்ப வாழ்க்கையின் அநித்திய ஆசைகள் அவனை அவ ...லைக்கு ஆளாக்கிவிட்டது. நாகமான் என்னும் அமைச்சன் ஏறத் ... நாலுகோடி ரூபாயோடு எலிசாவை வேண்டி நிற்கிறான். ...னின் காணிக்கையை அங்கீகரித்தருளும் என்று கெஞ்சுகிறான். ...ல எலிசாவுக்கோ நாலு கோடி அல்ல நானூறு கோடி என் ...ம் அவைகள் எல்லாம் பூஜ்யம்தான். எலியாவின் இரு மடங்கு ...மைதான் அவனது ஏக்கப் பெரு மூச்சு. வருந்தி நின்ற நாக ...வைப் பார்த்து வாங்க மாட்டேன் என்று தட்டிக் கழித்து விட் ... ஆனால் எலிசாவின் வேலைக்காரனோ அவன் பின்னே ...னான். அவன் கையில் ஏதாகிலும் வாங்குவேன் என்று பின் ...டர்ந்தான். ஆம், தேவ வல்லமையின் மீது நாட்டம் இல்லாத ... இன்றும் மனிதர் கையில் என்ன கிடைக்கும் என்று நோட்ட ...வான். எத்தனை கேவலமான சித்திரம் பாருங்கள்! இரண்டு ...று வஸ்திரங்களுக்காகவும், ஒரு தாலந்து வெள்ளிக் காசுக்காக ... துணிகரமாய் பொய் பேசினான். கிடைத்தது என்ன? இரு ...ங்குதான்! இரண்டு தாலந்து வெள்ளியை இரண்டு பைகளில் ...ட்டு இரண்டு மாற்று வஸ்திரங்களோடு இரண்டு வேலைக்கா ... கொண்டு வந்து கொடுத்தனர். இந்த அநீதத்தின் கூலி அவ ...து அபாயகரமாய் மாறியது, குஷ்டரோகம் என்னும் கொடிய ...ய் அவனையும் அவன் சந்ததியையும் பற்றிப் பிடித்து பாழ்ப ...கியது. தேவ சமுகத்தையும், எலிசாவின் சமுகத்தையும் விட்டு ...றென்றும் பிரிந்துபோனான்.

வல்லமையை நாடி வாழ்க்கையைப் பணயம் வைத்த எலிசா ...வனுக்குச் சொன்ன வார்த்தைகளைக் கேளுங்கள். ஒவ்வொரு ...றையும் அந்த வார்த்தைகளைத் தியானிக்கும்போது என் உள்ளம் ...டைந்து கண்ணீர் பீறிட்டெழுந்ததைப் பார்த்திருக்கிறேன். ...ணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரங்களையும் ஒலிவத்தோப்புகளை ... திராட்சத் தோட்டங்களையும், ஆடுமாடுகளையும், வேலைக்காரரை ... வேலைக்காரிகளையும் வாங்குகிறதற்கும் இது காலமா ?" (2ராஜா.

5:26) எத்தனை சவால் நிறைந்த வார்த்தைகள்! ஆம், நாம் வாழும் காலம் பணத்தை வாங்கவும், ஆடை ஆபரணங்களை வாங்கவும் உகந்த காலம் அல்ல. தோப்புத் துரவுகளுக்கும், ஆடு மாடுகளுக்கும் விலைபேசும் காலம் அல்ல, கர்த்தருடைய வல்லமையை நாடி அனுபவிக்க வேண்டிய காலம். அற்புதங்கள் எங்கே? என்று அங்கலாய்க்க வேண்டிய காலம் ! கர்த்தர் சீயோனிலிருந்து வல்லமையின் செங்கோலை அனுப்புவார். அதனால்தான் தாவீது, "உமது பராக்கிரமத்தின் நாளிலே உம்முடைய ஜனங்கள் மனப்பூர்வமும் பரிசுத்த அலங்காரமுமுள்ளவர்களாய் இருப்பார்கள்" என்று சொல்லுகிறார். (சங். 110:2,3) ஆம், அருமையானவர்களே, இது கர்த்தருடைய பராக்கிரமத்தின் நாள். மனப்பூர்வமாய் அந்த வல்லமையை நாம் தேட வேண்டிய நாள். இப்பொழுதே, தேவ சமுகத்தில் விழுந்து விடுங்கள் ! தேவ வல்லமையோடு தேசங்களை சுதந்தரியுங்கள்!!

விடுதலையின் ஊழியம்

ஆதியிலே தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார். அந்த ஆவியானவர் இன்றும் கிரியை செய்து கொண்டுதான் இருக்கிறார். அவருடைய கரங்கள் கட்டப்பட வில்லை. அவரது அற்புதச் செயல்கள் முடிவடையவுமில்லை. ஆவியானவர் ஒரு நாளும் செயலிழந்து நின்று கொண்டு இருக்கப் போவதும் இல்லை. பரிசுத்த ஆவியானவரை வேதம், ஓடுகின்ற நதிக்கு ஒப்பிடுகிறது. அவர் தேங்கி நிற்கும் நதி அல்ல. எசேக்கியேல் தீர்க்கதரிசி இதைத் தரிசனமாய்க் கண்டான். (எசே.47:1) "ஆலய வாசற்படியின் கீழிருந்து தண்ணீர் புறப்பட்டுக் கிழக்கே ஓடிக் கொண்டு இருந்தது. அந்தத் தண்ணீர் தெற்கே பாய்ந்தது. இந்த நதி வனாந்தர வழியாய் ஓடி கடலில் பாயும். இந்த நதி போகும் இடமெல்லாம் ஜீவப் பிராணிகள் பிழைக்கும். மீன்கள் கூட்டம் பெருகும். நதியின் ஓரத்தில் புசிக்கும் விருட்சங்கள் வளரும்" என்று தான் கண்ட காட்சியை வருணனை செய்கிறான். இந்த ஆவியானவர், வசனத்தின் சத்தியங்களை காலாகாலத்தில் புதுப்புது வெளிச்சத்தோடு நமக்குக் காட்டுகின்றார்.

ஆவியானவரோடு இணைந்து செல்லுங்கள்!

இந்த ஆவியானவரோடு இணைந்து நாமும் பீடு நடை போட வேண்டும். வேதத்தின் பழைய சத்தியங்கள், புதுப் பிரகாசத்தோடு ஜொலிக்கும்போது அதை அங்கீகரிக்கும் மனப் பக்குவம் வேண்டும். வனாந்தரப் பயணம் செய்த இஸ்ரவேலர் இரவில் அக்கினி ஸ்தம்பத்தாலும், பகலில் மேக ஸ்தம்பத்தாலும் வழி நடத்தப்பட்டார்கள். அதிகாலையில் மேகம் எழும்பும்பொழுது இஸ்ரவேலரும் எழும்பி மேகத்தோடு கூட பிரயாணம் செய்ய வேண்டும். யாராவது அந்த மேகம் எழும்பும்பொழுது எழும்பாமல், இருந்த இடத்திலேயே தங்கிவிட்டால் வனாந்தரப் பிரயாணத்தில் சிக்கித் தவிக்க வேண்டியதுதான். வாக்குத்தத்த பூமியையும் வந்து சுதந்தரிக்க முடியாது. இன்றும் கர்த்தருடைய மேகம் எழும்பி திவிரித்துச் செல்கிறது. நாம் எந்த ஒரு இடத்திலும், எந்த ஒரு சத்தியத்தையும் பிடித்துக் கொண்டு நின்று விடக் கூடாது. கர்த்தர் புதுப்புது சத்தியங்களை காலாகாலங்களில் கற்றுத் தருகிறார். அதை அங்கீகரிக்க நம்முடைய உள்ளம் விரிவடைந்து கொண்டே இருக்க வேண்டும். ஆதிச் சபையிலிருந்து பாதிச் சபையில் மறைந்த சத்தியங்கள், அனைத்தையும் கர்த்தர் மீண்டும் தமது சபைக்கு வெளிப்படுத்திக்

கொண்டே இருக்கிறார். என்றோ கற்ற சத்தியத்தில் கல்லைப் போல அசையாமல் நிற்பது ஆசீர்வாதமல்ல.

பரிசேயரும், சதுசேயரும், வேதபாரகரும் புது வெளிப்பாடுகளைப் பெற தங்கள் மனதைத் திறந்துவைக்கவில்லை. தாங்கள் கற்ற சத்தியம்தான் முழுச் சத்தியம், அது தவிர புதிதாக யார் என்ன சொன்னாலும் அவைகள் எல்லாம் கள்ள உபதேசம் என்பது அவர்களது கணிப்பு. கிறிஸ்துவின் உபதேசங்களையும், ஊழியங்களையும் அவர்கள் அங்கீகரிக்கவில்லை. பரிசுத்த ஆவியினால் அவர் செய்த அற்புதங்களை பெயல்செபூலினால் செய்கிறார் என்று வசை மொழிந்தார்கள். தங்கள் வசதிக்கேற்ப சில வேளைகளில் மோசேயின் நியாயப் பிரமாணங்களைப் பிடித்துக் கொள்வார்கள். சில வேளைகளில் பழைய ஏற்பாட்டுப் பக்தர்களைப் பற்றிக் கொள்வார்கள். அதனால்தான் கிறிஸ்து பாவிகளைவிட, பரிசேயரைக் கண்டு மனம் குமுறினார்.

இன்று நமது ஆவிக்குரிய உலகிலும், தான் கற்றுக் கொண்ட வேத வசன வெளிப்பாடுகளை முழுமையானது என்று நினைத்து, அடுத்துவரும் வெளிப்பாடுகளை அசட்டை செய்வோர் ஏராளம். சபை சரித்திரத்தைப் பார்த்தால் தேவனுடைய வசனத்தின் வெளிப்பாடுகள், அந்தந்தக் காலங்களில் கூடுதலாகிப் போனதைப் பார்க்கலாம். விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் எனும் சத்தியம் மார்ட்டின் லூத்தருக்கு வெளிப்பட்டது. இந்த சத்தியத்தை நம்பினவர்கள், லூத்தரன்'சபைகளைத் ஸ்தாபித்து, ஸ்தம்பித்து விட்டார்கள். ஆனால் தேவனோ இன்னும் கூடுதல் சத்தியங்களை காலாகாலங்களில், தமது மனிதர் மூலம் சொல்லிக் கொண்டே வந்தார். இந்தப் புதுச் சத்தியத்தை அங்கீகரிக்க முடியாதவர்கள், லூத்தர் சொன்னதைத் தவிர மற்ற யார் சொன்னதையும் தவறானது என்று தீர்ப்பளித்தார்கள்.

சிலருக்கு ஞானஸ்நான உண்மைகள் வெளிப்பட்டது. அதை நம்பினவர்கள், `பாப்டிஸ்ட்' சபையை நிறுவி, அதற்குமேல் புதுச் சத்தியம் இல்லை என்று உட்கார்ந்துவிட்டார்கள்.

எல்லோரும் சகோதரர்கள், கிறிஸ்துவின் இரத்தத்தால் கிறிஸ்துவின் அங்கங்கள் என்ற உண்மை புலப்பட்டவுடன், `பிரதரன்' சபை பிறந்தது.

எல்லாம் ஒழுங்கும் கிரமமாய் செயல்படவேண்டும் என்று சொன்னவர்கள், மெதடிஸ்ட்'ஆனார்கள்.

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் வேண்டும் என்று வலியுறுத்தினவர்கள், பெந்தெகொஸ்தே'சபையார் என அழைக்கப்பட்டார்கள்.

இரட்சிப்பைச் சொன்னவர்கள், `இரட்சண்ய சேனை' ஆனார் இவைகள் அனைத்தும், கர்த்தர் அந்தந்தக் காலங்களில் வெளிப் படுத்திய சத்தியங்களை மையமாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டவைதான். இந்த சபைப் பிரிவுகளில் தவறொன்றும் இல்லை. ஆனால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு முக்கிய சத்தியத்தைப் பிடித்துக்கொண்டு அதுதான் முழு வேதாகமம் என்பதுபோல, அடுத்து வரும் சத்தியங்களுக்கு தங்கள் மனதை மூடிக் கொள்வது மிகவும் பரிதாபமானது. யானையை நான்கு குருடர்கள் பிடித்துக் கொண்டு, ஒருவன் யானையை சுவர் என்றும், தூண் என்றும், முறம் என்றும், கயிறு என்றும் சாதித்த கதை போலத்தான் இது. ஆகவே இந்த கடைசி நாட்களில் பரிசுத்த ஆவியானவர் புதுப்பித்துத்தந்த சத்தியங்களுக்கு, நாம் நமது மனக் கதவை பூட்டிவிடக்கூடாது.

அப்போஸ்தலர் நடபடிகள் காட்டும் ஒவ்வொரு போதனைகளையும், கர்த்தர் தமது சபைக்கு ஒவ்வொன்றாய் மீண்டும் கொண்டு வருகின்றார். அப்போஸ்தலர் சபையின் அனுபவங்கள் பாதியில் நின்றுவிட்டன. ஆனால், இன்றோ கர்த்தர் மீண்டும் தம்முடைய மக்களை ஆதி நிலைமைக்குக் கொண்டு வருகிறார். ஆதி அப் போஸ்தலர் மீது இறங்கினது போலவே, இன்றும் தேவன் நம்மீதும் இறங்கி வருகின்றார். பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெற்று அந் நிய பாஷை பேசுவதோடு நின்று விடுவதும் பூரண சத்தியமாகாது. அப்படியென்றால் அந்த அனுபவத்தோடு, ஆவியின் நதி நின்றுவிட் டது என்று பொருள். ஆனால் அந்த நதியோ என்றும் பாய்ந்து செல்லும் நதி. பரிசுத்த ஆவியானவர் வரும்பொழுது தேவனுடைய வல்லமை நம் மூலம் வெளிப்படத் துவங்குகின்றன. அந்த ஆவியி னால் வியாதிகளைச் சுகமாக்க வேண்டும். அசுத்த ஆவிகளை விரட் டியடிக்க வேண்டும், அற்புதங்களுக்கு மேல் அற்புதங்களைக் காண வேண்டும்! அது மட்டுமா? பிலிப்புவைக் கர்த்தருடைய ஆவியான வர் வனாந்தரத்திலிருந்து கொண்டுபோய் ஆசோத்துப் பட்டணத் தில் சேர்த்ததுபோல, இன்றும் தமது மக்களில் சிலரையாவது இப்படிப்பட்ட அனுபவங்களில் நடத்துவார் என்றுகூட எதிர்பார்க்கலாம். பரிசுத்த ஆவியானவர் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசி எலியாவை, அப்படி இடம் விட்டு இடம் அடிக்கடி தூக்கிச் செல்வது வழக்கம் என்று நினைக்கிறேன். அதனால்தான் ஒபதியா அவனைப் பார்த்து "நான் உம்மை விட்டுப் போனவுடனே ஒருவேளை கர்த்தருடைய ஆவி யானவர் உம்மை எடுத்து, நான் அறியாத இடத்துக்குக் கொண்டு போவார்", என்று சொன்னான். (1 ராஜா. 18:12) இப்படிப்பட்ட அனுபவங்களைக் கர்த்தருடைய ஆவியானவர் தருவார் என்று உங் களால் விசுவாசிக்க முடிகிறதா? பரிசுத்த ஆவியானவரைப் பெறுவது, கொஞ்ச நேரம் உணர்ச்சிவசப்பட்டு அதோடு திருப்திய

யடைந்துவிடுவது அல்ல, இத்தகு 'அசாதாரண அனுபவங்களை பெற்று அனுபவிக்கத்தான்! சில வேளைகளில் என்னுடைய இரவுக் கனவுகளில் ஓரிடம் விட்டு வேறிடம் பறந்து செல்வதைப் போல் நான் பார்த்து மகிழ்வது உண்டு. இவைகள் நிஜ அனுபவம் ஆகும் என்றும் விசுவாசிக்கிறேன். இவைகளை குழந்தையைப்போல் விசுவாசிப்பது ஒரு மாபெரும் ஆசீர்வாதம்.

இன்று அற்புதங்களும், உன்னத அனுபவங்களும் நமக்குக் கிடைக்காமல் போவதன் முக்கியக் காரணம் நமது அவிசுவாசம் தான். நாசரேத்தூராரின் அவிசுவாசம் கிறிஸ்துவின் அற்புதங்களை மட்டுப்படுத்தியது போல, இன்றும் நமது அவிசுவாசங்கள்தான் அவரது வல்லமையை மட்டுப்படுத்துகிறது. இதுதான் கடைசிக் காலச் சாபங்களில் ஒன்று. "மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ", என்று கர்த்தர் சொன்னது இதுதான். வல்லமை எங்கும் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது. அவனது வல்லமை அதிகரிக்கும்பொது கர்த்தருடைய வல்லமை குறைந்தா காணப்படும்? இல்லவே இல்லை, பரிசுத்த ஆவியானவர் மிகுந்த பராக்கிரமத்தோடும், வைராக்கியத்தோடும் எழும்பியுள்ளார். அவரது (டுனாமிஸ்) வல்லமை உங்களிலிருந்து இதுவரை இல்லாத அளவு வெளிப்படப் போகின்றது.

நாங்கள் நடத்தும் 10 நாள் பயிற்சி முகாம்களில் கர்த்தர் செய்யும் அற்புதங்களில் சில புத்திக்கு எட்டாத புதிராய் இருக்கிறது. பண்ணைபுரம் என்னும் இடத்தில், அழகிய கட்டிடத்திற்குள் 100 பேர் கூடி ஆராதித்துக் கொண்டிருந்த வேளையில் தேவனுடைய மேகத்தைக் கண்டு சாட்சி பகர்ந்தவர்கள் உண்டு. பனித்துளிகள் போல நிஜமாகவே சரீரத்தில் சிலர்மேல் விழ, மழைதான் விழுகிறது என்று நினைத்து வெளியே பார்த்து சூரிய ஒளியின் வெயிலைக் கண்டு அதிசயித்து சாட்சி கொடுத்தவர்களும் உண்டு. சில வேளைகளில் ஆவியானவரின் வல்லமை இறங்கி வரும்போது, நிற்க முடியாமல் ஏறத்தாழ அனைவரும் தொப்பென்று விழுந்ததும் உண்டு. கர்த்தர் இன்றும் அற்புதங்களையும், அதிசயங்களையும் காண்பிக்கின்றார்.

ஒரு சிலருக்கு, இப்படி ஏதாவது புதுச் சத்தியங்களோ, அனுபவங்களோ உண்டு என்று கேட்டவுடன், அது தவறானது என்று நிரூபிக்கவே வேகத்தை ஆராயத் துவங்கிவிடுவார்கள். தங்களுக்குள்ள வேத அறிவு முழுமையான அறிவு என்பது அவர்கள் எண்ணம். அவர்களுக்கு எட்டாதவைகளை எல்லாம் தவறான உபதேசம் என்று தீர்ப்பளித்து விடுவார்கள். ஆனால் உங்களோடு என் மனபாரத்தை பகிர்ந்து கொள்கிறேன். வாஞ்சையோடும், தாழ்மையோடும் திறந்த மனதோடும், கர்த்தரது புது வெளிப்பாடுகளுக்கு நீங்கள்

இருந்தால், இதுவரை கண்டிராத பல அனுபவங்களினூடே கர்த்
தர் உங்களை எடுத்துச் செல்வார். ஆதிச் சபையில் காணப்பட்ட
சத்தியங்கள் இன்று புத்தொளி வீசி நம்மிடையே வெளிப்படு
வதை பார்க்கலாம்.

உதாரணமாக ஆதிச் சபையில் சாதாரண மனிதர்கள், அசாதார
ணக் காரியங்களைச் செய்தார்கள். ஒவ்வொரு விசுவாசியின் மூலமும்
தேவனுடைய சுவிசேஷம் எங்கும் பிரசங்கிக்கப்பட்டது. அனனியா,
பிலிப்பு, ஸ்தேவான் போன்ற சாதாரண மனிதர்கள் அசாதாரணச்
செயல்களைச் செய்தார்கள். அப்போஸ்தலர்கள் தவிர, எருசலேமை
விட்டுச் சிதறிப்போன மற்றவர்கள்தான் சுவிசேஷத்தைச் சுமந்து
சென்றார்கள். கிறிஸ்து சொன்னபடியே இறுதிக்காலத்திலும், விசு
வசிக்கிறவர்களால் இவ்வித அடையாளங்கள் நிகழப்போகிறது.
(மாற். 16:17,18) சாதாரண விசுவாசிகள் வியாதியஸ்தர்களின் மேல்
கைகளை வைத்து சுகமாக்குவார்கள், பிசாசுகளைத் துரத்துவார்கள்,
புதிதான பாஷைகளைப் பேசுவார்கள். கிறிஸ்துவின் சரீரம் முழுவ
தும் பரிசுத்த ஆவியின் வல்லமையோடு செயல்படத் துவங்கப்போ
கிறது. இந்த உண்மையைக் கர்த்தர் இந்நாட்களில் மீண்டும்
சபையில் கொண்டுவந்து நிலை நிறுத்துகிறார்.

அது மட்டுமல்ல ஆதிச் சபையிலிருந்த ஆராதனையின் ஆவி
இன்றும் சபைகளில் மீண்டும் ஊற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது.
ஆராதனையின் மேன்மையை கர்த்தர் இன்று சபைகளுக்கு வெளிப்
படுத்துகின்றார்.

ஆதிச் சபையிலிருந்த மிஷனரிப் பணியின் விழிப்புணர்வும்,
பல ஆண்டுகளுக்கு முன்பு நமது சபைகளில் வரத் துவங்கியது. எங்
கும் மிஷனரி சவால் கூட்டங்கள்! பலர் தங்கள் நல்ல வேலையை
ராஜினாமா செய்து மிஷனரிப் பணியில் தங்களை ஈடுபடுத்தினார்.
மிஷனரி ஊழியத்திற்கென்று மக்கள் மனம் உவந்து காணிக்கைகளும்
தந்து உதவினர். ஆனால் மிஷனரிப் பணியோடு நின்றுவிடக்
கூடாது!

ஆதிச் சபையிலிருந்ததுபோலவே ஊழிய வரங்களைக் குறித்த
உண்மைச் சத்தியங்களை, கர்த்தர் தமது சபைக்கு மீண்டும் நினைவு
படுத்துகிறார். இதுவரையும் சுவிசேஷகர்களையும், மேய்ப்பர்களை
யும் மாத்திரம் அதிகமாய் நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் இப்
பொழுதோ கர்த்தர் போதகர்களையும், தீர்க்கதரிசிகளையும்,
அப்போஸ்தலர்களையும் ஆங்காங்கே எழுப்பி வருகிறார். இப்படிப்
பட்ட சத்தியங்கள் இறுதிக் கால சபையில் நாளுக்கு நாள் வெளிப்
பட்டுக் கொண்டே வருகிறது. ஆகவே தயவு செய்து உங்களுக்கு
தெரிந்த சத்தியங்கள் போதுமானது என்று நினைத்து உட்கார்ந்து

விடாதிர்கள். ஆவியானவர் கூடுதல் சத்தியங்களை திறந்த மனமுள்ளவர்களுக்கு கொடுத்துக் கொண்டு வருகிறார். மெய்யாகவே ஆவியானவர் அசைவாடுகின்றார். இந்தக் கடைசி காலத்தில் கர்த்தருடைய ஆவியானவர், விடுதலையின் ஊழியம் என்பதைக் குறித்தும் தமது சபையோடு பேசுகின்றார். இந்த விடுதலை ஊழியம் தேவமக்கள் பூரண விடுதலையோடு வாழ வழி திறக்கிறது. இத்தகு விடுதலை ஊழியத்தைக் குறித்தும், ஊழியரைக் குறித்தும் நாம் இனிவரும் செய்திகளில் தியானிக்கப் போகிறோம்.

இன்றைய திருச்சபைக்கு ஆவியானவர் கற்றுத்தரும் பாடங்களில் விடுதலையின் ஊழியம் மிக முக்கியமானது. பரிசுத்த ஆவியானவர் நம்மை நிறைக்கும்போது அவரது டுனாமிஸ் வல்லமையினால் சாத்தானையும் அவனது தூதர்களையும் கண்டறிந்து, அவைகளை மேற்கொண்டு, மக்களை விடுவிப்பதுதான் விடுதலையின் ஊழியம். இயேசு கிறிஸ்துவை தேவன் பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினதினால்தான் பிசாசின் பிடியில் அகப்பட்ட யாவரையும் அவரால் குணமாக்க முடிந்தது என்று முன்னர் கண்டோம். பரிசுத்த ஆவியானவரின் டுனாமிஸ் வல்லமையோடு கிறிஸ்து தேவ ஆலயத்தில் போதித்துக் கொண்டிருந்தபோது, அசுத்த ஆவி பிடித்த மனிதன் அலறினான். இயேசுவின் வல்லமையுள்ள வார்த்தைக்கு கட்டுப்பட்டு அசுத்தஆவி அவனை விட்டு விலகி ஓடின. *"எல்லாரும் ஆச்சரியப்பட்டு: இது என்ன வார்த்தையோ! அதிகாரத்தோடும் வல்லமையோடும் அசுத்த ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார். அவைகள் புறப்பட்டுப் போகிறதே என்று ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டார்கள்."* (லூக்.4:36)இந்த இடத்தில் வல்லமை எனும் வார்த்தைக்கு கிரேக்க மொழியில் டுனாமிஸ் என்னும் சொல் வருகிறது. பரிசுத்த ஆவி பெற்ற ஒவ்வொருவரும் இத்தகு வல்லமையுள்ள வார்த்தைகளால் அசுத்த ஆவிகளின் மீது ஆளுகை செய்ய முடியும். பரிசுத்த ஆவி பெற்றுக்கொண்ட உங்களுக்கு இது மாபெரும் நற்செய்தி இல்லையா ?

தேவ ராஜ்யம் ஸ்தாபித்தல்

பரிசுத்த ஆவியானவர் மூலம் பிசாசுகளை துரத்தும் போது தான் தேவனுடைய ராஜ்யத்தை நாம் பூமியில் ஸ்தாபிக்க முடியும். இயேசு இதை மிக அழகாகச் சொன்னார். *"நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலவந்திருக்கிறதே".* (மத்.12:28) *"நான் தேவனுடைய விரலினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால் தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே"*(லூக். 11:20)இந்த இரு வசனங்களையும்

...விட்டுப் பாருங்கள். பரிசுத்த ஆவியினாலும் பிசாசுகளைத் துரத்...கிறார். அதே பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய விரலாகச் ...யல்பட்டு பிசாசுகளின் அந்தரங்கங்களைச் சுட்டிக் காட்டுகிறார். ...சுத்த ஆவியானவரோடு நெருங்கிப் பழகுவோர், சாத்தான் மக்...ளை எந்தப் பகுதியில் கட்டி வைத்திருக்கிறான் என்பதை கண்ட...ந்து அவர்களை விடுவிக்க பிரயாசப்படவேண்டும். கிறிஸ்துவின் ...ழியம் எல்லாம் இப்படித்தான் இருந்தது. தமது ஊழியத்தின் ரக...ங்களை கிறிஸ்து அழகாகச் சொல்வார். "பலவானை முந்திக் கட்...டாலொழிய பலவானுடைய வீட்டுக்குள் ஒருவன் புகுந்து அவன் உடைமைகளை எப்படிக் கொள்ளையிடக்கூடும்? கட்டினானேயாகில் ...வன் வீட்டைக் கொள்ளையிடலாம்?" (மத்.12:29) கிறிஸ்துவின் ...ழியம் இரண்டு வகைப்பட்டது. பரலோக ராஜ்யத்தைப் பிரசங்...பதும் அதை ஸ்தாபிப்பதும் அவர் செய்த வேலை. இன்று நம் ...டைய ஊழியமும் இவ்விரண்டு வகையைப் பொறுத்ததுதான். அவரது ராஜ்யத்தைக் குறித்து அறிவிக்க வேண்டும். அவரது ராஜ்...த்தின் வல்லமையை அப்பியாசித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு ...ஷாசை நாம் விரட்டும்பொழுதும் அந்த இடத்தில் தேவனுடைய ...ஜ்யத்தை ஸ்தாபிக்கிறோம் என்று பொருள். ஒவ்வொரு வியா...யை சுகமாக்கும்போதும் வியாதியின் ராஜ்யத்தை அழித்து சுகம் ...ன்னும் தேவ ராஜ்யத்தை அங்கு ஸ்தாபிக்கிறோம் என்று அர்த்...ம். இதை பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் நிழலாட்டமாய் ...ர்க்கலாம். தாவீது ராஜா பெலிஸ்தியனையும், அமலேக்கியரையும் ...ற்றுகையிட்டு அவர்களைத் துரத்தி அங்கே தனது ராஜ்யத்தை ஸ்தாபித்ததை நாம் காணுகின்றோம். அப்படியே சத்துரு தனது ...சனையோடு விலையேறப்பெற்ற மனிதர்களைக் கட்டி வைத்திருக்...றான். அவனை சவால்விட்டு மேற்கொண்டு அவனது வல்லமை...யினை செயலிழக்கச் செய்யும்போதுதான் அவனது பொருட்களை நாம் களவாடமுடியும். இந்தக் கலையைப் படிக்காதவர்கள் மக்களுக்...குப் பூரண விடுதலையை ஒருக்காலும் அளிக்கமுடியாது. இத்தகைய ...பெரும் பணியைத்தான் உங்கள் மீதும் என் மீதும் தேவன் வைத்...திருக்கிறார். வெற்றுப் பிரசங்கத்தினால் சத்துருவின் வல்லமைக...ளைப் பூரணமாய் கட்டிவிடமுடியாது. பரிசுத்த ஆவியானவருடைய பெலத்தினால்தான் அவனை மேற்கொள்ளமுடியும். அதற்கு எந்த ...லவான் எந்த இடத்தில் ஆட்சிபுரிகிறான் என்பதை முதலாவது அறிந்து கொள்ள வேண்டும். இதைக் காட்டித் தரும் பரிசுத்த ஆவி...யானவர் உங்களுக்குள் வாசம் பண்ணுகிறார். இதுதான் வெற்றி வாழ்க்கைக்கும் ஊழியத்திற்கும் உள்ள ரகசியம்.

கொரியாவின் எழுப்புதலைக் குறித்து வானளாவப் பேசுகி...றோம். அந்தக் கொரியாவில் அனுதினமும் ஆயிரக்கணக்கான மக்

கள் தேவனிடம் வருகின்றனர். டாக்டர் பால் யாங்கி சோ அவர்கள் இந்த எழுப்புதலுக்கு திறவுகோலை நமக்குக் காட்டித் தருகிறார். அவர் சொல்லுகிறார், "கொரிய விசுவாசிகள் ஜெபித்து, ஜெபித்து வான மண்டலத்தின் ஆவிகளை கட்டிவிட்டார்கள். அதனால் எங்கள் தேசத்திற்கு வானம் திறக்கப்பட்டுவிட்டது. இடையில் தடையேதும் இல்லை, ஆகவே பரலோகத்தின் ஆசீர்வாதங்கள் தங்கு தடையின்றி எங்கள் மேல் பொழியப்படுகிறது" என்கிறார். நமது நாடுகளின் நிலைமை என்ன தெரியுமா? வானத்திலிருந்து இறங்கி வரும் ஆசீர்வாதங்களை நாம் பெற முடியாதபடி வான மண்டலத்தில் உள்ள பல பொல்லாத ஆவிகள் தடுத்து நிறுத்துகின்றன. அதனால்தான் நாம் ஆவிகளின் போராட்டத்தில் வெற்றி காணும் வழி முறைகளைப் படித்தாக வேண்டும். சாத்தானின் வல்லமைகளைக் குறித்தும் நாம் அறிந்து வைத்திருக்க வேண்டும். நமக்குத் தேவன் கொடுத்திருக்கும் வல்லமையைச் சார்ந்து அவைகளை முறியடித்து முன் செல்ல வேண்டும். இதற்குத்தான் பரிசுத்த ஆவியானவரின் மாபெரும் சக்தி உங்களுக்குள் கிரியை செய்கிறது. இதனால்தான் இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியினால் நிறைந்தவுடன் நேரே மக்களைச் சந்திக்கும் ஊழியக களத்தில் நுழையாமல், சாத்தானைச் சந்திக்கும் போர்க்களத்தில் நுழைந்தார். *"இயேசு பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய் யோர்தானை விட்டுத் திரும்பி, ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டு நாற்பது நாள் பிசாசினால் சோதிக்கப்பட்டார்.* (லூக். 4:1,2) கிறிஸ்து இந்தப் பலவானைக் கட்டினதினால் அவர் சென்றவிடமெல்லாம் சத்துருவின் சேனை சிதறடிக்கப்பட்டது. அற்புதங்களுக்கு மேல் அற்புதங்கள் நிகழ்ந்தது. அவரைக் கண்டாலே ஆவிகள் அலறின. அவர் பெயரைச் சொன்னாலே பிசாசுகள் விலகி ஓடின. அவர் வஸ்திரத்தைத் தொட்ட அளவிலேயே வியாதிகள் விலகின. இதன் ரகசியம் அவர் பலவானை முந்திக் கட்டினதுதான்.

பிசாசு நுழைவான்

இப்பொழுது நான், சத்துரு நமது தனிப்பட்ட வாழ்க்கையில் எந்தெந்தப் பகுதிகளில் வஞ்சகமாய் நுழைந்து நம்மை ஆட்கொள்ள முடியும் என்பதை இந்தச் செய்தியில் சுருக்கமாய் கூறப்போகிறேன். மிகுந்த கவனமாய்க் கேட்டு அவனது தந்திரங்களை அறிந்து கொள்ளுங்கள். இயேசுவின் நாமத்தில் உங்கள் விடுதலையைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்.

முதலாவது சத்துரு நம்மை சோதிப்பான். வேதம் சாத்தானை சோதனைக்காரன் என்று கூறுகிறது. இந்த சோதனைக்காரன், விசுவாசிகளையும் விட்டுவைப்பதில்லை. பாவச் சோதனைகள் மூலம்

..க்குள் இடம் பிடிக்க முயலுவான். அப்படியென்றால் விசுவாசி ..ளை பிசாசுகள் பிடித்துக் கொள்ளும் என்று அர்த்தம் அல்ல. நாம் ..வொருவரும் பரிசுத்த ஆவியானவர் வாசம் பண்ணும் ஆலயமே. ..மை முழுவதுமாய் சத்துரு பிடிக்க முடியாது. ஆனால் நமது ..ரத்தில் எந்த உறுப்புகளையாவது, நமது சிந்தனைகளையாவது ..ணர்ச்சி மண்டலங்களையாவது அவன் தனது பிடிக்குள் கொண்டு .. முடியும். அதனால்தான் வேதம் "பிசாசுக்கு இடம் கொடாமலும் ..ருங்கள்", என்று திட்டமாய் எச்சரிக்கிறது. அதன் பொருள் ..ன? இடம்கொடுத்தால் இடம் பிடிப்பான். இடம் பிடிப்பதற்கு ..ன்பாக, முதலாவது நம்மை பலவித பாவச் சோதனைகளைக் ..ட்டி தோல்வி அடையச் செய்ய முயல்வான். கிறிஸ்து பசியாய் ..ருந்த வேளையைப் பார்த்து பக்கத்திலிருந்த கல்லுகளைக் காட்டி, ..ந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான். இப்ப ..த்தான் சத்துரு நமது பெலவீன நேரத்தில் நமது வாழ்க்கையில் ..ள பெலவீனப் பகுதிகளை அறிந்து, தக்க சமயத்தில் கெட்ட ..தனைகள் மூலம் நம்மோடு பேச முயல்வான். திடீரென்று அரு..ப்பான சிந்தனைகளை அள்ளி வீசுவான். தேவ சித்தத்தை ..டு விட்டு நமது சரீர இச்சைகளை நிறைவேற்றும்படி ஆசை ..ட்டுவான். இவைகள் எல்லாம் சாத்தானின் தந்திரங்கள். சில ..ளைகளில் அடுத்த சகோதரனைக் குறித்து ஆகாத எண்ணங் ..ள நமக்குள் போட்டு பகையூட்டும் வார்த்தைகளை நம்முடைய ..தில் போட்டு வைப்பான். திடீரென்று கட்டு மீறி ஆத்திரப் ..டு, வார்த்தைகளை அம்பு போல் எறியச் செய்வான். இடம், ..ருள், ஏவல் என்பதின் கலையை அறிந்தவன் அவன். தந்திர..ய் ஏவாளை வஞ்சித்ததுபோல நம்மையும் வஞ்சிக்க வருவான். ..து சாத்தானுடைய சோதனை என்பதை அறியாத நாம் பல ..வளைகளில் நம்மையே நொந்து கொள்ளுகிறோம். நமது எண்ணங் ..ள அருவருப்பாய் வருவதைக் கண்டு நான் அருவருப்பானவன் ..ன்று அங்கலாய்த்துக் கொள்கிறோம். பக்கத்திலிருந்து இத்தகு ..ண்ணங்களை நமது சிந்தனையில் தூவிக்கொண்டிருக்கும் அசுத்த ..விகளை நாம் அடையாளம் காண்பதில்லை. பல வேளைகளில் ..க்குள் இருக்கும் பகை எண்ணங்களைப் பார்த்து மனம் பதைக் ..றோம். குற்ற உணர்வு நம்மை நெருக்கிப் பிழிகிறது. இரவும் பக..ம் நம் மீது குற்றம் சொல்லவே குறியாய் இருக்கும் சத்துரு ..யம் பார்த்து இன்னும் நம்மை குன்றச் செய்கிறான். நாம் அவ..காக எழும்ப முடியாமல் துவண்டு விழுகிறோம். இதுதான் அவ..குக் கொண்டாட்டம். அவன் நமக்குள் போடும் எண்ணங்களை, ..து சொந்த எண்ணங்களாகப் பாவித்து நாம் மனம் தளருகி..றாம். இவைகளை கண்டுபிடிக்க வேண்டிய தருணம் வந்து விட்

டது. பரிசுத்த ஆவி பெற்ற நாம் இவைகளுக்கு எதிர் சவால் இட்டு எழும்பி நிற்க வேண்டும். அப்பொழுதுதான் தேச மக்களுக்கு நாம் ஆசீர்வாத வாய்க்கால்களாக மாற முடியும்.

இங்கே ஒரு விளக்கத்தையும் நான் தர விரும்புகிறேன். சோதனைகள் எல்லாவற்றையுமே சாத்தான் தருகிறான் என்று சொல்ல முடியாது. வேதம் சொல்லுகிறது, "அவனவன் தன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு சோதிக்கப்படுகிறான்." (யாக்.1:14) மாம்ச உணர்வுகளை சத்துரு பயன்படுத்திக் கொண்டு நம்மைத் தோல்வியுறச் செய்கிறான். பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் என்பது போல, நமது மாம்சப் பசியையும், மாம்ச உணர்ச்சிகளையும் சத்துரு பயனபடுத்தி நம்மை பலியாக்கும் கழுகுகளாய் சுற்றி வருகிறான். கிறிஸ்துவில் பசியை அவன் உண்டுபண்ணவில்லை. பசி அவரது சரீரத்திலிருந்து இயற்கையாய் எழும்பின. ஆனால் அந்தப் பசி நேரம் பார்த்து பக்கத்திலிருந்த கல்லைக் காட்டி, அப்பமாக்கி சாப்பிடு என்று சோதனைக்காரன் சொன்னான் பாருங்கள். அதைத் தான் நான் இங்கு குறிப்பிடுகிறேன். யார் இந்த சாத்தானின் சதித் திட்டங்களுக்கு எதிர்த்து நிற்காமல் அவனுக்கு செவி கொடுக்கிறார்களோ அவர்களுக்குள் அவன் நுழைகிறான். நமது உள்ளான மனிதனில் ஆவியானவர் வாசம் பண்ணுவதால் அதில் சத்துரு நுழைய முடியாது. ஆனால் நமது ஆத்துமாவிலோ, சரீரத்திலோ 'நாம் அனுமதிக்கும்பொழுது அவன் நுழைய முடியும்.

நாம் வாழும் உலகம் பலவித பொல்லாத ஆவிகளால் நிறைந்திருக்கிறது. உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் இருக்கிறது என்று வேதம் எச்சரிக்கிறது. பலவிதமான தீய ஆவிகள் நமது சிந்தனைகளிலும், உணர்ச்சிகளிலும் இடம் பிடிக்க அலைமோதுகின்றன. பிசாசானவன் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித் திரிகின்றான். விசுவாசத்தில் உறுதியாய் இருந்து அவனை எதிர்த்து நில்லாமல் நாம் துவண்டு போகும்போது நமது பெலவீனப் பகுதியை அவன் பற்றிப் பிடிக்கப் பார்க்கிறான். இச்சையின் ஆவி, வேசித்தன ஆவி எனப் பல ஆவிகள் இன்றும் பூமியில் உலவுகின்றன. இந்த ஆவிகள் அவிசுவாசிகளை முழுவதுமாக ஆட்டிப் படைக்கின்றன. விசுவாசிகளாகிய நம்மிலும் நுழைய, ஏதாவது ஒரு சந்து கிடைக்காதா என்று சுற்றித் திரிகின்றன. நாம் ஒன்றும் அறியாத குழந்தைகளாய் இருக்கும்போதுகூட இந்த ஆவிகள் நம்மைத் தாக்கக் கூடும். உதாரணமாக, தாயோ தகப்பனோ விபச்சாரப் பாவத்தில் விழுந்திருந்தால், அந்தப் பெற்றோருக்கு அந்த நேரத்தில் பிறக்கும் குழந்தையை கருவிலேயே இந்த ஆவிகள் பிடித்து விடுகின்றன. இந்தப் பிள்ளை நன்றாக வளர்ந்த பிறகும் இத்தகு இச்சையின் ஆவி அவர்களை விட்டுப் போவதில்லை. இது தாய்

..கப்பன்மாருக்குத் தெரியாது. தனது பிள்ளைகளுக்கு புத்திமதி ..ால்லவோ, கண்டித்துத் திருத்தவோ முயன்றும் பயன் அளிக்கா .. பிள்ளைகளை நொந்து கொள்கிறார்கள். ஆனால் உண்மையில் அந்தப் பிள்ளைக்குத் தேவை விடுதலைதான். அதுபோலவே பயத் .. ஆவிகளும் பலரது உணர்ச்சிகளில் நுழைகின்றன. நல்ல விசு ..சிகள் கூட எதற்கெடுத்தாலும் பயந்து நடுங்குவதை நீங்கள் ..ாடிருப்பீர்கள். இத்தகு பயமுள்ள ஆவி சமயம் பார்த்து நமக்குள் ..ழைகின்றது. உதாரணமாக ஒரு பயங்கரமான விபத்தை நீங்கள் ..ணகிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். தலைவேறு, முண் .. வேறு என்று விழுகிற பிணத்தை நீங்கள் கண்டு திடுக்கிடும் ..ாழுது, இத்தகு பயமுள்ள ஆவிகள் உங்களது சிந்தனையில் ஒரு ..ந்தியை ஆக்கிரமித்து விடுகிறது. அதற்குப் பிறகு இந்த பயம் ..ங்களை வேதனைப் படுத்தும். எவ்வளவு ஜெபம் பண்ணினாலும், ..தனை உபதேசங்களைக் கேட்டாலும், உங்களால் இந்தப் ..த்தை மேற்கொள்ள முடியாது. அப்படியானால் உங்களுக்குத் ..தவை வெறுமனே பிரசங்கம் அல்ல, விடுதலைதான். இந்தச் செய்தி ..டிக்கும்பொழுது பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு ஒரு விடுதலை ..க கட்டாயம் கட்டளையிடுவார் என்று நான் விசுவாசிக்கிறேன்.

இந்த ஆவிகள் உங்களை அலைக்கழிக்கின்றதா என்பதைக் ..டுபிடிக்க உங்களுக்குச் சில ஆலோசனைகளைத் தருகின்றேன். ..வைகளைக் கருத்தாய் நீங்கள் வாசித்தால் உங்கள் உண்மை ..லைமை புலப்படும். ஆவியானவராகிய தேவனுடைய விரல், உங் ..ள் பிரச்சனைகளைச் சுட்டிக்காட்டும்போது தயவு செய்து தாழ் ..மையோடு அதை ஒப்புக் கொண்டு, கர்த்தருடைய ஆவியானவர் ..ாடுக்கும் விடுதலையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

கட்டுப்படுத்த முடியாமை

உங்களில் எந்தப் பகுதியிலாவது இத்தகு தீய ஆவிகளுக்கு ..டம் கொடுத்திருந்தால், உங்களால் கட்டுப்படுத்த முடியாத சில ..க்கங்கள் உங்களுக்குள் இருக்கும். வெறுமனே மாம்சப் பிரச்சனை ..ய் இருக்குமானால் சிலுவையைப் பார்த்து, வெற்றி அடைந்துவி ..லாம். ஜெபத்திலும், தியானத்திலும் நீங்கள் கிரமமாய் வளரும் ..ாழுது அந்தப் பிரச்சனைகள் நாளுக்கு நாள் குறைந்துவிடும். அப் .. இல்லாமல் எத்தனை உபவாசம் இருந்தாலும், எவ்வளவு ..பம் பண்ணிக் கதறினாலும், எத்தனை தீர்மானங்கள் பண்ணி ..லும் உங்களால் சில பழக்கங்களை மேற்கொள்ள முடியவில்லை ..னால், ஏதோ சில ஆவிகள் உங்களுக்குள் இருந்து தொந்தரவு ..ாடுக்கின்றன என்று அர்த்தம். கட்டுப்படுத்த முடியாத இச்சை .., அடக்க முடியாத கோபங்கள், பலமான பய உணர்வுகள்,

விடாமல் தொடரும் சந்தேகங்கள், நிறுத்த முடியாத அந்தரங்க அசுத்தப் பழக்கங்கள், விடுதலை பெற முடியாத சிகரெட், குடி போன்ற போதைப் பழக்கங்கள் அசுத்த ஆவிகளின் ஆதிக்கத்தால் நிகழ்வன ஆகும்! லேகியோன் பிசாசுகள் பிடித்த மனுஷன் இதனை சித்தரிக்கின்றான். **"அவனைச் சங்கிலிகளினாலும் கட்ட ஒருவனாலும் கூடாதிருந்தது. அவன் அநேகம்தரம் விலங்குகளினாலும், சங்கிலிகளினாலும் கட்டப்பட்டிருந்தும், சங்கிலிகளை முறித்து, விலங்குகளைத் தகர்த்துப் போடுவான்: அவனை அடக்க ஒருவனாலும் கூடாதிருந்தது."** (மாற்.5:3,4) ஒருவேளை லேகியோன் பிரச்சனைகளைப்போல உங்கள் பிரச்சனைகள் இல்லாமல் இருக்கலாம். அசுத்த ஆவிகள் ஒரு மனுஷனை முழுவதும் பிடித்தாலும் அல்லது அவனது ஒரு பகுதிக்குள் நுழைந்தாலும் ஆவிகளின் சுபாவம் பொதுவாக ஒன்றாகத்தான் இருக்கும். எந்தப் பகுதியில் அவன் கை வைக்கின்றானோ அந்தப் பகுதியில் அவன் கட்டாயப்படுத்துவான். தேவக் குமாரனை பரிசுத்த நகரத்துக்குக் கொண்டுபோய், தேவாலயத்து உப்பரிகையின் மேல் நிறுத்தினான். அப்படியென்றால் அவர் விருப்பப்பட்டு அங்கு நடந்துபோகவில்லை. அவன் அவரை கட்டாயப்படுத்தி கொண்டு போய் இருக்கின்றான். இன்னும் தேவனுடைய பிள்ளைகளை சத்துரு இப்படிக் கட்டாயப்படுத்தி தனது காரியங்களைச் சாதிக்கின்றான். உங்கள் நிலைமையும் இதுதானோ? அப்படியானால் உங்களுக்குத் தேவை விடுதலைதான்! ஒரு சிலரை நான் பார்த்திருக்கிறேன். காலை முதல் இரவு வரை பேசிக்கொண்டே இருப்பார்கள். எவ்வளவு கட்டுப்படுத்தினாலும் அவர்களால் அதை மேற்கொள்ள முடியாது. சிலர் வாயில் எதையாவது அசைபோட்டுக் கொண்டே இருப்பார்கள். குறைவாக சாப்பிடுங்கள், எடையைக் குறையுங்கள் என்று டாக்டர்கள் சொன்னாலும் அவர்களால் பெருந் தீனியைக் குறைக்கவே முடியாது. சிலருக்கு கோபம் வந்து விட்டால் உடலெல்லாம் நடுங்கும். தட்டுகள் பறக்கும். எதையும் செய்யத் துணிவார்கள். இவைகள் எல்லாம் வெறுமனே கெட்ட சுபாவங்கள் அல்ல. அந்த சுபாவங்களுக்கு பின்னாலிருந்து கிரியை செய்யும் கெட்ட ஆவிகள்தான். இப்பொழுதே பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குத் தரக் காத்திருக்கும் விடுதலையை நாடுங்கள்.

அமைதியின்மை

இத்தகு ஆவிகள் நம்மைத் தாக்கும்போது நமது உள்ளம் ஒரு நிலையில் இருக்காது. நமது மனமும் அமைதியாய் இருக்காது. எப்பொழுதும் எதையாவது நினைத்துக் குழம்பிக் கொண்டிருக்கும். பதட்டமும், அலைமோதலும் தொடர்ச்சியாய் இருக்கும். தெய்வீக சமாதானம் அவர்களை ஆளுகை செய்வதை அவர்களால் உணர

...து. லேகியோன் பிசாசுகள் பிடித்தவன் இப்படித்தான் இருந்
...அவன் எப்பொழுதும் இரவும் பகலும் மலைகளிலும், கல்ல
...லும் இருந்து கூக்குரலிட்டான். அசுத்த ஆவிகள் அந்த
...மனை விட்டுப் புறப்பட்டவுடன், அவனும் உட்கார்ந்து, புத்தி
...ந்து இருக்கிறதை அனைவரும் கண்டார்கள். பரிசுத்த ஆவியி
...ல் நிறைந்த மனிதனுக்குள் ஒரு தெய்வீக சமாதானம் குடிகொண்
...கும். எந்தப் பகுதியில் நமது மனதில் அமைதி இல்லையோ
...த பகுதியில் சாத்தானுடைய கை வரிசை நிச்சயம் இருக்கிறது
...று நாம் எளிதாய்ச் சொல்லலாம்.

...சுவாசிகளுக்கும் பிசாசா?

இந்தச் செய்தியை நான் சொல்லும் பொழுது இவைகள் எல
... கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாத புறஜாதிகளுக்குச் சொல்ல
...ண்டியவைகள், விசுவாசிகளுக்கு இவை அவசியம்தானா? என்று
...கள் கேட்கலாம். அல்லது மறுபடியும் பிறந்து, ஆவியினால்
...றைந்த விசுவாசியை அசுத்த ஆவிகள் நெருங்கவே முடியாது
...று நீங்கள் நினைக்கலாம். ஒரு தேவப் பிள்ளைக்குள் கர்த்தரு
...ய ஆவியானவரும், அசுத்த ஆவிகளும் ஒன்றாக வாசம் செய்வது
...படி என்று நீங்கள் விவாதிக்கலாம். இத்தனை கேள்விகளும்
...க்கு இருந்தவைகள்தான். `ஒரு விசுவாசிக்குள் அசுத்த ஆவிகள்
...ழைய முடியாது. வெளியே இருந்துதான் தாக்கும்' என்பதை
...டாப்பிடியாய் சாதித்தவன் நான். ஆனால் திறந்த மனதோடு
...வதத்தை வாசித்து, உண்மையான மனதோடு எனது வாழ்க்கை
...யும் மற்றவர்களது வாழ்க்கையையும் அலசிப்பார்த்து, பல ஆண்
...கள் கழித்து எனது கருத்தை மாற்றிக் கொண்டேன். அதற்குப்
...கு எனக்கு வெற்றி வாழ்க்கை முன்பை விட சுலபமாய் இருக்
...றதைக் கண்டுபிடித்தேன். அது மட்டுமல்ல, மற்றவர்களுக்கும்
...தவி செய்ய என்னால் முடிகிறது. விடுதலை ஊழியத்தில் முதிர்ந்த
அனுபவம் பெற்ற சில தேவ மனிதரோடு நெருங்கிப் பழகி இவை
...ளை இன்னும் ஊர்ஜிதம் செய்து கொண்டேன். குழந்தையைப்
...பால திறந்த மனதோடு நீங்கள் இவைகளைக் கேட்பீர்களானால்
...டாயம் உங்கள் மனக் கண்கள் திறக்கப்படும். ஒரு மனிதன்,
ஆவி, ஆத்துமா, சரீரம் என்று முப்பெரும் பிரிவுகளை தனக்குள்
...காண்டவன். கிறிஸ்து நமக்குள் வரும்போது நமது ஆவியில் தான்
...கிறார். நமது உள்ளான மனுஷனைத்தான் புதுச் சிருஷ்டியாய்
...ற்றுகிறார். அதில்தான் மீட்பின் வேலை முற்றுப் பெறுகிறது
ஆனால் நம்முடைய சரீரமோ இன்னும் மீட்கப்படவில்லை. நம்மு
...டைய மனமும் நாளுக்கு நாள் மறுரூபமடையவேண்டி இருக்கிறது
...ணர்ச்சிகளும் மாறி, மாறி வித்தியாசப்படுகிறது. எந்த அள

கிரியை நமது ஆவியோடு இணைந்து நம்மை ஆளுகை செய்வானேல் அந்த அளவுக்கு நமது வாழ்வில் விடுதலையும், வல்லமையும் வெளிப்படும். சத்துரு நமது சரீரங்களிலும் நுழையலாம். அப்போதும் அவனால் சில வியாதிகளும் நோய்களும் நமக்கு வருகிறது. எல்லா வியாதிகளும் எல்லாமே நேரடியாக சாத்தானிடம் இருந்து வருகிறது என்று நான் சொல்லவில்லை. ஆனால் சில வியாதிகள் கட்டாயம் சத்துருவினால் வருகிறது. பேதுருவின் மாமி கடுமையான ஜுரத்தினால் பிடிக்கப்பட்டாள். இயேசு அவளிடத்தில் குனிந்து நின்று ஜுரம் நீங்கும்படி கட்டளையிட்டார். உடனே அது நீங்கிற்று. இந்த இடத்தில் இயேசு அந்த ஜுரத்தைப் பார்த்து அதட்டினார் என்றுதான் சரியான மொழிபெயர்ப்பு. அப்படியானால் அந்த வியாதியைக் கொடுத்தது யார் என்று நீங்கள் சுலபமாய் அறிந்து கொள்ளலாம். வேறொரு நாள் இயேசு தேவாலயத்தில் போதகம் பண்ணிக் கொண்டிருந்தார். அப்போது கூனியான ஒரு ஸ்திரீ எவ்வளவும் நிமிரக்கூடாமல் அவர் எதிரே இருந்தாள். கர்த்தர் அவளைக் குறித்து அவள் ஆபிரகாமின் குமாரத்தி என்று சாட்சியிடுகிறார். அவள் ஒரு பக்தியுள்ள பெண் என்பது இதிலிருந்து புரிகிறது. அவள் கூனியாய் இருக்கக் காரணம் என்னவென்று வேதம் சொல்லுகிறது தெரியுமா? "பெலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்ட ஒரு ஸ்திரீ" என்று கூறுகிறது. அவளைக் குறித்து இயேசு சொல்லுகிறது "இதோ, சாத்தான் பதினெட்டு வருஷமாய் கட்டியிருந்த ஆபிரகாமின் குமாரத்தியாகிய இவளை ஓய்வு நாளில் இந்தக் கட்டிலிருந்து அவிழ்த்துவிட வேண்டியதில்லையா என்றார்." (லூக்.13:10-16) இந்தப் பெண்ணின் நிலைமைக்குக் காரணம் அவளை பெலவீனப்படுத்தின ஆவிகள்தான். இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியின் வல்லமையினால் அவளை விடுதலையாக்கும் வரை அவள் அப்படித்தான் இருந்தாள். இன்றும் மக்களின் சரீரங்களை, சத்துரு இப்படி பிடித்து வைத்திருக்கிறான். அவர்கள் இரட்சிக்கப்பட்டவுடன் கண்ணிமையாக இந்த ஆவிகள் விலகிவிடுமா? அதுதான் இல்லை. அப்படி இருந்தால் மனம் திரும்பியவுடன் வியாதிகள் ஒரு நொடியில் விலகிவிடுமே! சற்று சிந்தித்துப் பாருங்கள். தேவாலயமாகிய நமது உள்ளான ஆவியில் கிறிஸ்து வருகிறார். ஆனாலும் சத்துரு அத்துமீறி நம் சரீரங்களை ஆக்கிரமித்து அடிமைப்படுத்துகிறான். இயேசுவின் நாமத்தில் அவனை அதட்டி துரத்தும் வரை தானாக அவன் வெளியேறுவது இல்லை. அதனால்தான் "எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்." என்று யாக்கோபு எழுதுகின்றார். யாக்கோபு எழுதியது நம்மைப்போன்ற விசுவாசிகளுக்குத்தான். விசுவாசிகள் எதிர்த்து நிற்கும் வரை சத்துரு விலகி ஓட மாட்டான்.

வேறொரு உதாரணத்தையும் ஆவியானவர் எனக்குக் காண்பித்தார். தேவ ஆலயத்திலே, ஆடு மாடுகளை விற்கிறவர்களும், வியாபாரிகளும் நிறைந்திருந்தார்கள். ஜெப வீட்டை கள்ளர் குகையாக்கினார்கள். கிறிஸ்து தேவ ஆலயத்தில் பிரவேசித்தார். அவர் தேவாலயத்தில் பிரவேசித்தவுடன், தாமாகவே வியாபாரிகள் ஆலயத்தைவிட்டு வெளியேறினார்களா? ஆடு மாடுகள் அவ்விடம் விட்டு ஓடினவா? இல்லையே, கிறிஸ்து கயிற்றினால் ஒரு சாட்டையை உண்டு பண்ணி அவைகளை விரட்டி அடித்த பின்புதான், அவைகள் ஓட்டம் பிடித்தன. கிறிஸ்துவின் ஆலயமாகிய நம்முடைய சரீரத்திலும், அநேகத் தீய ஆவிகள் நுழைந்து இடம் பிடிக்கின்றன. கிறிஸ்துவின் நாமத்திலும், அவரது வல்லமையிலும் நாம் எதிர்த்து நின்று துரத்தி அடிக்காவிட்டால் அவைகள் ஓடப்போவது இல்லை. மகா பரிசுத்த ஸ்தலமாகிய நமது ஆவியோடு கிறிஸ்து வாசம் பண்ணுகிறார். ஆனால் வெளிப்பிராகாரத்தில் யாரும் வந்து போகலாமே. அதுபோலத்தான் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பின்பும், தீய ஆவிகள் நம்மில் நுழைந்து தீட்டுப் படுத்தவும், தீங்கிழைக்கவும் பார்க்கின்றன.

கிறிஸ்தவனுக்குள் தீய ஆவிகள் நுழைய முடியாது என்பது வேதம் காட்டும் போதனை அல்ல. வேதம் சொல்லுகிறது. "தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிடிந்த பாழான பட்டணம்போல இருக்கிறான்", என்று! (நீதி25:28) நாமும் நம்மைக் காத்துக்கொள்ளத் தவறும்போது நம்மைச் சுற்றியுள்ள மதில்கள் விரிசலடைகின்றன. அப்பொழுதுதான் தீய ஆவிகள் நுழைகின்றன. நமது சரீரத்திலோ, ஆத்துமாவிலோ அவைகள் குடி புகுந்து நாம் விரும்பாததைச் செய்ய தூண்டிவிடுகின்றன. யூதாஸ் காரியோத்துவின் இருதயம் பணத்தின் மேல் இருந்தது. அவனது சிந்தைகள் கிறிஸ்துவைவிட்டு விலகியிருந்தது. கிறிஸ்துவோடே வாழ்ந்திருந்த அவனை, சாத்தான் விட்டு வைக்கவில்லை. "சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து அவரைக் காட்டிக் கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டினபின்பு", என்று வேதம் சொல்லுகிறது. யூதாஸ் காரியோத்தின் சிந்தனையில், சத்துரு தன் கைவரிசையைக் காட்டினான். அதற்கு யூதாஸ்காரியோத்து தன்னை விட்டுக் கொடுத்தான். கிறிஸ்து கொடுத்த துணிக்கையை "அவன் வாங்கின பின்பு, சாத்தான் அவனுக்குள் புகுந்தான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய் என்றார்". (யோவான் 13:27) மற்ற அப்போஸ்தலர்களைப் போலவே அசுத்த ஆவிகளைத் துரத்தும் வல்லமையையும், அதிகாரத்தையும் பெற்ற அவனுக்குள் சாத்தான் புகுந்தானாம்! அதற்குப் பிறகுதான் அவன்

இருதயம் கடினமாகி, கிறிஸ்துவை முத்தமிட்டு காட்டிக்கொடுக்கும் துணிச்சலைப் பெற்றான்.

பெந்தெகொஸ்தே எழுப்புதலில் மூழ்கி பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெற்ற அனனியா, சப்பீராளுக்குள்ளும் பிசாசு நுழைந்தான். அப்போஸ்தலருக்கு ஒரு பங்கை மறைத்து மாய்மாலம் செய்யப் பார்த்தார்கள். பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி சாத்தான் அவர்கள் இருதயத்தை நிரப்பினான் என்று பேதுரு கண்டு பிடித்தான். (அப்5:3) கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகளைக் குறித்து கேள்விப்பட்டவுடன், இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லையென்று அவரைக் கடிந்து கொண்ட பேதுருதான் இவன்; அப்பொழுது இயேசு அவனைப் பார்த்து "எனக்குப் பின்னாகப் போ, சாத்தானே நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்; தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய்" (மத். 16:23) என்று அவரால் கடிந்துகொள்ளப்பட்டவன்தான் இவன். மனுஷருக்கு ஏற்றவைகளைக் குறித்த சிந்தனையில் மூழ்கி விடும் ஒருவனுக்குள் சாத்தான் நுழைகிறான் என்பதில் சந்தேகமில்லை. இப்பொழுது பேதுரு, பரிசுத்த ஆவியில் நிறைந்தவனாய் அனனியாவை உற்றுப் பார்க்கிறான். அவன் இருதயத்தை சாத்தான் நிரப்பினதை பகுத்தறிந்தான். இப்படி வேதத்தில் பல எடுத்துக்காட்டுகள் உண்டு.

எனது அனுபவம்

சத்துரு ஒரு விசுவாசியின் சரீரங்களில் நுழைந்து, வியாதிகளைக் கொடுக்கிறான் என்பதை, நான் எனது அனுபவத்தில் பல முறை கண்டிருக்கிறேன். இந்த சத்தியங்களை ஆவியானவர் எனக்குக் கற்றுக்கொடுக்கத் துவங்கின காலத்தில், நான் மஸ்கட் தேசத்திற்குப் போயிருந்தேன். அப்போது சத்துரு ஒரு விசுவாசிக்குள் இடம்பிடித்து அவனது ஆத்துமாவையோ சிந்தனைகளையோ உணர்ச்சிகளையோ சரீரங்களையோ எப்படி தன் கையில் வைத்திருக்கிறான் என்பதைக் குறித்து போதித்துக் கொண்டிருந்தேன். கோதுமையை சுளகினால் புடைக்கிறதுபோல் பேதுருவை புடைத்ததையும், ஆபிரகாமின் குமாரத்தியைப் பதினெட்டு வருடமாக கூனியாக்கி வைத்திருந்ததையும், இத்தகு ஆவிகளின் பலவிதப் பிரிவுகளையும் குறித்துப் போதித்துக் கொண்டிருந்தேன். அப்போது கூட்டத்தின் முடிவில் ஒரு சகோதரி என்னிடத்தில் ஜெபத்துக்காக வந்தார்கள். பல வருடங்களாக, நீங்காத தலைவலியால் இரவெல்லாம் தூங்க முடியாமல் கஷ்டப்படுவதாகவும் , கை நிறைய மாத்திரைகளைச் சாப்பிட்டும் சுகமே இல்லையென்றும் அங்கலாய்த்துக் கொண்டார்கள். உடனே நான் வழக்கம் போல ஒரு குட்டிப் பிர

...கம் செய்தேன். "விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்", ...கள் விசுவாச அளவை உயர்த்திக்கொள்ளுங்கள்; விசுவாசம் கேள் ...யினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும். ...த்தருடைய வசனத்தை அதிகமாய் வாசியுங்கள், அப்போது உங்... விசுவாசம் பெருகும். அவர் வசனமே உங்களைக் குணமாக்கும் ...ன்று சொன்னேன். உடனே அந்த சகோதரி கதறி அழுது, வச...த்தை என்னால் ஐந்து நிமிடம்கூட வாசிக்க முடியவில்லையே, ...ாத தலைவலி, வேதத்தை வாசிக்கும்போது அதிகரித்துவிடுகிறது ...ன்றார்கள். அடுத்த நாள் அவர்கள் வீட்டிற்கு சாப்பிடும்படி அழைத்திருந்தார்கள். அவர்களைக் குறித்து சில விவரங்களைக் ...கேட்டறிந்தேன். அவர்கள் இரட்சிக்கப்பட்ட சகோதரி. பரிசுத்த ஆவியில் நிறைந்து, அந்நிய பாஷையும் பேசும் அனுபவம் பெற்றி...தார். அப்போது, என் உள்ளத்தில் ஆவியானவர் சமீப கால...வில் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்த பாடங்களை நினைத்துப் ...ர்த்தேன். சத்துரு எப்படி ஒரு மனிதனுக்குள் நுழைந்து அவனை ...நோய்களால் வதைக்க முடியும் என்றும், பாவங்களுக்கும் இச்சைக...களுக்கும் பலியாக்க முடியும் என்று சிந்தித்துப் பார்த்தேன். சத்து...வை துரத்தினால் ஒழிய, மக்களின் விடுதலைக்கு வழி இல்லை ...என்பதை அறிந்தேன். அதனால்தான் இயேசு பிரசங்கம் பண்ணிக் ...கொண்டும், பிசாசுகளைத் துரத்திக்கொண்டும் இருந்தாரோ என்று ...எண்ணினேன். (மாற். 1:39)

அப்பொழுது அந்த சகோதரியின் கடந்த காலத்தைக் குறித்து ...விசாரித்தேன். அவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும் முன்பு ஒரு ...பக்தியுள்ள இந்துவாம். காவடி தூக்கி விக்கிரகங்களை வழிபடுவார் ...களாம். அப்போது ஒருவித ஆவி அவர்கள் மேல் வந்து ஆடுமாம். அந்த நாளில் இருந்து அவர்களுக்கு இந்தத் தலைவலி சொந்தமா...ற்று. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பின்பும் பரிசுத்த ஆவி பெற்...றுக்கொண்ட பின்பும்கூட அவைகளில் இருந்து அவர்களுக்கு விடுதலை இல்லை. அப்பொழுதுதான் வேதத்தின் சில சம்பவங்கள் ...என் முன் கடந்து சென்றன. விக்கிரக ஆராதனை என்பது பிசா...சுகளை வழிபடுவதற்குச் சமம். விக்கிரக வணக்கங்களில் ஆழமாய் ...மூழ்கும் எவருக்குள்ளும் பிசாசுகள் நுழைகின்றன. அது மட்டுமல்ல ...கைரேகை பார்த்தல், குறி சொல்லுதல், ஜாதகம் கேட்டல் இப்ப...டிப்பட்ட பழக்கங்களுக்கு, தேவனை அறியாத நாட்களில் ஆட்பட்...டவர்கள்கூட, சில தீய ஆவிகளுக்கு இடம் கொடுத்து விடுகிறார்கள். அந்த ஆவிகள் அவர்களை எந்த விதத்திலாவது சித்திரவதை செய்...கிறது.

நாள் இதழ்களில் உங்கள் ராசி பலன் பார்ப்பதுகூட, பிசாசு...கள் நுழைவதற்கு உங்களுக்குள் இடமளித்துவிடும். சத்துரு தந்திர

சாவி, இள வயதிலும், நமக்கு அறிவில்லாத நாட்களிலும் நாம் செய்த சில மதியீனமான செயல்களைச் சாதகமாக்கி உள்ளே நுழைந்து விடுகிறான். நல்ல விதைகளோடுகூட இரவின் தூக்க வேளையில், களைகளை விதைத்துவிடுவதுதான் சாத்தானின் தந்திரம். இதை அறிந்து கொண்ட நான் அந்த சகோதரியின் மீது கைகளை வைத்து இயேசுவின் நாமத்தில், விக்கிரக ஆராதனையின் மூலமும், காவடி தூக்கின பொழுதும் சகோதரிக்குள் நுழைந்த ஆவியைக் கடிந்துகொண்டு வெளியேறும்படி கட்டளையிட்டேன். அவ்விடத்தைவிட்டு உடனே, நான் தங்கியிருந்த வீட்டிற்கு சென்ற ஐந்து நிமிடத்திற்குள் அந்த சகோதரி கறுப்பாக வாந்தி எடுத்திருக்கிறார்கள். அடுத்த நாள் பிரகாசமான முகத்தோடும், புன்முறுவலோடும் தனது நீண்டநாள் தலைவலி நீங்கிவிட்டதைச் சாட்சியாகச் சொன்னார்கள்.

ஆம், இயேசுவின் நாமத்திற்குள்ளும் தேவனுடைய டுனாமிஸ் வல்லமை இருக்கிறது. பரிசுத்த ஆவியைப் பெற்ற மனுஷன் இயேசுவின் நாமத்தில் விசுவாசத்தோடு கட்டளையிடும்போது பொல்லாத ஆவிகள் கீழ்ப்படியத்தான் வேண்டும், வேறு வழியே இல்லை. இயேசுவின் நாமத்தில் வானோர் (தூதர்கள்), பூதலத்தோர் (மனிதர்கள்), பூமியின் கீழானோர் (பிசாசுகள்) முழங்கால் யாவும் முடங்கித்தான் ஆகவேண்டும். இவ்வாறு எழுதியிருக்கிறதே என்று அதிகாரத்தோடு நாம் சொல்லும்பொழுது, அவைகள் அச்சத்தோடு நமக்குக் கீழ்ப்படிகின்றன. இத்தகு டுனாமிஸ் வல்லமை இறுதிக்காலத்தில் வாழும், நம் ஒவ்வொருவர் வாழ்விலும் கட்டாயம் வெளிப்படப் போகிறது.

சில சேஷ்டைகள்

அந்த மஸ்கட் அனுபவம் என்னுடைய கண்களைத் திறந்துவிட்டது. ஏன் அந்த சகோதரி வாந்தி எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. சில வேளைகளில் இப்படி ஆவிகள் விலகும்போது ஏதாவது சில சேஷ்டைகள் வெளிப்படையாகத் தெரிகின்றன. சந்திரரோகியாய் கொடுமைப்பட்டவன், வாயில் நுரை தள்ளி விடுதலை அடைந்தான். ஜெப ஆலயத்திலிருந்த அசுத்த ஆவி கொண்ட மனிதனை, அந்த ஆவிகள் கீழே தள்ளி அலைக்கழித்தன. லேகியோன் பிசாசுகள் கூக்குரலிட்டுச் சத்தமிட்டன. சில ஆவிகள் அமைதியாகவும் விலகின. இன்றும் பரிசுத்த ஆவியின் வல்லமை வெளிப்படும்போது மக்கள் பல விதங்களில் விடுதலையடைகின்றனர். நம்முடைய கண்களை இத்தகைய வெளிப்பாடுகளின் மேல் பதிக்க வேண்டிய தேவை இல்லை. இயேசுவின் மேல் மட்டும் கண்களை வைத்தால் போதும். ஆவியானவர் தமது இஷ்டம் போல மக்களை விடுதலை

...ய விட்டுக் கொடுக்க வேண்டும். எனது சமீப கால ஊழியங் ... பல விதங்களில் ஆவிகள் மக்களை விட்டு விலகுவதைப் ...த்திருக்கிறேன். ஒரு லேடி டாக்டர் என்னிடம் வந்தார்கள். எப் ...ழுதும் தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் ...வர்களுக்கு மாறி மாறி வருமாம். என்னை ஒருவரும் நேசிக்கவில்லை ...வன்கூட நேசிக்கவில்லை, எனும் கவலை அவர்களை நெருக்குமாம். ...வர்கள்மேல் கரம் வைத்து இயேசுவின் நாமத்தில் அதிகாரமெடுத்து ...ளையிட ஆரம்பித்ததும் அவர்கள் உடலெல் லாம் ...ர்த்துக்கொட்டி, வாந்தி பண்ணி, எச்சிலை தாராளமாய்த் துப் ...கொண்டிருந்தார்கள். பிறகு விடுதலையடைந்தார்கள். அவர்கள் ...ாராட்டத்தைக் கண்டு எனது உள்ளம் உருகியது. என்னுடைய ...ழியங்களில் எல்லா இடத்திலும் நான் இதைச் செய்வதில்லை. ...னால் ஆவியானவர் என்னை நடத்தும்பொழுது மட்டுமே, மக் ...ளை விடுவிக்கிற ஊழியத்தை செய்கிறேன். இவைகளை கர்த்தரு ...ய மகிமைக்காகவும், பரிசுத்த ஆவியானவா இன்றும் மக்களை ...விதங்களில் விடுதலை செய்கிறார் எனபதற்காகவும உங்களுக்கு ...க்கிக் காட்டவே சொல்லுகிறேன். சென்னையில் ஒரு சகோதரி ...ஸ்த்துமா வியாதிக்காக, என்னிடம் ஜெபிக்க வந்தார்கள். அப் ...ாது அதுவும் ஒரு ஆவி என்பதை நான் பகுத்தறிந்தேன். அந்த ...விக்குக் கட்டளையிட்டபோது, ஒரு பெரிய கல் அவரது வாயில் ...ந்து வெளியே விழுவது போல அந்த சகோதரிக்குக் காட்சி ...டத்திருக்கிறது. அந்த வினாடி முதல் பூரணமாய் அவர்கள் சுக ...ந்தார்கள். சில வேளைகளில் இப்படிப்பட்ட விடுதலை ஜெபம் ...யும்போது, சிலர் அடுத்தடுத்து கொட்டாவி விடுவார்கள்; சிலர் ...க்கும் போட்டு விழுவார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் ...ட்சிக்கப்பட்டு ஊழியம் செய்கிற மக்கள், இப்படிப்பட்ட விடு ...லையை அனுபவிக்கிறார்கள். இரட்சிக்கப்பட்டவுடன் பிசாசுகளுக் ... எனக்கும் சம்பந்தம் இல்லை என்று தயவு செய்து உங்களை ...ங்களே வஞ்சித்துக் கொள்ளாதிருங்கள்.

கர்த்தருடைய ஆவியானவர் நம் அறிவுக்கு எட்டாத எத்த ...யோ காரியங்களை இன்றும் செய்கிறார். கிறிஸ்து வேதத்தில் ...டியிராத எத்தனையோ அற்புதங்களைச் செய்திருக்கிறார். ...வைகளை எழுதினால் உலகமே கொள்ளாது என்று யோவான் ...ன்னதை மறந்துவிடாதீர்கள். ஆரம்ப நாட்களில் நான் படித்த ...ஞ்ச வேத அறிவுக்கு ஒத்துப் போகாத எதையும் உடனே நியா ...ந்ர்த்துவிடுவேன். ஆனால் கர்த்தரோடு ஏறத்தாழ கால் நூற் ...ாடுகள் பழகின பின்புதான் எதையும் திறந்த மனதோடு ...க்கிப் பார்த்து நிதானிக்கக் கற்றுக் கொண்டேன். நம்முடைய ...வு குறைவுள்ளது என்பதை அறிந்து கொள்ள எனக்கு நாட்கள்

பிடித்தது. இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்கள் நடக்கும்பொழுது, அதுவும் உண்மையான தேவ மனிதன் மூலம் நடக்கும்பொழுது, உடனடியாக அது தவறு என்று சொல்வதில், தயவு செய்து உங்கள் கவனத்தைத் திருப்பாதீர்கள். நிதானித்துப் பாருங்கள். தாழ்மையோடும் திறந்த மனதோடும் தேவனைக் கேளுங்கள். அவர் நிச்சயம் ஆராய்ந்து முடியாத அதிசயங்களை இன்றும் செய்கின்றார்.

நாம் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு, இன்று பூமியில் பலவித ஆவிகள் உலவுகின்றன. சந்தேகத்தின் ஆவிகள் கணவன் மனைவிக்குள் நுழைந்து குடும்பத்தைச் சஞ்சலப்படுத்தப் பார்க்கிறது. ஒரு கூட்டத்தில் இந்த ஆவிகளைக் கடிந்துகொண்டு வீட்டிற்குச் சென்றேன். அடுத்தநாள் ஒரு கணவன் மனைவி இருவரும் என்னிடத்தில் வந்தனர். அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் அன்பாய் நேசித்து வாழ்ந்தவர்கள். ஒரு குறிப்பிட்ட சம்பவத்திற்குப் பிறகு, அவர் தனது மனைவியின் மேல் அளவுகடந்து சந்தேகப்பட ஆரம்பித்தார் என்பதை அவர்கள் வாயிலாக அறிந்தேன். அதற்குப் பிறகு சமாதானமாய் வாழ்ந்த அந்தக் குடும்பத்தில் சண்டை இல்லாத நாட்களே இல்லை. ஒவ்வொரு நாளும் தன் மனைவியின் மேல் உள்ள சந்தேகத்தில் அவளை அடித்து உதைத்து சித்திரவதை செய்திருக்கிறார். ஆனால் அவர்கள் ஒரு உண்மையான சகோதரி. இந்த சந்தேக ஆவியினால் குடும்ப நிம்மதி குலைந்து போனது. பல மாதங்கள் ஆகிவிட்டது, அன்றைய முந்தின நாள் இரவுக் கூட்டத்தில், அவர்கள் இருவரும் வந்தபோது பரிசுத்த ஆவியின் பிரசன்னம் அந்த சகோதரனுக்கு விடுதலையளித்தது. வீட்டுக்குப் போனவுடன் தன் மனைவியைப் பார்த்து, கண்ணீரோடு தனது சந்தேகத்தையும், குற்றங்களையும் அறிக்கையிட்டிருக்கிறார். நீண்ட காலத்திற்குப் பிறகு இருவரும், பல மணி நேரம் மகிழ்ச்சியோடு தேவ பிரசன்னத்தில் செலவிட்டிருக்கிறார்கள். அடுத்த நாள் காலையில் அந்த சகோதரி தன் கணவனை வைத்துக் கொண்டே, ஆனந்தக் கண்ணீரோடு இதைச் சொல்லி, எனக்காகவே கர்த்தர் உங்களை அழைத்து வந்திருக்கிறார் என்று சொன்னார். என் உள்ளம் உடைந்தது. மிகுந்த பாரத்திற்குள்ளானேன். பரிசுத்த ஆவியில் நிறைந்து ஏழை மக்களை விடுவிக்கும் ஊழியர்கள் எத்தனை அவசியம் என்பதை உணர்ந்தேன். இன்றும் என் உள்ளத்தின் ஆழத்தில் ஒரு வல்லமையான விடுதலை ஊழியனாய் மாற வேண்டும் என்ற ஏக்கம் அகலவே இல்லை. அந்த பாரத்தோடுதான் இந்தச் செய்தியை நான் உங்களோடு பகிர்ந்து கொண்டிருக்கிறேன். இந்த விடுதலை ஊழியத்தைக் குறித்து பேச வேண்டியவைகள் ஏராளம் உண்டு. ஆனால் குறைவான நேரத்தில் சில முக்கியமான சத்தியங்களை உங்களோடு

...ந்து கொள்ள வேண்டுமே என்பதற்காக, வேகமாய் நான் ...வைகளைச் சொல்லுகிறேன்.

...ன்னியங்கள்

ஒருவேளை இதைக் கேட்கிற உங்களுக்கு ஏதாவது சில பகுதி ...யில் விடுதலை தேவை என்று உணருகிறீர்களா? அப்படியானால் ...ல காரியங்களை நீங்கள் செய்ய வேண்டும். முதலாவது உங்கள் ...ளத்தில் எல்லோரையும் மன்னித்துவிட்டீர்களா என்று ஆராய் ...ந்து பாருங்கள். மன்னிக்காத சுபாவம் உங்கள் உள்ளத்தில் இருக்கும் ...வரை, சத்துரு உங்களை உபத்திரவப்படுத்துவான். இதை இயேசு ...க அழகாக, மத்தேயு 18-ஆம் அத்தியாயத்தில் உவமையோடு ...சொல்லுகிறார். "நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன் ...வேலைக்காரனுக்கு இரங்க வேண்டாமோ? என்று சொல்லி, அவனுடைய ஆண்டவன் கோபம் அடைந்து, அவன் பட்ட கடனை எல்லாம் ...னக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ...ஒப்புக் கொடுத்தான். நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த ...குற்றங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற் போனால், என் பரம பிதா ...மும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்." (மத். 18:33-35). ஒரு ...ராஜாவுக்கு ஊழியக்காரன் ஒருவன் பலகோடி ரூபாய்கள் கடன்பட்டிருந்தான். அவனால் அதை அடைக்கவே முடியாது. தனக்கு உண்டான பெண்சாதி பிள்ளைகள், மற்ற எல்லாவற்றையும் விற்றுக் கொடுத்தாலும் அவன் கடன் தீருவது கஷ்டம். அவனோ தன் எஜமானைப் பார்த்து, தாழ விழுந்து என் மேல் பொறுமையாய் இரும் என்று கெஞ்சினான். எஜமானும் அவனுக்கு மனதிரங்கி அவனை மன்னித்துவிட்டான். உடனே அந்த ஊழியக்காரன் தன்னிடம் ஒரு 300 ரூபாய் கடன் பட்டவனது தொண்டையை நெரித்து, ...னைக் கொடு என்று கட்டாயப்படுத்தினான். அந்தக் கடன்கா...ன் காலில் விழுந்து கெஞ்சிக் கதறினான். அவனோ சம்மதியாமல் அவனைக் காவலில் போடுவித்தான். இதைக் கேட்ட ராஜா மிகவும் ...க்கம் அடைந்தான். அந்தப் பொல்லாத ஊழியக்காரனை உபாதிக்...றவர்களிடத்தில் ஒப்புவித்தான். இதுதான் இன்று நமக்கும் சம்பவிக்...ன்றன. எண்ணிறந்த பாவங்களையும் மன்னித்த நமது ஆண்டவர், ...மும் அவரைப் போலவே மற்றவர்களுக்கு இரங்கி மன்னிக்கவேண்...ம் என்று விரும்புகின்றார். அப்படி மன்னிக்காதபொழுது நம்மை ...த்திரவதை செய்யும் உபாதிக்கிற ஆவிகளுக்கு ஒப்புக்கொடுத்து ...டுகிறார். இதனால்தான் பல தேவப் பிள்ளைகளை சத்துரு ...இன்று சித்திரவதை செய்கிறான். ஒரு அனுபவமிக்க தேவ ஊழியர், ...மன்னிக்காத சுபாவத்தால் வருகிற சில நோய்களைக் குறித்து குறிப்...டுகிறார். முடக்குவாதம் (ருமாட்டிக்) பொதுவாக இதனால் வரு

[illegible] உங்கள் உள்ளத்தில் [illegible] ஓடிக்கொண்டிருக்கும் [illegible] நீங்கள் [illegible] முடியாது. பரிசுத்த ஆவியானவர் [illegible] கிரியை செய்ய முடி[illegible] [illegible] சுத்திகரித்து என் உள்ளத்தின் [illegible] இருக்கும் வரை மன்னிக்க முடியாது. [illegible] முடியாது என்று பிடி[illegible] [illegible] உபவாசத்திலும், [illegible] என் உள்ளத்தின் ஆழத்திலிருந்த [illegible] கர்த்தர் அகற்றினார். இன்னும் [illegible] நிரம்பவேண்டும் என்று [illegible] ஒரு கடுமையான போராட்டம்தான். [illegible] இதை நாம் மேற்கொள்ள வேண்டும். பரிசுத்த ஆவியானவரின் விடுதலையை அனுபவிக்க இது முதலாவது அவசியம்.

இரண்டாவது, உங்களுக்குத் தேவை தாழ்மை. தாழ்மையோடு தேவ சமுகத்தில் சென்று நமது விடுதலையைத் தேடவேண்டும். பரிசுத்த ஆவி பெற்ற தேவ ஊழியர்களிடமும், ஜெப நண்பர்களிடமும் உங்கள் பிரச்சனைகளை சொல்லி விடுதலையை நாட வேண்டும். எந்த பாவத்தினால் இத்தகு ஆவிகள் நுழைந்தன என்பதை அறிந்து அந்த பாவங்களைக் குறித்து மன்னிப்புக் கேட்க வேண்டும். பெற்றோர்களின் பாவங்களால் பிள்ளைகள் இத்தகு ஆவிகளுக்கு பலியாகிறார்கள். பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் கர்த்தர் விசாரிக்கிறார். முற்பிதாக்களின் பாவங்களினால் இஸ்ரவேலின் இளைய சந்ததி நாற்பது ஆண்டுகள் வனாந்தரத்தில் அலைந்தது. எழுபது ஆண்டுகள் பாபிலோனில் அடிமைப்பட்டுக் கிடந்தது. பெற்றோரும் தங்கள் பிள்ளைகளின் விடுதலைக்காக, தங்கள் பாவங்களை தாழ்மையோடு அறிக்கையிட்டு மனம் திரும்ப வேண்டும். ஒரு வேளை வாலிபர்களாகிய உங்களை. இச்சையின் ஆவி விடாப்பிடியாய் அலைக்கழிக்கும்போது, அந்த ஆவிகளுக்கு எந்தப் பாவத்தினால் இடம் கொடுத்தீர்கள் என்பதைக் கண்டு, தாழ்மையோடு அறிக்கையிட்டு அந்தப் பாவப் பழக்கத்திலுள்ள தொடர்பை அறுத்தெறியுங்கள். இச்சையைத் தூண்டும் திரைப்படக் காட்சிகளுக்கோ, விபச்சார விடுதிகளுக்கோ சென்று வந்தவர்களை, அவ்விடத்தில் உள்ள ஆவிகள் நுழைந்து அவர்கள் வாழ்க்கையை அலங்கோலமாக்குகிறது. இவைகளை எல்லாம் தாழ்மையோடு அறிக்கையிடுங்கள்.

மூன்றாவது, பொல்லாங்காய் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள். தொடர்ந்து உங்களை பாவத்திற்குட்படுத்தும்

அவைகளோடும் தொடர்பு வைத்துக் கொள்ளாதீர்கள். கண்ணைப் போல அருமையானதாய் இருந்தாலும் பிடுங்கிப்போட துணிவு கொள்ளுங்கள். அருவருப்பான புத்தகங்களை வீட்டில் வைக்காமல் அகற்றுங்கள். விக்கிரகங்களோ, சிலைகளோ, மந்திரவாதப் புத்தகங் களோ இருந்தால் எப்பாடு பட்டாகிலும் அவைகளை உடனே அகற்றுங்கள்.

நான்காவது, எந்த ஆவி உங்களை அலைக்கழிக்கிறது என்று கண்டுபிடித்து, இயேசுவின் அதிகாரமுள்ள நாமத்தில் அவைகள் விலகும்படி கட்டளையிடுங்கள். சத்துருவை விரட்டுவதற்குப் பதிலாக தேவனை நோக்கி ஜெபித்துக் கொண்டிருப்பதால் பலன் இல்லை. பிசாசுக்கு நீங்கள்தான் எதிர்த்து நிற்க வேண்டும். விசுவாசிக்கிறவர் கள் என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள் என்று இயேசு சொன்னார். நீங்கள்தான் அதைச் செய்ய வேண்டும். இயே சுவின் நாமத்தில் உங்களில் நுழைந்த ஆவிகளின் பெயரைச் சொல் லிக் கூப்பிட்டு உங்களை விட்டு வெளியேறும்படி கட்டளை கொடுங்கள். கர்த்தருடைய வசனத்தை, சாத்தானுக்கு எதிராக வாய் விட்டுச் சொல்லுங்கள். உங்கள் வார்த்தைகளுக்கு அவைகள் கட்டா யம் கீழ்ப்படியும் என்று விசுவாசத்தோடு கட்டளை கொடுங்கள். இயேசுவின் இரத்தத்தில் வல்லமையைக் கொண்டாடி ஆவிகளை அதட்டுங்கள். அசுத்த ஆவிகளோடு நாம் மென்மையாய்ப் பழகக்கூ டாது. இயேசுவைப் போல அதட்டவும், கடிந்துகொள்ளவும், கட்ட ளையிடவும் நமக்குத் துணிச்சல் வேண்டும்.

ஐந்தாவதாக, தேவ ஆவியினால் தேவனுடைய வசனத்திலே எப்போதும் நிறைந்திருங்கள். உங்களைவிட்டுப் புறப்படுகிற ஆவி, மீண்டும் உங்களுக்குள்ளே நுழைய முடியாது என்று நினைத்துவிடா தீர்கள். "அசுத்த ஆவி ஒரு மனுஷனைவிட்டுப் புறப்படும்போது வறண்ட இடங்களில் அலைந்து இளைப்பாறுதல் தேடியும் கண்டடையா மல்; நான் விட்டு வந்த என் வீட்டுக்குத் திரும்பிப் போவேன் என்று சொல்லி, அதில் வரும்போது அது பெருக்கி ஜோடிக்கப்பட்டிருக்கக் கண்டு, திரும்பிப்போய், தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைக் கூட்டிக் கொண்டு வந்து, உட்புகுந்து அங்கே குடியிருக்கும்; அப்பொ ழுது அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னி லைமை அதிக கேடுள்ளதாய் இருக்கும் என்றார்." (லூக். 11:24, 26) இது கிறிஸ்துவின் வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகள். இயேசு வின் நாமத்தில் கட்டளையிடும்போது, அசுத்த ஆவிகள் நம்மை விட்டுப் புறப்படுவது உண்மை. சொல்லப்போனால் அது மிகவும் சுலபம்கூட. ஆனால் அந்த ஆவி திரும்ப வராமல், நமது வீட்டை பாதுகாத்துக்கொள்ளுவதுதான் மிகக் கடினம். உங்களில் வாசம் செய்யும் தேவ ஆவியானவர் உங்களைக் காத்துக்கொள்வார். தேவ

னுடைய பெலத்தினாலே நீங்கள் காக்கப்பட்டு வருகிறீர்கள் என்று பேதுரு அழகாக எழுதி வைத்தான். (1பேது. 1:5) கர்த்தருடைய ஆவியானவரோடு நெருங்கின உறவு வைத்துக் கொள்ளுங்கள். கிறிஸ்து பரிசுத்த ஆவியினாலேயே பிசாசுகளைத் துரத்தினார் என்பதை மறந்துவிடாதீர்கள். அபிஷேக வல்லமையினால் பிசாசின் பிடியில் அகப்பட்ட யாவரையும் குணமாக்கினார் என்பது எப்பொழுதும் உங்கள் நினைவில் இருக்க வேண்டிய சத்தியம். கர்த்தருடைய ஆவியானவர் உங்களுக்குள் உலாவிக் கொண்டிருக்கிறார். கர்த்தருடைய ஆவியானவர் எங்கேயோ அங்கே விடுதலை உண்டு. ஆகவே கர்த்தருடைய ஆவியினால் நிறைந்திருங்கள். ஆவியின் பட்டயமாகிய தேவ வசனத்தை மனனம் செய்து கொள்ளுங்கள்.

கடைசியாக, துதியினாலும் தொழுகையினாலும் சத்துருவின் வல்லமைகளை மேற்கொள்ளப் பழகுங்கள். துதிகளின் நடுவில் வாசம் செய்யும் தேவன் உங்களைத் தமது பிரசன்னத்தால் மூடிக்கொள்வார். "**ராஜாக்களைச் சங்கிலிகளினாலும் அவர்களுடைய மேன்மக்களை இருப்பு விலங்குகளாலும் கட்டவும், எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை அவர்கள் பேரில் செலுத்தவும், அவர்கள் வாயில் கர்த்தரை உயர்த்தும் துதியும், அவர்கள் கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமும் இருக்கும். இந்த கனம் அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும் உண்டாகும்,**" எனும் சங்கீதக்காரனின் ஆலோசனையை கவனத்தில் வையுங்கள். (சங். 149:8)

இப்பொழுது நாம் அனைவரும் முழங்கால்படியிடுவோம். ஒரு சில நிமிடங்கள் தேவப் பிரசன்னத்தில் செலவிடப் போகிறோம். முழங்காலில் நிற்கிற நீங்கள் உங்களைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள். சாத்தான் உங்கள் சரீரத்தை வியாதியினாலும், வேதனையினாலும் கொடுமைப்படுத்துகிறானா? மருத்துவர்களுக்குப் புரியாத, மருந்துகளுக்கும் கட்டுப்படியாத வியாதியினால் கஷ்டப்படுகிறீர்களா? பரம்பரை பரம்பரையாய் ஒரு குறிப்பிட்ட வியாதி உங்களைத் தாக்குகிறதா? அப்படியானால் உங்களுக்குத் தேவை விடுதலைதான்.

குடும்பத்தில் சண்டை சச்சரவு ஓய்ந்தபாடில்லையா? சமாதானம் அடிக்கடி குலைகிறதா? சின்னஞ்சிறு காரியங்கள் பெரிய பிரிவினையாக ரூபமெடுக்கிறதா? கணவன் மனைவிக்குள் எப்பொழுதும் சந்தேகம், கசப்பு வந்து குடும்ப உறவைப் பாதிக்கிறதா? எத்தனை தீர்மானம் பண்ணினாலும் மாம்ச இச்சையில் திரும்பத் திரும்ப விழுகிறீர்களா? கட்டுப்படுத்த முடியாத பால் உணர்வுகள் பாதிக்கிறதா? சிந்தனைகள் தெளிவு இல்லாமல் எப்பொழுதும் குழப்பமாய் இருக்கிறதா? எதற்கெடுத்தாலும் பயப்படுகிறீர்களா? இரவு வேளைகளில் கெட்ட சொப்பனங்கள் உங்களை அலற வைக்கிறதா?

படியானால் உங்களுக்குத் தேவை விடுதலைதான். கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிற எவனும் விடுதலை அடைவான். இப்பொழுதே அவரை நோக்கிக் கூப்பிடுங்கள். உங்கள் கசப்பையும், மன்னிக்காத பாவத்தையும் அறிக்கையிடுங்கள். தேவனோடும் மனிதரோடும் ஒப்புரவாகுங்கள். முன்னோர்களின் பாவங்களையும், விக்கிரக ஆராதனையையும், மந்திர சக்திகளோடு உள்ள தொடர்பையும் அறிக்கையிடுங்கள். நாம் நமது பாவங்களை அறிக்கையிட்டால், அது பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி சுத்திகரிக்க அவர் உண்மையும் நீதியும் உள்ளவராய் இருக்கிறார்.

ஜெபிப்போமா?

இப்பொழுதே இந்த ஜெபத்தை என்னோடு சேர்ந்து உள்ளத்தின் ஆழத்தில் இருந்து சொல்லுங்கள். " அன்புள்ள ஆண்டவரே, இந்த வேளையில் என் கண்களை நீர் திறந்து விடுகிறதற்காக உமக்கு ஸ்தோத்திரம். ஆவியானவர் மூலம் சாத்தானின் தந்திரங்களை எனக்குக் காட்டிக் கொடுத்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம். அறிந்தோ, அறியாமலோ என் வாழ்க்கையில் இந்த தீய ஆவிகளுக்கு இடம் கொடுத்ததற்காக நான் வருத்தப்படுகிறேன். இயேசுவின் நாமத்தில் என்னை தயவாய் மன்னித்தருளும். கிறிஸ்துவின் இரத்தினால் என் சகல பாவங்களையும் கழுவும். நீர் என்னை மன்னிக்கிறதற்காக உமக்கு ஸ்தோத்திரம். நான் தேவனுடைய ஆலயம், கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவம்! நான் கிறிஸ்துவுக்கும், பரிசுத்த ஆவியானவருக்கும் மட்டும் சொந்தமானவன்! அவர்தான் எனக்கு உரிமையாளர். இயேசுவின் நாமத்தினால் எந்த ஆவிகளுக்கும் என் மீது, சட்டப்படி அதிகாரம் கிடையாது என்று அறிக்கையிடுகிறேன். சரீரத்தை பாதிக்கிற வியாதியின் ஆவியே, வேதனையின் ஆவியே இயேசுவின் நாமத்தினால் என் மீது உனக்கு அதிகாரம் கிடையாது. இப்போதே என் சரீரத்தை விட்டு புறப்பட்டுப் போ என்று கட்டளையிடுகிறேன். கவலையின் ஆவியும், பயத்தின் ஆவியும், அசுத்த ஆவியும், சமாதானத்தைக் குலைக்கும் பிரிவினையின் ஆவியும், சுய உணர்ச்சியின் ஆவியும், வேசித்தன ஆவியும், அடுத்தவர் மீது பொறாமை கொள்ள செய்யும் ஆவியும், குறைசொல்லும் ஆவியும் என்னைவிட்டு வெளியேறும்படி கட்டளை கொடுக்கிறேன். இந்த ஆவிகள் என்னை விட்டு இப்பொழுது விலகிப் போவதற்காக ஸ்தோத்திரம். ஆமென்.

உங்களுக்குள் நுழைந்த ஆவிகள் எது என்று கண்டுபிடித்து அவைகளுக்குக் கட்டளை கொடுங்கள். பரிசுத்த ஆவியானவர் இப்பொழுதே உங்களை விடுதலை செய்கிறார். தேவ ஊழியனாகிய

நான் இயேசுவின் நாமத்தில் உங்கள் கட்டுகளை உடைத்தெறிகிறேன். விசுவாசத்தோடு எழும்புங்கள். அந்த ஆவிகள் எந்த விதத்திலாவது உங்களை விட்டுப் புறப்பட்டுப் போக விட்டுக்கொடுங்கள். கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்!

செய்தி - 5

விடுதலை வீரர் தேவை!

...ம் வாழும் காலம் பரிசுத்த ஆவியானவரின் காலம்! தேவ ... ஆவியானவர் இக்கடைசிக் காலங்களில் பல சத்தியங்களை ... புதிதாக வெளிப்படுத்துகிறார் என்றும் கண்டோம். இப் ... பரிசுத்த ஆவியானவர் விடுதலை ஊழியத்தை மிகத் தீவி... செய்து வருகிறார். அவர் நம் மீது வந்ததின் முக்கியக் ...களில் ஒன்று நம்மை விடுதலை வீரர்களாக மாற்றத்தான். ... பரிசுத்த ஆவியானவர் ஒரு ஒப்பற்ற விடுதலை வீரர். அவர் ... வந்தாலும் அங்கு விடுதலைதான். ஆதிமுதல் அந்தம் வரை ...ிரன்கட்ட மக்களை விடுவித்த சாட்சிகளும், சாதாரண மக் ... தமது வல்லமையால் விடுதலை வீரர்களாய் மாற்றின விதங் ...வேதாகமத்தில் பளிச்சிட்டு நிற்கின்றன. இந்தச் செய்தியை ...ோடு கேளுங்கள். பரிசுத்த ஆவியானவர் உங்களில் ஆழ ...ிரியைகளைச் செய்யப் போகிறார்.

...விக்கும் அபிஷேகம்

...ர்த்தர் இயேசு, தாம் அபிஷேகம் பண்ணப்பட்ட நோக் ... ஏசாயா புத்தகத்திலிருந்து எடுத்து வாசிப்பதைக் கேளுங்கள். ...ருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவி ...தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார். இரு ...நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு ...லையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், ...ருங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக ...த்தைப் பிரசித்தப்படுத்தவும் என்னை அனுப்பினார் என்று எழுதி ...கிற இடத்தை அவர் கண்டு அதை வாசித்தார்." (லூக்.4:18,19) ...து தமக்குள் வந்த அபிஷேகத்தின் வல்லமையை அறிந்து ...திருந்தார். இந்த வசனத்தை நீங்கள் ஆழமாய் தியானித்துப் ...த்தால் ஒரு உண்மை புலப்படும். பரிசுத்த ஆவியானவரின் பிர... வேலை விடுதலை அளிப்பதுதான். அதனால்தான் கிறிஸ்து ... சென்றாலும் மக்களின் கட்டுகள் அவிழ்ந்தன. "குமாரன் உங் ... விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்." என்று ...யருக்கும் சவால் விட்டார். அவர்களுக்குத் தேவை பிசாசின் ...லிருந்து விடுதலை என்பதையும், அதைக் கொடுக்க அவர் வந் ...கிறார் என்பதையும், பகிரங்கமாய் சொல்லிக் காட்டினார். தன் ... குறித்து ஏசாயா புத்தகத்தில் எழுதின வாக்கியத்தை, ...ஷேகம் பெற்றது முதல் அறிக்கையிடத் துவங்கிவிட்டார். அவ

ரைப்போலவே அபிஷேகம் பெற்ற நீங்களும் நானும், கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை அறிக்கையிட்டால் நம்முடைய வாழ்க்கை அசாதாரண வாழ்க்கையாக மாறிவிடும். பரிசுத்த ஆவியானவரின், டுனாமிஸ் நமக்குள் இருந்து வெடித்துக் கிளம்பும். சத்துருக்களின் கட்டுகள் உடைந்துத் தெறிக்கும், மக்கள் அபார விடுதலையை அடைந்து கொள்வார்கள். கிறிஸ்துவின் மேலிருந்த அதே அபிஷேக வல்லமைதான் உங்கள் மேலும் இருக்கிறது. அவருக்குள்ளிருந்த அத்தனை வரங்களும் உங்களுக்குள் இருக்கிறது. இந்த சத்தியத்தை உணர்ந்தவர்கள் பாயும் புலிகளாய் சீறி எழும்புவார்கள். இதை உணராதவர்கள் வல்லமையான அபிஷேகத்தைப் பெற்ற பின்பும், பயந்தோடும் எலிகளாய் பதுங்கிக் கிடக்கிறார்கள். கிறிஸ்துவைக் குறித்து சொல்லப்பட்ட ஏசாயாவின் வார்த்தைகள் உங்களுக்கும் சொந்தம். உங்களுக்கு ஒரு நல்ல ஆலோசனையை நான் தருகிறேன். தினம்தோறும் ஏசாயா 61:1 முதல் 3 வரை உள்ள வசனங்களை வாய்விட்டுச் சொல்லி உங்களுக்கு உரிமை கொண்டாடிப் பெறுங்கள். உங்களுக்குள்ளிருக்கிற அபிஷேகம் இத்தனை மகிமையானது என்று வீர கோஷமிடுங்கள். உங்கள் வாழ்க்கை திட்டமாக மாறிவிடும்.

இப்பொழுதே இந்த வாக்குத்தத்தங்களை நாம் ஒருமிக்க அறிக்கையிடலாமா? *"கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என் மேல் இருக்கிறார். சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார். இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்கு கட்டவிழ்த்தலையும் கூறவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தையும், நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளையும் கூறவும், துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும், சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும் அவர் என்னை அனுப்பினார்; அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்னப்படுவார்கள்."* (ஏசா.61:1-3) இந்த வசனத்தை திரும்பத் திரும்ப நீங்கள் வாய்விட்டு அறிக்கையிடுங்கள். உங்கள் நடையில் ஒரு தனி மிடுக்கு வரும். ராஜாவின் ஜெய கம்பீரம் உங்களைத் தலை நிமிர்ந்து நிற்கச் செய்யும். உங்கள் வார்த்தைகளில் அசாதாரண வல்லமை, அதிகாரம் புரண்டு வரும். ஏன் தெரியுமா? கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் மெய்யாகவே உங்கள் மேல் வந்திருக்கிறார். அவர் தான் கிறிஸ்துவின் ஆவியானவர். அவர் உங்களுக்குள் வசிக்கும் தேவனுடைய பரிசுத்த ஆவியானவர். அப்பா, பிதாவே என்று உரி

மையோடு அழைக்கச் செய்யும் புத்திர சுவிகாரத்தின் ஆவியானவர். அவரே மகிமையின் ஆவியானவர். சுருங்கச் சொன்னால் தேவனையே உங்களுக்குள் கொண்டு வந்தவர் தேவ ஆவியானவர். இந்த ஆவியானவர் உங்கள் மேல் காரணமில்லாமல் வந்திருக்கிறாரா? இல்லை, இல்லை! எதற்காக வந்தார்? சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க உங்கள் மேல் அபிஷேகத் தைலமாய் நிறைந்து வழிகிறார். மக்களை சிறுமைப்படுத்துவது யார் என்று நினைக்கிறீர்கள்? இருதயம் நொறுங்குண்டவர்களை காயம்கட்ட, ஆவியானவர் உங்கள் மேல் இருக்கிறார். இருதயங்களை நொறுக்கி இளைக்கச் செய்தது யார்? சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையைக் கூறவும், கட்டுண்டவர்களுக்கு கட்டவிழ்த்தலைக் கூறவும், துயரப்பட்டவர்களுக்கு ஆறுதல் செய்யவும் அவர் உங்களை அபிஷேகம் பண்ணி அனுப்பியிருக்கிறார். சற்று சிந்தித்துப் பாருங்கள். மக்களை சிறைப்படுத்துவது யார்? எழும்பிப் பிரகாசிக்க வேண்டியவர்களை கட்டி வைப்பது யார்? துயரப்படுத்துவது யார்? ஒடுக்கி மிதித்துத் தள்ளுவது யார்? நெருக்கப்படுத்துவது யார்? திருடவும், கொல்லவும் அழிக்கவும் .வந்த சாத்தானும் அவனது சேனையும்தான். இந்தச் சேனைகளின் பிடியிலிருந்து மக்களைக் காப்பாற்றவும், அவர்களைப் பெருமைப்படுத்தவும், மகிமைப்படுத்தவும் ஆற்றித் தேற்றவும், விடுவிக்கவும், ஆனந்தத் தைலத்தால் நிரப்பி ஆராதிக்கும் மக்களாய் அவர்களை மாற்றவும்தான் உங்கள் மீது பரிசுத்த ஆவியானவர் வாசம் பண்ணுகிறார்.

வேதாகம பக்தரெல்லாம் விடுதலை வீரர்தான்

வேதாகமம் முழுவதும், கர்த்தர் தமது மக்களை விடுவிக்கும்படி அவ்வப்போது எழுப்பித் தந்த விடுதலை வீரரின் பட்டியலால் நிறைந்திருக்கிறது. லோத்துவின் குடும்பம் அந்நியரால் பிடிபட்ட போது, ஆபிரகாம் 318 ஆட்களுக்கு ஆயுதம் தரிப்பித்து அவர்களைத் துரத்திச் சென்று தனது சகோதரனின் குடும்பத்தை சிறையிருப்பிலிருந்து விடுதலை செய்தான்.

மோசேயும் ஒரு விடுதலை வீரன்தான். அவனது காலத்தில் மக்கள் அடிமைத்தனத்தினால் தவித்தார்கள். ஒடுக்கப்பட்டார்கள். பெருமூச்சுவிட்டு முறையிட்டார்கள். இவர்களை விடுவிக்கத்தான் கர்த்தர் மோசேயை சந்தித்தார். "எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, ஆளோட்டிகளின் நிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டு, அவர்கள் படுகிற வேதனைகளையும் அறிந்திருக்கிறேன். அவர்களை எகிப்தியரின் கைக்கு விடுதலையாக்கவும், அவர்களை அந்த தேசத்திலிருந்து நீக்கி, கானானியரும், ஏத்தியரும், எமோரியரும், பெரிசியரும், ஏவியரும், எபூசியரும் இருக்கிற

இடமாகிய பாலும் தேனும் ஓடுகிற நலமும் விசாலமுமான தேசத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கவும் இறங்கினேன். . . . நீ இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி உன்னைப் பார்வோனிடத்துக்கு அனுப்புவேன் வா என்றார்" (யாத். 3:7-10) சுருங்கச் சொன்னால் மோசேயின் ஊழியம் சத்துருக்களோடு போரிட்டு இஸ்ரவேல் மக்களை விடுதலை செய்யும் ஊழியம்தான். அவன் மீது இருந்த அபிஷேகம் ஒரு விடுவிக்கும் அபிஷேகம். இன்றும் சத்துரு மக்களைச் சிறுமைப்படுத்துகிறான். ஒடுக்குகிறான். அச்சுறுத்தி பயமுறுத்துகிறான். "இனி நீ நெருக்கப்படத் தேவையில்லை, சிறையில் வாடத் தேவையில்லை, வெளியே வா," என்று அவர்களை அறைகூவி அழைக்கவே ஆவியானவர் இன்று உங்களுக்குள் வந்திருக்கிறார். அவர் வேலையைச் செய்ய அவரோடு ஒத்துழைப்பீர்களா? இஸ்ரவேலரை அழைத்து வர மோசேயை பார்வோனிடத்திற்கு அனுப்பினார் கர்த்தர். பார்வோனுக்குச் சவால்விட்டு, என் ஜனங்களைப் போக விடு என்று கட்டளையிட்டு மக்களை விடுவிப்பதுதான் அவனது பிரதான கடமை. இன்றும் தேவ ஊழியர்களுக்கு இது ஒரு சவால். அறுவடை களத்துக்குப் போகுமுன் ஆத்துமாக்களைக் கட்டிவைத்திருக்கும் அந்தகார ஆவிகளுக்கு முன் சவால் விடவேண்டும். மருத்துவ மனைக்குப் போகும் முன், மக்களை வேதனைப்படுத்தும் வியாதிகளின் ஆவிகளிடம் சவால்விடவேண்டும். வட இந்தியாவிற்கு புறப்படும் முன்பு, வட இந்தியாவின் பலவானை முதலாவது சந்தித்து மேற்கொள்ள வேண்டும். இதற்குத்தான் பரிசுத்த ஆவியானவருடைய (டுனாமிஸ்) வல்லமை கட்டாயம் தேவை. பார்வோனை சந்தித்து மக்களை விடுவிக்காமல், பாலும் தேனும் ஓடும் தேசத்திற்கு கொண்டு போவது எப்படி? ஆவிகளின் சேனையோடு போராடாமல், ஆத்துமாக்களைக் கொள்ளையிட்டு ஆசீர்வாதங்களுக்குள் நடத்திச் செல்வது எப்படி? இன்றே விசுவாசியுங்கள். கட்டுண்டவர்களை விடுவிக்கும் அபிஷேகம் உங்கள் மேல் இருக்கிறது. சிறைப்பட்டவர்களை விடுவிக்கும் அபிஷேகம் உங்கள் மேல் இருக்கிறது. இந்த அபிஷேக வல்லமையை செயல்படுத்திப் பாருங்கள்.

இந்த டுனாமிஸ் முகாமிற்கு வருவதற்கு நான்கு நாட்களுக்கு முன்பு, மலேசியாவிலிருந்து ஒரு தாயார் என் பக்கத்து வீட்டிற்கு வந்தார்கள். அவர்கள் உடலெல்லாம் வலி. உட்கார்ந்து விட்டால் எழும்புவது கடினம். மூட்டுகளில் வலி. திடீரென்று யாரோ ஒருவர் கத்தியை எடுத்து முதுகெலும்பில் குத்துவதுபோல வேதனை. சில வேளைகளில் ஊசி எடுத்துக் குத்துவதுபோன்ற உணர்வு. அவர்கள் இரட்சிக்கப்பட்டவர்கள்தான். நல்ல விசுவாசி. கோலாலம்பூரில் ஒரு நல்ல சபையின் அங்கத்தினர். அவர்களோடு நான் பேசிக்கொண்டி

..பொழுது இது சத்துருவின் வேலை என்பதைக் கண்டுபிடித் ..ன். மறைந்திருக்கும் சத்துருவை அடையாளம் காட்டித் தருவது ..வியானவரின் அரும்பணிகளில் ஒன்று. அவைகளைக் காட்டிக்கொ ..துவிட்டு ஆவியானவர் அமைதியாய் இருக்க மாட்டார். கூடவே ..ன்று அந்த ஆவிகளை விரட்டியடித்து மக்களை விடுதலையும் ..ய்வார். இத்தகு விடுதலையின் ஊழியத்திற்கு உங்களை நீங்கள் ..ர்ப்பணிக்க வேண்டும் என்ற பாரத்தோடுதான் இந்தச் செய்தி ..யைப் பகிர்ந்து கொள்கிறேன். அந்த தாயாரின் முன்னான வாழ்க் ..யினைக் குறித்து சில கேள்விகளைக் கேட்டேன். அவர்கள் ..டும்பத்தின் பின்னணியில், சில ஜோஸ்யம் போன்ற அசுத்த ஆவி ..ளின் கிரியைகளைக் கண்டேன். நல்ல விசுவாசிகளைக் கூட சத்துரு ..ப்படி வஞ்சிக்க முடியும் என்று விளக்கினேன். பிறகு அவர்களை ..வதனைப்படுத்தின ஆவிகளுக்கு, இயேசுவின் நாமத்தில் வெளியே ..மாறு கட்டளை கொடுத்தேன். என்ன ஆச்சரியம்! சில வினாடி ..ளில் அடக்க முடியாமல் அவர்களுக்கு இருமல் வந்தது. ஏறத்தாழ ..ரைமணி நேரம் இருமிக்கொண்டே இருந்தார்கள். அவைகள் ..வளியேறின பிறகு ஒரு பெரிய விடுதலையை அனுபவித்தார்கள். ..லியும் வேதனையும் மறைந்தது. அடுத்த நாள் என்னைப் பார்த்து, ..சகோதரனே, பரிசுத்த ஆவியைப் பெற்று பல வருடம் ஆன பிற ..ம் இப்பொழுது நான் அனுபவிக்கும் மகிழ்ச்சியை அடைந்ததே ..ல்லை. இதுவரை எப்போதும் என்னை ஒரு சோக உணர்வு மூடிக் ..காண்டிருக்கும். நான் இப்போது சுகமடைந்து ஒரு புது மனுஷி ..ாக இருக்கிறேன் என்று உணர்ச்சி பொங்கக் கூறினார்கள். ..அவர்களின் மகிழ்ச்சியை இதுவரை களவாடினது யார்? தேவனு ..டைய சொத்தாகிய இந்த அருமைத் தாயாரை சோர்வடையச் ..செய்தது யார்? வெற்றிநடை போட வேண்டிய இவர்களை வேத ..னைப்படுத்தியது யார்? அசுத்த ஆவிகள் என்பதைத் தவிர வேறு ..து? இவர்களை விடுதலை செய்பவர் யார்? இன்று பிரசங்கிகள் ..ாளம். ஆனால் சிறைப்பட்டவர்களை விடுவிக்கும் அபிஷேகம் ..பெற்றவர்கள் எங்கே? உங்கள் மீது வந்த பரிசுத்த ஆவியானவர் ..ங்களை இத்தகு மகிமையான ஊழியத்திற்கு அழைக்கிறார்.

மோசே மட்டுமல்ல, யோசுவாவின் பணியும் அதுதான். இஸ் ..வேலின் சேனைக்குத் தளபதியாக நின்று கானானியரையும், ஏவி ..ரையும், எதிரிகளின் கூட்டங்களையும் சவால்விட்டு, அவர்களைத் ..ரத்தி மக்களை வாக்குத்தத்த பூமியை சுதந்தரிக்கச் செய்தான். ..ன்றும் நாம் ஆவிகளை மேற்கொள்ளாமல் ஆசீர்வாதங்களைச் ..ந்தரிக்க முடியாது. இதனால்தான் மோசேயின் மீதிருந்த அபி ..ஷகம், யோசுவாவின் மேலிருந்த அபிஷேகம் இன்று நமக்கும்

தேவை. அவர்கள் மீது இருந்த அபிஷேகத்தைவிட நம் மீது இருக்கும் அபிஷேகம் மேலான அபிஷேகம். அல்லேலூயா!

நியாயாதிபதிகள் அனைவருமே விடுதலை வீரர்கள்தான். தேவ மக்களை சத்துருக்களின் கையிலிருந்து விடுவித்து அவர்களுக்கு உதவி செய்யும் ரட்சகர்கள்தான். "**கர்த்தர் நியாயாதிபதிகளை எழும்பப் பண்ணினார்; அவர்கள் கொள்ளையிடுகிறவர்களின் கைக்கு அவர்களை நீங்கலாக்கி இரட்சித்தார்கள்.**" (நியா. 2:16) இதற்காகவே நியாயாதிபதிகள் மேல் கர்த்தருடைய ஆவியானவர் வந்து இறங்கினார். ஒத்னியேல் மேல் கர்த்தருடைய ஆவி வந்திருந்ததினால், ... யுத்தம் பண்ணப் புறப்பட்டான். கர்த்தர் ராஜாக்களை அவன் கையிலே ஒப்புக் கொடுத்தார். அதனால் தேசம் அமைதலாய் இருந்தது. கர்த்தருடைய ஆவியானவர் கிதியோன் மேல் இறங்கினார். அவன் எக்காளம் ஊதி சேனையைத் திரட்டி எதிரிகளை முறியடித்தான். இஸ்ரவேலரை விடுவித்தான். கர்த்தருடைய ஆவி எப்தாவின் மேல் இறங்கினார். அவன் அம்மோன் புத்திரருக்கு விரோதமாகப் போய் இஸ்ரவேலரை விடுவித்தான். சிம்சோன் மேலும் கர்த்தருடைய ஆவியானவர் இறங்கினார். அவனும் பெலிஸ்தர்களை முறியடித்து இஸ்ரவேலருக்கு விடுதலை வழங்கினான்.

ஆவியானவர் நம்மீது வந்ததே, நம்மைப் போர்வீரர்களாக மாற்றத்தான். மக்களுக்கு விடுதலையை அளிக்கத்தான். இன்றும் பரிசுத்த ஆவியானவர் தமது சேனையை கிதியோன் திரட்டினதுபோல திரட்டிக்கொண்டிருக்கிறார். போர் முரசும் கொட்டுகிறது. கர்த்தருக்காக ராணுவம் ஒன்று வெற்றி முழக்கத்தோடு முன்னேறுகிறது. சாத்தானின் சேனைக்கு சவால்விடும் ஆவியானவர் குரல் எங்கும் தொனிக்கிறது. இந்தப் போர் பலத்தினாலும், பராக்கிரமத்தினாலும் அல்ல! கர்த்தருடைய ஆவியினாலே ஆக வேண்டிய போர். சிம்சோனை நோக்கி கர்ஜிக்கிற பாலசிங்கம் ஒன்று எதிரிட்டு வந்தது. "**அப்பொழுது கர்த்தருடைய ஆவி அவன் மேல் பலமாய் இறங்கினதினால், அவன் தன் கையில் ஒன்றும் இல்லாதிருந்தும், அதை ஒரு ஆட்டுக்குட்டியைக் கிழித்துப்போடுகிறது போல் கிழித்துப் போட்டான்**". (நியா.14:5, 6) பரிசுத்த ஆவியின் வல்லமை ஒருவன் மேல் இருந்தால் சிங்கமும் அவனுக்கு ஆட்டுக்குட்டிதான். பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றவன் கையில் ஒன்றும் இல்லாவிட்டாலும் வீர சாகசம் புரிபவன்தான்.

"நமக்கு இருக்கும் இந்தபெலன் போதுமே
நாதன் இயேசு அனுப்புவதால் போவோமே,
பட்டயமோ புயபலமோ தேவையா?
பரம தேவ ஆவி நம்மில் இல்லையா?"

- என்று வெற்றிப் பாடல் பாடி முன் செல்லும் கூட்டம்தான் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட கூட்டம். பரிசுத்த ஆவியானவர் என் மீது வல்லமையாய் இறங்குகிற வேளையில் நான், ஒரு சிங்கம் போல சீறி எழும்பிடும் துணிவைப் பெற்றிருக்கிறேன். அது சமயம் ஒரு அசாதாரண தைரியம் என்னில் ஆட்கொள்வதை உணர்ந்திருக்கிறேன். ஆனால் இந்த அபிஷேகத்தின் வல்லமை எனக்குள் இருப்பதை மறந்தபோதெல்லாம், ஆட்டுக்குட்டியைப்போல அஞ்சி வாழ்ந்திருந்ததையும் அறிந்திருக்கிறேன். சாத்தானுக்கு நாம் ஒருமே சரிசமம் கிடையாது. நமது சொந்த வல்லமையிலும், பெலத்திலும் அவனை மேற்கொள்ளப் புறப்பட்டுப் போனால் வெற்றி நிச்சயம் அவனுக்குத்தான். ஆனால் தேவ ஆவியின் பெலத்திற்கு முன்னால் அவன் துரும்பென தூக்கியெறியப்பட வேண்டியவன்.

உங்கள் மேல் இருக்கும் தேவனுடைய வல்லமை, சாத்தானுடைய வல்லமையை விட லட்சக்கணக்கான அளவு மிகுதியானது! இதனால்தான், விக்கிள்ஸ் வொர்த் என்னும் விசுவாச வீரர், நான் வெளியே இருப்பதைவிட ஆயிரம் மடங்கு உள்ளே பெரியவன் என்று கோஷமிட்டார். பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டவன் தெய்வீக டுனாமிஸை உள்ளுக்குள் வைத்திருப்பவன் இத்தகு வல்லமையை முழு மனதோடும் நாடுங்கள். ஒரு தேவ தூதனுடைய வல்லமை உங்களுக்குள் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அப்படியானால் உங்கள் வல்லமை சாத்தானுடைய வல்லமைக்குச் சமம் என்று பொருள். ஏனென்றால் சாத்தான் ஒரு தூதனாய் இருந்தவன்தானே. ஆனால் உங்கள் மீதோ சர்வ வல்ல தேவனுடைய வல்லமை வந்திருக்கிறது. ஆகவே அவன் இப்பொழுது உங்களுக்கு ஒரு நாளும் ஈடுகொடுக்க முடியாது. சிம்சோனை சத்துருக்கள் பச்சையான ஏழு அகனி நார் புதுக் கயிறுகளால் இறுகக் கட்டிப் பார்த்தார்கள். ஆனால் அவன் மீது இருந்த தேவனுடைய வல்லமையால் அவைகள் எல்லாம் சாதாரண சணல் நூலானது. நெருப்புப் பட்டவுடனே இற்றுப் போகிறதுபோல அறுபட்டன. இதுதான் சத்துருக்களை திணறடிக்கும் தேவ வல்லமை! இந்த அபிஷேகம் உங்கள் மூலம் செயல்படும்போது, மக்கள் மீதிருக்கும் கட்டுகள் எல்லாம் அனல்பட்ட நூல்போல் இற்றுப்போகும். இத்தகு விடுதலை வீரர்களை எழுப்பத்தான் இந்நாட்களில் பரிசுத்த ஆவியானவர் ஆசையோடு செயல்படுகின்றார். வேதாகம அரசர்களும், தீர்க்கதரிசிகளும்கூட இஸ்ரவேல் மக்களைச் சத்துருக்களுக்கு விலக்கி விடுவிப்பதில் கண்ணாயிருந்தார்கள். கர்த்தருடைய அபிஷேகத் தைலம் அவர்கள் மேல் இருந்து அவர்களைப் பெலப்படுத்தின. அபிஷேக வல்லமையை அப்பியாசித்தவர்கள் யாவரும் தங்களையும்

விடுவித்துக்கொண்டு மற்றவரையும் விடுவித்தார்கள். இதை அப்பி யாசிக்க மறுத்தவர்கள் சத்துருக்களுக்கு இரையானார்கள்.

இயேசுவும் விடுதலைவீரரே!

இறுதியாக மாபெரும் விடுதலை வீரர், போர்க்களத்தில் வெற்றிநடைபோட்டு நுழைந்தார். அவர்தான் நமது இரட்சகர் கிறிஸ்து இயேசு! இந்த சுதந்திர வீரர் அபிஷேகத்தின் வல்லமை பெறும் வரை அமைதியாக இருந்தார். அந்நாட்களில் அசுத்த ஆவிகளுக்கு அவர் சவால் விடவும் முயலவில்லை. அவரது பரிசுத்த வாழ்க்கையும், வசன அறிவும் பிசாசுகளை மாறுகொள்ள போதாது என்று மௌனமாய் இருந்தார். பரிசுத்த ஆவியின் வல்லமை இல்லாமல், பிசாசுகளை விரட்டுவது பேராபத்து என்பதையும், நமக்கு மாதிரியாக முன் வைத்தார். உங்களுக்கு நினைவிருக்கிறதா என்று பாருங்கள். பவுலுக்குள்ளிருந்த வல்லமையைப் பெறாமல், பொல்லாத ஆவிகளைப் பார்த்து பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின் பேரில் ஆணையிட்ட ஸ்கேவாவின் குமாரருடைய கதி என்ன? பொல்லாத ஆவி அவர்கள் மேல் பாய்ந்து மேற்கொண்டது. நிர்வாணிகளும், காயப்பட்டவர்களுமாகி வீட்டை விட்டே ஓடிப்போனார்கள்! ஆம், அருமையானவர்களே, உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படாமல் பிசாசுகளை மேற்கொள்வது ஆபத்துதான். கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்று கரையேறினபோது, பரிசுத்த ஆவியானவர் புறாவைப் போல் ரூபம் கொண்டு அவர்மேல் இறங்கின பிறகுதான் அவர் சாத்தானை சந்திக்க வனாந்தரம் சென்றார். ஏன் மக்களை சந்திக்குமுன்பு சாத்தானைச் சந்திக்கப் புறப்பட்டார்? ஆயுதம் தரித்த பலவானை, அவனிலும் அதிக பலவானாகிய இயேசு முறியடிக்கத்தான்! தனது ஊழியம் விடுதலையின் ஊழியம் என்பதை அறிந்து கொண்டதால்தான் அவர் அப்படிச் செய்தார். தனது ஊழியத்தைக் குறித்து இரத்தினச் சுருக்கமாய் அவர் கூறுவதைக் கவனியுங்கள். *"நான் இன்றைக்கும் நாளைக்கும் பிசாசுகளைத் துரத்தி, வியாதி உள்ளவர்களைச் சொஸ்தமாக்கி, மூன்றாம் நாளில் நிறைவடைவேன்"*, என்றார். (லூக்.13:32) கிரேக்க மொழியில் தொடர்ந்து செய்யும் ஒரு செயலுக்கு, இன்றும் நாளையும் என்று வழக்கமாய் சொல்லுவார்கள். நான் பிசாசை துரத்திக்கொண்டே என் வாழ்க்கை ஓட்டத்தை முடிப்பேன் என்பதுதான் கிறிஸ்து சொன்னதின் பொருள். ஊழியத் துவக்கம் முதல் அவர் பிசாசுகளைத் துரத்திக் கொண்டே இருந்தார். இதை மாற்கு சுவிசேஷகன் தெளிவாக எழுதுகிறான். இயேசு *"கலிலேயா நாடெங்கும் அவர்களுடைய ஜெப ஆலயங்களில் அவர் பிரசங்கம் பண்ணிக்கொண்டும், பிசாசுகளைத் துரத்திக்கொண்டும் இருந்தார்."* (மாற்.1:39) அப்படியென்றால் ஜெப ஆ

யங்களில் பிரசங்கம் பண்ணுவதைப்போலவே, பிசாசுகளைத் துரத்துவதும் அவரது வாடிக்கையாய் இருந்தது. ஓய்வு நாளிலும் அதற்கு அவர் ஓய்வு கொடுக்கவில்லை. அவர் தேவாலயத்தில் போதிக்கும் பொழுதே அசுத்த ஆவிகள் மக்களை விட்டு சத்தமிட்டுப் புறப்பட்டது. இதுவரை பிசாசுகளைக் குறித்தும் அவைகள் மேல் உள்ள அதிகாரத்தைக் குறித்தும் கண்டிராத மக்கள், "எல்லோரும் ஆச்சரியப்பட்டு: இது என்ன? இந்தப் புதிய உபதேசம் எப்படிப்பட்டது? இவர் அதிகாரத்தோடே அசுத்த ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார், அவைகள் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்று தங்களுக்குள்ளே ஒருவரோடு ஒருவர் சொல்லிக் கொண்டார்கள்". (மாற். 1:27) பழைய ஏற்பாட்டுக் காலத்தில், மக்கள் சந்தித்த எதிரிகள் எல்லாம் மாம்சமும் இரத்தமும் உள்ள மனிதர்கள்தான். புதிய ஏற்பாட்டில்தான் பிசாசுகளைத் துரத்துகிற ஊழியம் முதலாவது தொடங்குகிறது. இதைத் துவக்கி வைத்தவர் விடுதலை வீரராம் ஆண்டவர் இயேசு. பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களுக்குக் கிடைக்காத இந்த ஊழியம், புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களாகிய நமக்குக் கிடைத்திருக்கிறது. இந்த பாக்கியத்தை பரிசுத்த ஆவியானவர் நமக்குக் கொடுத்திருக்கிறார். பிசாசுகளைத் துரத்தும் புதிய யுகம் கிறிஸ்துவின் ஊழியத்தில் துவங்கியது. அதனால்தான் இயேசு அதிகாரத்தோடே பிசாசுகளுக்குக் கட்டளையிடுவதைக் கண்டு மக்கள் பிரமித்தார்கள். இது என்ன? இந்த புதிய உபதேசம் எப்படிப்பட்டது என்று குழம்பி நின்றார்கள். ஆம், பழைய ஏற்பாட்டு சத்துருக்கள் அமலேக்கியரும், அம்மோனியரும், அசீரியரும் என்றால் புதிய ஏற்பாட்டுச் சத்துருக்கள் துரைத்தனங்களும், அதிகாரங்களும், அந்தகார லோகாதிபதிகளும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளும்தான். (எபே.6:12) கிறிஸ்துவும், அப்போஸ்தலரும் ஆயிரக்கணக்கான ஆவிகளை துரத்தின பின்பும், சாத்தானின் கூட்டங்கள் இன்றும் ஆயிரமாயிரமாய் பூமி முழுவதும் அலைகின்றன. இதனால்தான் அவைகளுக்குச் சவால் விடும் விடுதலை வீரர்களை, பரிசுத்த ஆவியானவர் எங்கும் எழுப்பி வருகின்றார். கிறிஸ்து இயேசு எப்பொழுதும் பிசாசுகளைத் துரத்திக்கொண்டு இருந்தபடியால், இவன் பிசாசுகளின் தலைவனாகிய பெயல்செபூல் என்றே சொல்லிவிட்டார்கள். (மத். 12:24) அப்படியானால் எத்தனை அதிகமாய் அவர் பிசாசுகளை துரத்தினார் என்பதை எண்ணிப்பாருங்கள். இன்று நாம் கர்த்தரிலும் அவரது சத்துவத்திலும் பெலப்பட வேண்டிய வேளை வந்துவிட்டது. கிறிஸ்து பலவானாகிய சாத்தானைக் கட்டிவிட்டதினால், அவனது தூதர்கள் எல்லாம் அவரைக் கண்டபொழுதே அலறித் துடித்தனர், ஊமையனையும், செவிடனையும், கொன்னைவாயனையும் அவரிடத்தில் கொண்டு வந்தபோ

தெல்லாம் செவிட்டு ஆவியை விரட்டி அடித்தார், ஊமையான ஆவியே என்று பெயர் சொல்லிக் கூப்பிட்டு துரத்தியடித்தார். அவர் எப்பொழுதும் மாம்சத்தோடும் ரத்தத்தோடும் போர் புரியாமல் ஆவிகளோடு போராடி மக்களை விடுவித்தார். இத்தகு ஊழியத்தை நாமும் வாஞ்சிக்க வேண்டாமா? "இயேசு ராஜா, நீர் ஜெப ஆலயங்களில் பிரசங்கம் பண்ணிக் கொண்டும் பிசாசுகளைத் துரத்திக் கொண்டும் இருந்தீரே. உம்மைப்போல என்னையும் மாற்றும், உம்மீது இருந்த விடுதலையின் அபிஷேகம் என் மூலமும் பாயட்டும்" என்று வாஞ்சித்துக் கதற வேண்டாமா?

பன்னிருவரும் விடுதலை வீரரே!

கிறிஸ்து விரும்பி அழைத்த யாவருக்கும்; பிசாசுகளின் மீது வல்லமையைத் தாராளமாய்த் தந்தருளினார். "**அவர் தமது பன்னிரண்டு சீஷரையும் வரவழைத்து, சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கிக்கவும், பிணியாளிகளைச் சொஸ்தமாக்கவும் அவர்களை அனுப்பினார்**". (லூக்.9:1,2) அழைத்த அப்போஸ்தலர் அனைவருக்குமே அசுத்த ஆவிகள் மீது அதிகாரமும் வல்லமையும் கொடுத்தார். பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்னமே அப்போஸ்தலர்கள் பிசாசுகளை துரத்தும் வல்லமையும் அதிகாரமும் பெற்றிருந்தார்களானால், பெந்தெகொஸ்தேயின் நிறைவான அபிஷேகத்தைப் பெற்ற நாம் ஏன் அனுபவிக்கக்கூடாது? கர்த்தர் அழைத்த ஒருவருக்கும் இந்த வல்லமையை அருளாமல் அனுப்பவே மாட்டார். பிசாசுகளைத் துரத்தி மக்களை விடுவிக்கப் பயப்படுவோர், ஊழியம் செய்வதை நிறுத்தி உலக அலுவலில் ஈடுபட்டால் நல்லது என்று கூட நான் நினைக்கிறேன். ஒரு சிலர், ஊழியர்களுக்கு மட்டும் இது சொந்தம் என்று சொல்லிச் சொல்லியே நமது வல்லமையையும், அதிகாரத்தையும் வீணடித்து வருகிறோம். அபிஷேகம் பெற்ற அனைவரும் இந்த வல்லமையை பயன்படுத்தும் நாள் இதுதான்.

எழுபது பேரும் விடுதலை வீரர்களே!

தமது பன்னிரு சீஷர்களும் இத்தகு அதிகாரத்தோடும், வல்லமையோடும் ஊழியம் செய்த பிறகும் அவர் உள்ளம் திருப்தியடையவில்லை. அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம் என்று அவர் மனம் அங்கலாய்த்தது. பின்னும் வேறே எழுபது பேரை நியமித்து 35 குழுக்களாய் அறுவடைக் களத்துக்கு அனுப்பி வைத்தார். அந்த 70 பேரும், "சந்தோஷம் பொங்குதே, சந்தோஷம் பொங்குதே, சந்தோஷம் என்னில் பொங்குதே" என்று பாடிக் கொண்டே

..ருமை இரட்சகரிடம் ஓடி வந்ததைச் சற்றுக் கற்பனை செய்து ..ருங்கள். அவர்களது மகிழ்ச்சிக்குக் காரணம் என்ன? "ஆண்ட ..ரே, உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படி ..றதே" என்றார்களே அதுதான். ஆம், பிசாசுகள் மீது வல்லமையும், ..திகாரமும் நம்மிலிருந்து வெளிப்படும்போதெல்லாம் நம் உள்ளம் ..வசமடைகிறது. கிறிஸ்துவின் உள்ளமும் மகிழ்ச்சியில் திளைக்கி ..து. ஆனாலும், அவர்களைப் பார்த்து ஆவிகள் உங்களுக்கு கீழ்ப் ..டிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் ..லோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என் ..ார். வேறு விதத்தில் சொன்னால் பரலோகத்தில் யாருடைய பெய ..ல்லாம் எழுதப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கு பிசாசுகள் சரணம் ..பாட்டு கீழ்ப்படியும் என்று சொல்லிவிட்டார். அந்த 70 பேரையும் ..யேசு பார்த்து, "இதோ, சர்ப்பங்களையும், தேள்களையும் மிதிக்கவும், ..த்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு ..திகாரம் கொடுக்கிறேன். ஒன்றும் உங்களைச் சேதப்படுத்த மாட் ..து" என்று சொன்னார். (லூக் 10:17-20)இதே அதிகாரமும், வல் ..மையும்தான் உங்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. 'வல்லமை ..ரும் தேவா' என்று வானத்தை அண்ணாந்து பார்ப்பதை விட்டு, ..ல்லமை தந்தீர் தேவா' என்று துதி பாடி ஊழியக்களத்தில் உற் ..சாகமாய் இறங்குங்கள்.

..வ்வொரு விசுவாசியும் விடுதலை வீரரே!

பன்னிரு அப்போஸ்தலரும், எழுபது சீஷரும் மாத்திரம் பிசா ..களைத் துரத்தினால் போதாது. எண்ணற்ற ஆவிகள் ஏழை மக் ..களை ஏய்த்து வருகின்றன. ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் ..இவைகளைத் துரத்தி, மக்களை விடுவிக்க வேண்டும் எனும் பாரம் ..கிறிஸ்துவின் உள்ளத்தைப் பிழிந்தது. கல்வாரி மலையில் துரைத்த ..னங்களையும், அதிகாரங்களையும் உரிந்து கொண்டார். மரணத்துக்கு ..அதிபதியைத் தமது மரணத்தினாலே அழித்தார். வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரத்தையும் சாத்தான் கையிலிருந்து பிடுங்கி ..டுத்தார். அதைத் தமது சரீராகிய சபைக்கு அப்படியே வழங்கி ..விட்டார். கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள ஒவ்வொரு அவயவமும் அசுத்த ஆவிகளுக்கு மேலாக, அதிகாரத்தையும், வல்லமையையு.. ..செலுத்த முடியும். அப்பொழுதுதான் உலகத்தை நம்மால் சுவிசே.. ..மயமாக்க முடியும். இதனால்தான் கிறிஸ்து தமது இறுதிக் கட்ட.. ..ளையைக் கொடுக்கும்போதே ஒவ்வொரு விசுவாசியும் பிசாசுகளை.. துரத்துவார்கள் என்று நம்பிக்கையோடு சொல்லிவிட்டுப் போனா.. "விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்.. ..னாலே பிசாசுகளைத் துரத்துவார்கள், நவமான பாஷைகளைப் பே..

வார்கள்" என்று ஆணித்தரமாய் சொன்னார். விசுவாசியின் அடையாளம் என்றால் நாம் பல காரியங்களை எண்ணுகிறோம். அபிஷேகத்தின் அடையாளம் அந்நிய பாஷைமட்டும்தான் என்பதுபோல நினைக்கிறோம். ஆனால் விசுவாசியின் முதலாவது அடையாளம் என்ன தெரியுமா? இயேசுவின் நாமத்தின் மேலுள்ள அதிகாரத்தாலும் வல்லமையாலும் பிசாசுகளைத் துரத்துவதுதான்.

அப்போஸ்தல நடபடிகளில் ஒரே ஒருவனைத்தான் சுவிசேஷகன் என்று வேதம் சொல்லுகிறது. அவன்தான் பிலிப்பு. இந்தப் பிலிப்பு சமாரியாவில் கிறிஸ்துவைப் பிரசங்கித்தான். அங்கே *"அநேகரிலிருந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களைவிட்டுப் புறப்பட்டது."* (அப். 8:6, 7) ஆனால் சுவிசேஷ ஊழியம் குறித்து வானளாவப் பேசுவோர் பிசாசுகளின்மேல் அதிகாரம் எடுத்து துரத்துவதைக் குறித்து ஏனோ மவுனம் சாதிக்கிறார்கள்! கர்த்தருடைய அபிஷேகம், சுவிசேஷத்தைச் சொல்ல மட்டுமல்ல. சிறைப்பட்டவர்களை விடுதலையாக்கவும்தான் என்பதை இனி நாம் மறந்துவிடக்கூடாது. சுவிசேஷத்தின் ஆசீர்வாதங்களில் இதுவும் ஒன்று. கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின், சம்பூர்ணமான ஆசீர்வாதத்தோடே பணிக்களம் செல்லும் ஊழியர்கள் எழும்பாட்டார்களா? (ரோம.15:30) அப்போஸ்தலர் நடபடிகளில் மிஷனரிகள் சென்ற விடமெல்லாம் அசுத்த ஆவிகள் அலறி ஓடின. மாயவித்தைக்காரர்களுக்குள் இருந்த ஆவிகள் மண்டியிட்டன. பரிசுத்த ஆவியினால் நிறைந்த மிஷனரி பவுல், எலிமா என்னும் மாயவித்தைக்காரனை தண்டித்து அவன் பிடியிலிருந்து நாட்டுத் தலைவனைத் தப்புவித்தான். (அப்.13:8-12) மக்கெதோனியா தேசத்தில் அடியெடுத்து வைத்த நாட்களில், குறிசொல்லும் ஆவியை அதட்டி ஒரு பெண்ணை விடுவித்தான். விக்கிரக ஆராதனை நிறைந்த எபேசுப் பட்டணத்தில், பவுலின் சரீரத்திலிருந்து உருமால்களையும், கச்சைகளையும் கொண்டு வந்து போட பொல்லாத ஆவிகள் மக்களை விட்டுப் புறப்பட்டன. (அப்.19:11, 12) இன்று, நாம் பெற்ற பரிசுத்த ஆவியின் வல்லமை மாறிவிட்டதா? மங்கிவிட்டதா? நாள் ஒன்று வருகிறது, நமது சரீரத்தின் மேல் பட்ட கைக்குட்டைகளில்கூட தேவனுடைய வல்லமை வழிந்தோடி பிசாசுகளை விரட்டப்போகிறது. இதுதான் பரிசுத்த ஆவி வரும்பொழுது நாம் பெற்ற வல்லமை. (டுனாமிஸ்)

தேவை! தேவை!!

இத்தரு விடுதலை வீரர் இன்று ஏராளம் தேவை. சாத்தானின் பிடியிலிருந்து மக்களை பிரித்தெடுக்கும் அறிவுடை ஆட்கள் தேவை பிசாசுகளைத் துரத்தி இயேசுவின் நாமத்தை திக்கெட்டும் பரப்பு

தீரர்கள் தேவை! இதற்காக கிறிஸ்து உங்களை அழைக்கிறார். இப்பொழுதே முழங்காற்படியிட்டு உங்களை அர்ப்பணம் செய்வீர்களா? உங்கள் மீது கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் வைராக்கிய வாஞ்சையோடு அசைவாடிக் கொண்டிருக்கிறார். சிறுமைப்பட்டவர்களுக்கு விடுதலையின் நற்செய்தியைச் சொல்ல முன் வருவீர்களா? சிறைப்பட்டவர்களுக்கு விடுதலை வழங்குவீர்களா? கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலைக் கூறுவீர்களா? அடிமைத்தனத்தினால் தவிக்கும் தேவ மக்களை மீட்டெடுப்பதற்கு மோசேயைப்போல மூண்டெழுந்து புறப்படுவீர்களா? அந்தோ? விடுதலை வீரர் இன்றி மக்கள் கூட்டம் மனம்பதறி தவிக்கிறது. ஒடுங்கிப் போய் வாடுகிறது. விடுதலை வீரர் இல்லாததால், பிசாசின் கூட்டங்கள் மிக வேகமாய் முன்னேறி மக்களை அழிக்கப் பார்க்கிறது. வியாதிகளும், வேதனைகளும் மக்களை வாரிச் செல்லுகிறது. சத்துரு தேசத்தில் வெள்ளம்போல் பாய்ந்து வருகிறான். கொலைகார ஆவிகளும், தீவிரவாதங்களும் தலைவிரித்து ஆடுகின்றன.

யாரை நான் அனுப்புவேன்? யார் என் காரியமாய்ப் போவான்?என்று யேகோவா ஏக்கப் பெருமூச்சு விடுகின்றார். தமது மோசேக்களை அவர் உள்ளம் நாடுகிறது. மோசேயே வா, உன்னை பார்வோனிடத்திற்கு அனுப்புவேன் வா என்று அழைக்கிறார். தேவ மக்களை அழைத்து வர உன்னை அன்போடே அழைக்கிறார். இனியும் மக்களின் வேதனையை அவர் கண்டு சும்மா இருக்கப் போவதில்லை. பயப்படாமல் முன் வருவீர்களா? நான் எம்மாத்திரம் என்று மோசேயைப் போல முனகிக் கொண்டு நிற்க வேண்டிய காலம் அல்ல இது. பேசத் தெரியாத திக்குவாயன், மந்த நாவும் உள்ளவன் என்று இயலாமையை எண்ணி காலத்தை வீணாக்காதீர்கள். கிதியோனைக் கர்த்தர் அழைத்தார். அவன் பயந்து நடுங்கி நின்ற வேளையில் விடுதலைப் பணியை அவன் மீது வைத்தார். எல்லாரிலும் சிறியவன் என்று ஏங்கினான். பிதாக்கள் சொன்ன அற்புதங்கள் எல்லாம் எங்கே? என்று கதறினான். அவனைப் பார்த்து கர்த்தர் நான் உன்னோடே கூட இருப்பேன், ஒரே மனுஷனை முறியடிப்பதுபோல நீ மீதியானியரை முறியடிப்பாய் என்று அழைத்தார். தேவக்குமாரன் கிறிஸ்து வந்தார். பலவானைக் கட்டி ஆயிரங்களைக் கொள்ளையிட்டார். தமக்கிருந்த அதே வல்லமையையும், அதிகாரத்தையும் உங்களுக்கு கிருபையாய் அருளியிருக்கிறார். அப்போஸ்தலர்களுக்குள்ளும் எழுபது பேருக்குள்ளும் இருந்த அதே வல்லமை உங்களுக்குள்ளும் இருக்கிறது. எழும்பி வாருங்கள், வீரத் தீர்மானம் எடுங்கள், சிறைப்பட்டவர்களை விடுதலையாக்குங்கள், பார்வோன் கையிலிருந்து மக்களை விடுவித்து, கானானின் ஆசீர்வாதத்திற்குக் கொண்டு வாருங்கள். நீங்கள் எந்த உலக வேலை

செய்தாலும் பரவாயில்லை. உங்களுக்குள்ளிருக்கும் அபிஷேகத்தோடு எங்கு சென்றாலும் மக்களை விடுதலை செய்யுங்கள். எஸ்தர் ராணியைப் போல வீரமாய் எழுந்து முன் வாருங்கள். பரிசுத்த ஆவியானவர் உங்களை இன்று முதல் விடுதலை வீரராய் மாற்றப் போகிறார். பரிசுத்த ஆவியின் அபிஷேகம் உங்கள் மீது அபரிமிதமாய் பொழியப்படுவதாக!. கர்த்தருடைய ஆவியானவரின் டுனாமிஸ் உங்களில் வெள்ளமென ஊற்றெடுத்துப் பாய்வதாக! ஆமென்.

மனம் திறந்து உங்களோடு...

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக கர்த்தரோடு நடந்து, அவரது பணிசெய்யும் பாக்கியம் பெற்றவன் நான். பெலவீன பாத்திரமான என்னைப் பரிவோடு, அவர் கடந்த ஆண்டுகளில் பயன்படுத்தப் பிரியம் கொண்டார்.

ஆரம்ப காலத்தில் பலநூறுகளை இரட்சிப்புக்குள் வழிநடத்த என்னை உபயோகப்படுத்திய உன்னத தேவன், தமக்காக ஒரு **சேனையைப்** பயிற்றுவித்து, அவர்களை கர்த்தருக்கு பயன்படும் பாத்திரங்களாக்க வேண்டும் எனும் தரிசனத்தை தந்து வருகின்றார். மிகுந்த உபவாசத்தோடும், கண்ணீரோடும் இந்த தரிசனத்தை எப்படி நிறைவேற்றுவதென்று ஜெபித்து வந்தேன்.

பல்லாயிரங்களுக்குப் பேசுவதை விட ஆங்காங்கே தேவனுடைய பரிபூரண நிறைவுக்கு ஏங்கித் தவிக்கும் சிறுமந்தைகளை ஊக்குவித்து, ஆவிக்குரிய போராட்டத்தில் வெற்றி பெறுவது எப்படி? தேவனோடு நெருங்கி வாழ்ந்து, ஜெபத்திலும், தொழுகையிலும் ஊறிப் போவது எப்படி? ஆவியானவரின் வல்லமையோடும், வரங்களோடும் செயல்படுவது எப்படி? கிறிஸ்துவுக்குள், நமக்குள்ள சுதந்திரத்தின் ஐசுவரியத்தை அறிந்து, அதிகாரத்தோடு வாழ்வது எப்படி? நற்செய்திப் பணியில் சிறப்பது எப்படி? என்பது போன்ற பல பாடங்களை இளைய தலைமுறைத் தலைவர்களுக்குக் கற்றுத்தரவும், பயிற்சியளிக்கவும் தேவனுடைய திட்டவட்டமான கட்டளையைப் பெற்றேன். இத்தகைய பணி மிகவும் அவசியமும், அவசரமும் ஆனது என்று உணர்த்தப்பட்டேன்.

அடுத்த தலைமுறைத் தலைவர்களை எழுப்பி, அவர்களது அழைப்பினை உணர்த்தி, பல்வகை ஊழியங்களில் வளரச் செய்வதற்காக ஏற்கெனவே தேவன் திருவுளம் பற்றியபடி, ஒரு சில சகோதரர்களைக் கலந்து ஜெபித்தேன். தனி மனித ஊழியம் வேதத்திற்கு புறம்பானது என்பதையும் சிந்தித்தேன். குழுவாய் செயல்படத் தீர்மானித்து என்னை அர்ப்பணித்தேன். இதன் விளைவாக **"பெராக்கா தீர்க்கதரிசன ஊழியங்கள்" (Berachah Prophetic Ministries)** எனும் குழு பிறந்தது. வெற்றி வாழ்க்கைக்கு அவசியமான பாடங்களை 'பெராக்கா' எனும் சொல் நினைவுபடுத்துவதை

2 நாளாகமம் 20 ஆம் அத்தியாயத்தில் காண முடிகிறது.

'பெராக்கா தீர்க்கதரிசன ஊழியங்கள்' எல்லா சபைகளுக்கும், ஊழியங்களுக்கும் தொண்டு செய்யும் ஒரு குழு ஆகும். தலைமைத்துவப் பயிற்சி, ஊழியர் பயிற்சி முகாம்களை நடத்தி அந்தந்த சபைகளுக்கும், சங்கங்களுக்கும் தூண்களை உருவாக்குவதே இதன் நோக்கம் **அனுதினமும் ஒரு நிமிடமாவது இப்பணிக்காக ஜெபிக்க மறவாதீர்கள்.**

ஒவ்வொரு விசுவாசிக்கும் உலக சுவிசேஷத்தில் பங்குண்டு. விசுவாசிகளை சுவிசேஷ ஊழியத்தில் பயிற்சி அளிக்கவும், கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்கதாக பூரண புருஷராக்கவுமே கர்த்தர் அப்போஸ்தலரையும், தீர்க்கதரிசிகளையும், சுவிசேஷகரையும், மேய்ப்பரையும் போதகரையும் ஏற்படுத்தியிருக்கிறார். விசுவாசிகளை போர் வீரராகப் பாவித்து, அவர்களை வழிநடத்தும் தளபதிகள்தான் முழுநேர ஊழியர்கள்.

ஊழிய வாஞ்சையுள்ள விசுவாசிகளுக்கு ஆவியின் வரங்களோடும் வல்லமைகளோடும் ஊழியம் செய்ய ஊக்குவிக்கும் நோக்கத்தோடு **"பத்து நாள் பயிற்சி வகுப்புகள்" (Short Term Intensive Course)** நடத்தி வருகிறோம். கடந்த ஏழு ஆண்டுகளில் அப்படிப்பட்ட பதினைந்துக்கும் மேற்பட்ட பயிற்சி வகுப்புகளை நடத்தியுள்ளோம். பல ஆயிரங்கள் பயிற்சி எடுத்துள்ளனர். பங்கு பெற்றோரிடமிருந்து வரும் சாட்சிக் கடிதங்கள் ஏராளம். இப்பயிற்சி வகுப்பில் பங்கு பெற்றபின், தங்கள் ஊழிய அழைப்பைக் கண்டுபிடித்ததாக எழுதுவோரும், வரங்கள் அனல் மூட்டப்பட்டு, அற்புதங்களும், அடையாளங்களும் நடைபெறுகின்றன என்று எழுதுவோரும் அநேகர். இப்பத்து நாட்களில் பங்கு பெற்றோர் ஆங்காங்கே தொழுகை வீரராகவும், ஜெபவீரராகவும் திகழுகின்றனர். அசுத்த ஆவிகளை அடையாளம் கண்டு, அவைகளிலிருந்து விடுதலை பெற்று மற்றவர்களையும் விடுவிக்கின்றனர்.

பல நல்ல அலுவலர்கள் பத்து நாட்கள் விடுமுறை எடுத்து, தம் சொந்த செலவில் வந்து பயிற்சி எடுக்க அலை மோதுகின்றனர். இது தேவனுடைய கிருபையே.

இந்தியா என்றாலே கிராமங்கள்தான். இந்தக் கிராமங்களில்

...பாரத்தோடும் தீரத்தோடும் கிறிஸ்துவின் சேவை செய்யும் முழு நேர ஊழியர்களை அடிக்கடி ஊக்குவித்து, அவர்களுக்குள்ளிருக்கும் ஆவிக்குரிய வரங்களை அனல் மூட்டி எழுப்ப வேண்டுமென்பது எங்கள் நீண்ட நாள் பாரம். இதன்படி ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள கிராம ஊழியர்களுக்கும் "கிராம **ஊழியர் பயிற்சி முகாம்" (Village Workers' Seminar)** நடத்துகிறோம். இது குறித்து விளக்கம் வேண்டுவோர் எங்களுக்கு எழுதுங்கள்.

வட இந்தியாவின் மாபெரும் தேவையைக் குறித்த பாரம் எந்நாளும் எங்களை விட்டுப் பிரிந்ததே இல்லை. ஒரு சில மிஷனரிகள் தென்னிந்தியாவிலிருந்து புறப்பட்டுச் சென்று, வட இந்தியரை கிறிஸ்துவுக்கு நாயப்படுத்துவது இயலாது என்பதை வட இந்தியாவில் மிஷனரியாக ... ஆண்டுகள் இருந்து திட்டமாய் தெரிந்து கொண்டேன். ஆகவே வட இந்தியாவில் இப்படிப்பட்ட பயிற்சி முகாம்களை நடத்தி அங்குள்ள வட இந்தியரை வல்லமையுள்ள தேவ ஊழியராய் மாற்றுவதும் எங்கள் பாரம். ... இந்தியாவில் பணிபுரியும் மிஷனரிகளுக்கும் பயிற்சி வகுப்புகளை நடத்த விரும்புகிறோம். **இவைகளுக்கெல்லாம் உங்கள் ஜெபம் எங்களுக்கு அவசியம் தேவை.**

பத்து நாள் பயிற்சிக்கு ஆயத்தமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் 3 நாள் **ஜெய ஜீவிய பயிற்சி முகாம்களை (Victorious Life Seminars)** நடத்தி அந்தந்த மாவட்டத்திலுள்ள விசுவாசிகளை அனல் மூட்டி எழுப்புகிறோம். ஆவிக்குரிய போராட்டத்தில் வெற்றி, ஆராதனை, பரிசுத்த வாழ்க்கை, சபை வளர்ச்சி, கூட்டு ஊழியம், ஆவிக்குரிய வரங்கள், கனிகள், வகைப்பட்ட ஊழிய வரங்கள் போன்ற முக்கிய பாடங்களை வலியுறுத்துகிறோம். தேர்ச்சி பெற்ற முதிர்ந்த ஊழியருடைய உதவிகளையும் நாங்கள் நாடுகிறோம்.

நம் தேசத்திலுள்ள தலைவர்களுக்காகவும், அதிகாரிகளுக்காகவும், மற்றெல்லா மனுஷருக்காகவும் மன்றாடி ஜெபிக்க வேண்டியது நமது கடமை. இதற்காக மாவட்டத் தலைநகர்களில், **'தேசத்துக்காக உபவாசித்து ஜெபிக்க ஒரு நாள்'** கூட்டங்களை ஏற்பாடு செய்து, மன்றாட்டு ஜெபத்தைக் குறித்துப் போதித்து, அப்பியாசிக்கச் செய்கிறோம்.

என்றுமில்லாத அளவிற்கு இன்று ஊழியங்களில் பலத்த போராட்டங்களை தேவ ஊழியர்கள் சந்திக்கிறார்கள். விசுவாசிகள்

சோதனைக்குட் படுகிறார்கள். இவைகளுக்காக உபவாசித்து ஜெபிக்கும்படி, **மூன்று நாள் உபவாச முகாம்களை** தேனி, இயேசு பண்ணையில் நடத்தி வருகிறோம. ஆயிரக்கணக்கான விசுவாசிகளும், ஊழியர்களும் இதில் கலந்து கொள்கின்றனர். ஆசீர்வாதம் பெறுகின்றனர்.

நமது தேசத்தின் எதிர்காலம் இளையதலைமுறை வாலிபர்களையும், வாலிபப்பிள்ளைகளையும் சார்ந்தது. தேவப் பணிக்கெனத் தங்களை முழுதும் அர்ப்பணிக்கிற வாலிபர்களைக் கொண்டு தேவன், இந்த முழு உலகையே அசைக்க முடியும். இதற்காகவே ஆண்டிற்கு ஒரு முறை **வாலிபர் முகாம்** நடத்துகிறோம்.

இக் கடைசிக் காலங்களில் சபையை கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தப்படுத்தும் இத் தீர்க்கதரிசன ஊழியத்தை நீங்கள் முடிந்த அளவு பயன்படுத்திக் கொள்ளுங்கள். **உங்கள் ஜெபங்களையும், ஒத்துழைப்புகளையும் அதிகம் நாடுகிறோம்.**

கர்த்தர் வெளிப்படுத்தும் எல்லாச் சத்தியங்களையும், புத்தகங்களிலும், ஒலி, ஒளி ***(Audio & Video)*** நாடாக்களிலும் வெளியிடுகிறோம். வாங்கி பயனடையுங்கள்.

கூடுதல் விபரங்கள் தேவையானால் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். மாவட்டம் தோறும் பொறுப்பேற்று இருக்கும் ஒருங்கிணைப்பாளர்களையும் உங்களுக்கு அறிமுகப்படுத்துவோம். நாங்கள் நடத்தும் பயிற்சி வகுப்புகளில் பங்கு பெற விண்ணப்பப் படிவத்திற்கும் எழுதுங்கள்.

மாதம் ஒரு புத்தகமாவது எழுதி, எனது உள்ளத்தெழும் தேவ உணர்வுகளை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். இதற்காகவே ஜெபித்து எனது புத்தக ஊழியத்தை ஊக்குவியுங்கள.. மொத்தத்தில் பெராக்கா தீர்க்கதரிசன ஊழியங்களை கட்டி எழுப்பவல்ல 'ஜெபக் கற்களாய்' திகழுங்கள்.

உங்கள் சிறையிருப்பு மாறும்! சீர் பெற்றுயர்வீர்கள் !

கர்த்தர் உங்களைக் கனப்படுத்துவாராக!

அன்பரின் பணியில்

V. எசேக்கியா பிரான்சிஸ்

டுனாமிஸ்

- அசாதாரன வாழ்க்கை உங்களுக்கு வேண்டுமா?
- நீங்கள் விடுதலை வீரராய் எழும்ப வேண்டுமா?
- அற்புத அடையாள ஊழியத்தை விரும்புகிறீர்களா?
- உங்களுக்குள்ளிருக்கும் வல்லமையை அறிய விருப்பமா?

ஆழ்ந்து படியுங்கள்!
அசாதாரண எல்லைக்குள் நுழையுங்கள்!!
அற்புத அடையாள ஊழியராகுங்கள்!!!

ஆசிரியரைக் குறித்து....

இப்புத்தக ஆசிரியர் சகோ. எசேக்கியா பிரான்சிஸ் ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு மேல் தேவனோடு நடந்து ஆழ்ந்த அனுபவமும், அபரிமிதமான அபிஷேகமும் நிறைந்த தீர்க்கதரிசியாய்த் திகழ்கிறார். இவர் பெராக்கா தீர்க்கதரிசன ஊழியங்களின் ஸ்தாபகரும், தலைவரும் ஆவார். இவரது செய்திகளும் புத்தகங்களும் இந்தியாவிலும் பல நாடுகளிலும் சபைகள் நடுவில் மாபெரும் எழுப்புதலை ஏற்படுத்தி வருகிறது. இவர் மேலிருக்கும் தீர்க்கதரிசன அபிஷேகம், இவரது செய்திகளிலும், புத்தகங்களிலும், பாடல்களிலும், ஜெபங்களிலும் வெளிப்படுகிறது. இவர் மூலம் தங்களுக்குள்ளிருக்கும் தீர்க்கதரிசன அபிஷேகத்தைக் கண்டுபிடித்து திக்கெட்டும், தேவனுக்காய் பற்றி எரிபவர் பல்லோர்.